உமா வாசகம்

எட்டாம் புத்தகம்—பொதுப் பகுதி

[மூன்றும் பாரத்துக்கு உரியது.]

Form III

1951௵ ஜூன்மீ வெளியிடப்பட்ட புதிய பாடத்திட்டத்தின்படி
திருத்தி அமைக்கப்பெற்றது.

CONNEMARA PUBLIC LIBRARY
31 MAY 1956
MADRAS

த. சே. உமாபதி, M.A., L.T.,
தலைமையாசிரியர்,
ஸி. அப்துல் ஹக்கீம் இந்து முஸ்லிம் உயர்நிலைப் பள்ளி, சென்னை.

2220

உமாதேவன் கம்பெனி
16, செம்புதாஸ் தெரு, சென்னை—1

பதிப்புரிமை] 1951 [விலை ரூ. 1-2-0

First Edition : 1950
Reprinted : 1951.
Revised Edition : November, 1951.

RB 501/4-51

முகவுரை

உமா வாசகம் என்னும் பெயருடன் வெளிப்போதரும் நூல் வரிசையில் இஃது எட்டாம் புத்தகம். 1951-ஆம் ஆண்டில் அரசியலார் வெளியிட்ட புதிய பாடத்திட்டத்தையொட்டி இது திருத்தி அமைக்கப்பெற்றுள்ளது.

சிறுவர் சிறுமியரின் மனோநிலையையும், அவர்தம் தமிழறிவின் எல்லையையும் மனத்திற்கொண்டு இஃது இயற்றப் பெற்றுள்ளது. இதன்கண் இடம் பெற்றுள்ள ஒவ்வொரு பாடமும் பாடத்திட்டத்தின் நோக்கமாகிய மொழிப்பயிற்சியை அடிப்படையாகக் கொண்டு இயன்றிருத்தல் குறிப்பிடத் தக்கது. ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் தரப்பட்டுள்ள பயிற்சியே இதற்குச் சான்றாகும். அன்றியும், மொழி வளர்ச்சிக்குரிய புதிய சொற்களும், சொற்றொடர்களும் ஒவ்வொரு பாடத்திலும் ஏற்ற அளவில் இடம் பெற்றுள்ளன.

மாணவர் மாணவிகட்கு அகராதி உபயோகிக்கும் பழக்கம் உண்டாதற்பொருட்டு ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் அருஞ்சொற்களைக் குறித்து, அவற்றுக்குப் புத்தகத்தின் இறுதியில் தரப்பட்டுள்ள அகராதியைப் பார்த்துப் பொருள் எழுதும்படி அமைக்கப்பெற்றுள்ள பயிற்சி குறிப்பிடத்தக்கதாம். செய்யுட்பகுதிக்குக் குறிப்புரைகள் தரப்பட்டுள்ளன.

தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமியர் இதனைப் படித்துப் பயனுறுதற்கு ஆவன செய்யுமாறு ஆசிரிய அறிஞர்களை வேண்டுகிறோம்.

54746
26C211

சென்னை,
9-11-51.

பதிப்பாளர்

THE JUPITER PRESS LTD., MADRAS—1.

CONNEMARA PUBLIC LIBRARY
31 MAY 1956
MADRAS

உள்ளுறை

உரை நடைப் பகுதி

எண்	பொருள்	பக்கம்
1.	நமது குடியாட்சித் தலைவர்	1
2.	ஔவையார் அருந்திறன்	9
3.	பல்லவர் காலத்து ஓவியங்கள்	14
4.	சிலப்பதிகாரமும் மணிமேகலையும்	20
5.	நாவிகர் ஜேம்ஸ் குக்	25
6.	தமிழுக்குத் தொண்டாற்றிய பிறநாட்டறிஞர்—I	32
7.	” ” ” II	37
8.	கலிங்கப் போர்	42
9.	செந்தமிழ்ப் புலவரும் ஷாஜஹானும்	49
10.	திருமதி விஜயலட்சுமி அம்மையார்	54
11.	பண்டைப் புலவர்களுடைய பண்பாடுகள்	61
12.	கோழிப் பண்ணை	66
13.	திருக்குறளும் திருவள்ளுவரும்	71
14.	மங்கோ பார்க்	75
15.	கன்னனும் கண்ணனும்	83
16.	ஐக்கிய நாட்டுச் சபை	90
17.	ஒரு விநோதப் பாட்டு	96
18.	எங்கள் இன்பச் செலவு	102
19.	சாதுரியப் பேச்சு	108
20.	திரைப் படம்	113

செய்யுட்பகுதி

I. கடவுள் வணக்கம் 118

II. நீதிப் பகுதி:

1. நாலடியார் 119
2. நன்னெறி 121
3. ஏலாதி 122
4. நீதி நெறி விளக்கம் 123
5. அறநெறிச் சாரம் 124

31 MAY 1958

III. வருணனை :

1. விண்மீன் 124
2. மருதம் 125
3. செற்கதிர்த் தோற்றம் 125
4. கார் 125

IV. கதைப் பகுதி :

1. கண்ணன்—என் தோழன் 126
2. கயவன் கல்வியருமை அறிந்தது 129
3. நளவெண்பா 136

V. பல்சுவைப் பகுதி :

1. சிட்டுக்கவி 139
2. மீனாட்சியம்மை குறம் 139
3. திருவரங்கக் கலம்பகம் 140
4. சதகம் 140
5. பிள்ளைத்தமிழ்—தாலப்பருவம் 140

VI. தனிப் பாடல்கள் :

1. சுதந்தரச் சிறப்பு 141
2. தாய் தமர்கள் இல்லாததால் 141
3. பொன் 141
4. தமிழ்த் தெய்வம் 142
5. குரங்கு வந்த காரணம் 142

VII. திருக்குறள் : 143

செய்யுட்பகுதி—குறிப்புரை

அகராதி

CONNEMARA PUBLIC LIBRARY
31 MAY 1956
MADRAS

CONNEMARA PUBLIC LIBRARY
31 MAY 1956
MADRAS

CONNEMARA PUBLIC LIBRARY
MADRAS

உமா வாசகம்

(எட்டாம் புத்தகம்)

1. நமது குடியாட்சித் தலைவர்

1. நமது நாடு 1947-ஆம் ஆண்டு, ஆகஸ்டு திங்கள், 15-ஆம் நாள் நள்ளிரவில் அயலார் ஆட்சியினின்று விடுதலை அடைந்தது. அது 1950-ஆம் ஆண்டு, ஜனவரித் திங்கள், 26-ஆம் நாள் முதல் குடியரசு நாடாய்த் திகழ்ந்து வருகின்றது. அன்று பழைய அரசியல் அமைப்புக் கைவிடப்பட்டுப் புதிய அரசியல் திட்டம் நடைமுறைக்கு வந்தது. ஆதலால், டாக்டர் இராசேந்திரப் பிரசாது அவர்கள், ஜனநாயக ஆட்சி முறைப்படி, நம் நாட்டு 'ஜனாதிபதி'யாய் அன்று பதவி ஏற்றார். இப்பதவி ஈடும் எடுப்புமற்றது. முப்பது கோடிக்கு மேற்பட்ட மக்கள் தொகையை உடைய மாபெருநாட்டின் தலைமைப் பதவி எத்துணைப் பெருமை வாய்ந்தது என்பதனை எடுத்துக் கூற வேண்டுவதின்று. இத்தகைய ஒப்பற்ற பதவி அவரைத் தேடி வந்தடைந்தமைக்கு உரிய காரணங்களை இராசேந்திரரின் வாழ்க்கை வரலாற்றினின்றும் கண்டறிவதே இப்பாடத்தின் நோக்கமாகும் :

2. காவிரியொத்த கங்கையாறு பாயும் வாய்ப்பினை உடையது பிகார் மாகாணம். மகதப் பேரரசுக்குத் தாயகமாய் விளங்கிய இம்மாகாணத்தில் 'விஹாரங்கள்' எனப் பெயரிய பல பௌத்தாலயங்களும் பௌத்த மடங்களும் இருந்தமையால், இது பிகார் (விஹார்) என்னும் பெயர் பெற்றது. பீகார் மாகாணத்தின் வடபாகத்தில் உள்ள சாரன் என்னும் ஜில்லாவில், புகழ்மிக்க நிலக்கிழார் மகாதேவ சகாயருக்கு 1884-ஆம் ஆண்டு, டிசம்பர்த் திங்கள், மூன்றும் நாள், ஐந்தாம் புதல்வராய் இராசேந்திரர் பிறந்தார்.

3. தமது ஒன்பதாம் ஆண்டில் பள்ளிக்கு அனுப்பப்பட்ட இவர், எல்லா வகுப்புக்களிலும் முதல்வராய் விளங்கியதோடன்றி, 1902-ஆம் ஆண்டில் கல்கத்தாப் பல்கலைக் கழக நுழைவுத் தேர்விலும் முதலிடம் பெற்றார் எனின், இவர்தம் நுண்ணறிவினை எடுத்துக்காட்ட வேறென்ன சான்று வேண்டும்? நுழைவுத் தேர்வில் இவர் பெற்ற வெற்றியைப் பாராட்டி எழுதிய 'இந்துஸ்தான் ரெவ்யூ' என்னும் திங்கள் வெளியீடு, 'பம்பாய் மாகாணத்தவரான சந்தாவிர்க்கர், இலாகூர்க் காங்கிரஸ் மகா சபையில் தலைமை தாங்கியிருந்த போது நீதிபதி பதவி கிடைக்கப்பெற்றதுபோல, வாலிபரான இராசேந்திரரும் அரும்பெரும்பதவிகளை வகிப்பர் என்பது நிச்சயம்,' என்று கூறியது. அந்தச் சோதிடம் முற்றிலும் உண்மை என்பதை இராசேந்திரர் வரலாற்றின் மூலம் நாம் அறிகின்றோம்.

4. இராசேந்திரர் கல்கத்தாப் பிரஸிடென்ஸிக் கல்லூரியில் சேர்ந்து, எப். ஏ., பி. ஏ. தேர்வுகளிலும் முதல்வராகவே தேறினார்; 1907ல் எம். ஏ. தேர்விலும், 1910ல் சட்டத் தேர்விலும் வெற்றி கண்டார். எம். ஏ., பி. எல். என்னும் பட்டங்களுடன் இவர்தம் கல்லூரிப் படிப்பு முடிவெய்தியது. ஆயினும், இவர் அதனோடு அமையாது, அறிவு வளர்ச்சியில் ஆர்வம் கொண்டு, மாணவர் சங்கங்களைத் தோற்றுவிப்பதும், வாதங்கள் நிகழ்த்தக் கூட்டங்கள் கூட்டுவதும், அவற்றில் பங்கெடுத்துக்கொள்வதும், பிறரைப் பங்கு கொள்ளச் செய்வதும் தமது பொழுது போக்காகக் கொண்டார்.

5. இராசேந்திரர் தொடக்கத்தில் கல்கத்தா உயர்நீதி மன்றத்தில் நீதிவாதத் தொழிலை மேற்கொண்டார். அக்காலத்தில் நாட்டுப்பற்றின் உறைவிடமாய் விளங்கிய கோபால கிருஷ்ண கோகலே என்பார், தாம் தோற்றுவித்த இந்திய ஊழியர் சங்கத்திற்சேர்ந்து நாட்டுக்கு நற்பணியாற்றுமாறு இராசேந்திரருக்கு வேண்டுகோள் விடுத்தார். இளைஞர் இராசேந்திரரும் அதற்கு இணங்கினார். ஆயினும், இவர் தம் தந்தையாருக்குப் பிறகு தமது முன்னேற்றத்திற் கண்ணுங்கருத்துமாயிருந்த தம் தமையனாரான மகேந்திரப் பிரசாது அவர்களுக்கு ஒரு கடிதம்

எழுதி, இந்திய ஊழியர் சங்கத்திற்சேர்ந்து தாய் நாட்டுக்குப் பணியாற்றத் தமக்கு உத்தரவளிக்க வேண்டினர். தமக்குப் பிறகு தமது குடும்பப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளக் கடமைப் பட்டவர் இராசேந்திரரே என்று கருதிய மகேந்திரர், தம் தம்பி யார் விருப்பத்திற்கு இணங்க மறுத்துவிட்டார். இது சம்பந்த மாக இவ்விருவரும் ஒருவருக்கொருவர் எழுதிய கடிதங்களைப் படித்தாற்முன் இராசேந்திரரின் ஒழுக்க மேன்மையும், நன்றியுடைமையும் ஆகிய சீரிய பண்புகளை நாம் அறிந்து இன்புறக்கூடும்.

6. இராசேந்திரர் கல்கத்தாவில் நீதி வாதத் தொழில் புரிந்துகொண்டே எம். எல். தேர்வுக்குச் சென்று, அதிலும் முதலிடம் பெற்ருர். 1916ல், தமது பிறப்பிடமாகிய பீகார் மாகாணத்தில், உயர்நீதி மன்றம் புதிதாக நிறுவப்பட்டபோது, இராசேந்திரர் அங்குச் சென்று தம் தொழிலை நடத்தத் தொடங் கினர்; தம் தொழிலில் வெகு விரைவில் பெரும்புகழுக்கு உரியவரானர். புகழ் வளர்ச்சியோடு வருவாய் வளர்ச்சியும் போட்டியிடத் தொடங்கியது. இவர் தம் தொழிலைத் தொடர்ந்து நடத்தியிருப்பின், செல்வம் மலை போலக் குவிந்திருக்கும். ஆனல், தமக்கென வாழாப் பிறர்க்குரியாள-ராகிய இவர்தம் நாட்டுப்பற்று மிக்க நன்மனத்தில், ஆறிடும் மேடும் மடுவும் போலாம் செல்வத்தைப்பற்றிய எண்ணம் எட்டுணையும் இடம் பெறவில்லை. ஆகலின், 1919ல் காந்தியடி களின் சத்தியாக்கிரக இயக்கம் தோன்றிய போது, இவர் தம் தொழிலை உதறிவிட்டு, ஒத்துழையா இயக்கத்தில் ஈடுபட்டார்.

7. ஒத்துழையா இயக்கத்தின் பலனகப் பீகாரில் தேசீயப் பல்கலைக் கழகம் தோன்றியது. மாகாணத்தின் எல்லாப் பகுதிகளினின்றும் மாணவர் வந்து குழுமித் தேசிய முறையில் போதனையும் பயிற்சியும் பெற்றனர். அப்பல்கலைக் கழகத்தின் துணைத் தலைவர் (வைஸ் சான்ஸலர்) பதவி இராசேந்திரருக்கே கிடைத்தது. ஆயினும், 1930ல் சுதந்தரப் போர் வலுத்தபோது ஆங்கில அரசினர் அப்பல்கலைக் கழகத்தை மூடிவிட்டனர்.

8. பால பத்தனை துருவனுக்கும், காவியகர்த்தாவான வான்மீகருக்கும், ஜனக மன்னருக்கும் இருப்பிடமாய் இருந்த

தென்று அறிஞர் கூறும் சண்பக ஆரணியம் என்பது, இக்காலத்தில் சம்பரான் ஜில்லா என வழங்கப்படுகிறது. அந்த ஜில்லாவில் வாழ்ந்த உழவுத் தொழிலாளருக்கு ஆங்கில அரசினரால் இழைக்கப்பட்ட அநீதிகுறித்து ஆராய்வதற்குக் காந்தியடிகள் சென்ற போதுதான் இராசேந்திரர் அடிகளாரோடு பல நாட்கள் இருந்து, அவருடைய அரிய பண்புகளைக் கண்டு, அவற்றில் ஈடுபட்டு, அவருடைய அணுக்கத் தொண்டராய் மாறினார்.

9. பாபு இராசேந்திரர் நீதிவாதத் தொழிலைக் கைவிட்ட போது பெரிய வழக்கொன்று அரைகுறையாயிருந்தது. அந்த வழக்கு 1928ல் இங்கிலாந்தில் 'பிரிவி கௌன்சில்' முன்னர் விசாரணைக்கு வந்தது. அதற்காக அங்குச் சென்ற இராசேந்திரர் ஐரோப்பிய நாடுகளிற் சுற்றுப்பிரயாணம் செய்த போது சிறந்த ஞானியராய் விளங்கிய ரோமேன் ரோலந்தைக் கண்டு உரையாடும் வாய்ப்பினைப் பெற்றார்; பிறகு சர்வதேச இளைஞர் மகாநாட்டின் அழைப்பிற்கிணங்கி, அங்குச் சென்றிருந்தார்; பின்னர் வியன்னு நகரில் உலகில் போரே நடைபெறக்கூடாது என்னும் கொள்கையை வற்புறுத்துவதற்காகத் தோற்றுவிக்கப்பட்ட சர்வதேச மகாநாட்டுக்குச் சென்று, அங்கு அஹிம்ஸையின் பெருமையையும் அன்பின் சிறப்பினையும் வற்புறுத்திச் சிறந்ததொரு சொற்பொழிவாற்றினார். ஆனால், குருதியாற்றில் குளிப்பதையே கொள்கையாகக் கொண்டிருந்த சிலர், இவர்மீது சினங்கொண்டு, இவரை நையப்புடைத்தனர். இவர் உடல் குணம் அடைய ஆறு வாரங்களாயினவெனில், அக்கொடியவர் இவருக்கிழைத்த துன்பத்தின் அளவை நாம் ஒருவாறு ஊகிக்கலாமன்றோ?

10. இராசேந்திரர் இங்கிலாந்து முதலிய அயல்நாடுகளிற பிரயாணம் செய்த போது, மேனாட்டு உடைகளை முற்றிலும் புறக்கணித்து, இந்திய உடையையே அணிந்துகொண்டார். அதுகுறித்து இவரை இழித்தும், பரிகசித்தும் பேசியவர் பலர் உண்டு. ஆனால், இவர் அதனை எட்டுணையும் பொருட்படுத்தாமல், தம்மைப் பரிகசித்தவர்கட்குக் கதரின் உற்பத்தி, பெருமை, நோக்கம் முதலியவற்றைப்பற்றிச் சொற்பொழி-

வாற்றி, அவர்கள் சிறுமையையும், தமது பெருமையையும் விளக்கி வந்தார்.

11. காந்தியடிகள் 1930-ஆம் ஆண்டில் உப்புச் சத்தியாக்கிரகம் தொடங்கிய போது இராசேந்திரர் அதிற்கலந்து கொண்டதற்காகச் சிறைப்பட்டு, விடுதலை பெற்றார்; ஆயினும், மீண்டும் 1932ல் ஒரு முறையும், 1933ல் மற்றொரு முறையும் சிறை வைக்கப்பட்டார். ஆனால், மறு ஆண்டின் தொடக்கத்தில் பீகாரில் இயற்கை அன்னை சீறி எழுந்தது போலத் தோன்றிய பூகம்பம் காரணமாக இவர் விடுதலை செய்யப்பெற்றார். அப்பூகம்பத்தால் அல்லலுற்ற அனைவர்க்கும் இவர் ஆற்றிய அரும்பணி, அளவிட்டுக் கூறற்பாலதன்று. பூகம்ப நிவாரண நிதிக்குத் தாம் காசநோயால் உடல்நலம் அற்றிருந்த காலத்தில் ஒன்பது திங்களில் முப்பது லட்சம் ரூபாய் சேர்த்தாரென்பதிலிருந்தே இவருடைய அருந்தொண்டினை ஓரளவு நாம அறிதல் கூடும்.

12. இராசேந்திரர் 1934-ஆம் ஆண்டில் பம்பாய் நகரில் நடைபெற்ற காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்திற்குத் தலைமை வகித்து நிகழ்த்திய தலைமை உரை, இந்திய மக்களாற் பெரிதும் புகழப்பட்டது. 1935-ஆம் ஆண்டில் ஆக்கப்பட்ட இந்திய அரசியல் சட்டப்படி, 1937ல் இந்திய மாகாணங்களில் மந்திரி சபைகள் அமைக்கப்பட்டன. அப்போது பீகார் மாகாணத்தின் மந்திரி சபையை அமைக்கவும், முதலமைச்சராயிருக்கவும் இராசேந்திரரை அம்மாகாண மக்கள் வேண்டினார்கள். ஆனால், இவர் பதவியில் பற்றுடையவரல்லராகலின், அதனை ஏற்க மறுத்துவிட்டார். இங்ஙனம் முதலமைச்சர் பதவியை உதறித் தள்ளிய உத்தமரை என்னென்று புகழ்வது!

13. இராசேந்திரரின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழா, 1944ல் இவர் சிறையிலிருந்த போது கொண்டாடப்பட்டது. அப்போது ஒரு கூட்டத்தில், "டாக்டர் இராசேந்திரரே இந்தியாவின் முதல் கனவான்; அவரே மூத்த கனவான்," என்று கூறிச் சக்கரவர்த்தி இராசகோபாலாசாரியார் இவருக்குப் புகழ் மாலை சூட்டியுள்ளார் எனின், இவர் பெருமைக்கு வேறு

என்ன சான்று வேண்டும்? "என்னுடைய துணைவர்களுள் சிறந்த ஒருவர் பாபு இராசேந்திரர்." என்று காந்தியடிகளே இவர்தம் உயரிய பண்புக்கு நற்சாட்சி பகர்ந்துள்ளார்.

14. இந்தியா சுதந்தரம் அடைவதற்கு முன் இந்திய இடைக்கால அரசியலை ஏற்று நடத்திய பேரறிஞர்களுள் ஒருவர் இராசேந்திரர். இவர் உணவு மந்திரியாராய் இருந்து நாட்டைப்பற்றியிருந்த பஞ்சப்பேயை விரட்டுவதற்காக மேற்கொண்ட முறைகளை அறியாதவர் இலர். அன்றியும், அரசியல் நிர்ணய சபையின் தலைமைப் பதவியும் இவருக்கே அளிக்கப்பட்டதன்றி, நமது நாடு குடியரசாய்த் திகழத் தொடங்கிய அன்று இந்தியக் குடியரசின் முதல் ஜனாதிபதியாய் விளங்கும் பெருமையும் இவருக்கே உரியதாயிற்று.

15. இராசேந்திரரின் சீரிய பண்புகள் அனைத்தையும் கூறி விளக்கல் இயலாத செயல். இவருடைய வாழ்க்கை வரலாற்றை எழுதிய ஒருவர், "பொது வாழ்க்கையில் வாதப் பிரதிவாதங்கள் அடிக்கடி நிகழும்; வாதப் பிரதிவாதங்களில் சிலர் சூடு கொள்வர்; கோபம் காட்டுவர்; மரியாதையும் தவறுவர். பாபு இராசேந்திரர் அங்ஙனம் செய்யார். அவர் மிக்க நிதான புருஷர்; மரியாதையிற்சிறிதும் தவறாதவர்; எதிரியின் வாதத்தைப் பொறுமையுடன் கேட்பவர்; கேட்டறிந்த பின்பு கண்ணியமாகப் பதில் அளிப்பவர். படபடப்போ, சிடுசிடுப்போ அவரிடம் தலை காட்டாது." என்று கூறுகின்றார்.

16. காந்தியடிகளை உலகம் மகாத்துமா என வழுத்தியது; மாளவியாவைத் 'தருமாத்துமா' எனப் புகழ்ந்தது; இராசேந்திரரைச் 'சாந்தாத்துமா' என வழங்கி வருகிறது.

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே!"

"அன்பர்பணி செய்யஎன்னை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே!"

என்னும் திருவாக்குக்களுக்கு இலக்காய் விளங்குகின்றவர்

இன்றைய இந்திய ஜனாதிபதி என்று கூறுவது மிகையாகாது. இவர் தலைமையில் நம் நாடு மேலும் பெருமையும் முன்னேற்றமுமடைவது திண்ணமாகும்.

வாழ்க நம் குடியாட்சித் தலைவர்!

பயிற்சி:

I. விடை எழுதுக :—

1. 'பீகார்' என்னும் பெயர்க் காரணம் யாது?
2. இராசேந்திரரின் கல்விப் பருவத்தை 10 வாக்கியங்களில் எழுதுக.
3. தம்மைக் கோபால கிருஷ்ண கோகலே இந்திய ஊழியர் சங்கத்தில் சேர அழைத்த போது இராசேந்திரர் செய்தது யாது? இவர் தமையனுருக்குக் கடிதம் எழுதியது எதைக் காட்டுகிறது?
4. இராசேந்திரரைத் 'தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர்' என்பது எப்படிப் பொருந்தும்? விவரிக்க.
5. ஐரோப்பா நாட்டுச் சுற்றுப் பிரயாணத்தின்போது இராசேந்திரர் அடைந்த இன்னல்கள் யாவை? அவற்றிற்குக் காரணம் யாது?
6. இராசேந்திரரின் அரசியல் வாழ்க்கையைக் குறித்து ஒரு பக்கத்திற்கு மிகாமல் கட்டுரை வரைக.
7. இராசேந்திரரிடம் காணப்படும் அருங்குணங்களைக் கூறுக.

II. எதிர்ச்சொற்கள் எழுதுக :—

முடிவு, வளர்ச்சி, ஆர்வம், தோற்றுவி, ஒத்துழையா, சுதந்தரம், அணுக்கம், அநீதி, ஈடுபட்டு, அரைகுறையாக, வாய்ப்பு, அவிம்சை, தைய

III. வாக்கியங்களில் அமைக்க :—

கூறிப்போந்து, முடிவெய்தியது, பங்குகொள்ளச்செய், பொழுது போக்கு, துணைத்தலைவர், காரியகர்த்தா, அணுக்கத் தொண்டர், அரைகுறையாக, தைய

IV. சொல்லியுள்ளபடி செய்க :—

1. டாக்டர் இராசேந்திரப் பிரசாது அவர்கள் ஜனநாயக ஆட்சி முறைப்படி நம் நாட்டு ஜனாதிபதியாய்ப் பதவி ஏற்றார். (செயப்பாட்டுவினை வாக்கியமாக மாற்றுக.)

2. தேசியப் பல்கலைக் கழகத்தின் துணைத் தலைவர் பதவி இராசேந்திரருக்குக் கொடுக்கப்பட்டது. (செய்வினை வாக்கியமாக மாற்றுக.)

3. பீகார் மாகாணத்தின் வடபாகத்தில் உள்ள 'சாரன்' என்னும் ஜில்லாவில் புகழ் மிக்க நிலக்கிழார் மகாதேவ சகாயருக்கு 1884-ஆம் ஆண்டு, டிசம்பர்த் திங்கள், மூன்றாம் நாள், ஐந்தாம் புதல்வராய் இராசேந்திரர் பிறந்தார். (நான்கு தனி வாக்கியங்களாக எழுதுக.)

V. அகராதி பார்த்துப் பொருள் கூறுக :—

நிலக்கிழார், போந்து, உறைவிடம், வருவாய், காவியம், அரிய, அணுக்கம், உறை, குருதி, நைய, புடைத்தனர், இழித்து, வழுத்து, சூடு கொள்.

2. ஔவையார் அருந்திறன்

1. சங்க காலத்துப் புலவர்களைப்பற்றியோ, பிற்காலத்துப் புலவர்களைப்பற்றியோ, தக்க சான்றுகளுடன் கூடிய வரலாற்றுக் குறிப்புக்கள் நம் நாட்டில் இல்லை. வரலாற்றுக் குறிப்புக்களைக் குறித்து வைக்கும் வழக்கம் நம்மவர்களுக்கு இல்லாமையே இக்குறைபாட்டுக்குக் காரணமாகும். எனினும், சங்க காலத்துப் புலவர் சிலருடைய வாழ்க்கை நிகழ்ச்சிகள், சங்க காலச் செய்யுட்களில் விரவிக்கிடக்கின்றன. அவ்வகைச் சான்றினைக் கொண்டு, புலவர் சிலருடைய வாழ்க்கைக் குறிப்புக்களை ஓரளவு நாம் அறிய முடிகிறது. இவ்வாறே புலவர்களைக் குறித்துச் செவி வழிச் செய்தியாகக் கூறப்படும் சில கதைகளும் நம் நாட்டில் வழங்கப்பட்டு வருகின்றன. அவை படிக்கச் சுவை பயப்பனவாயும், புலவர்களின் ஆழ்ந்த அறிவையும் நெஞ்சுரத்தையும் விளக்குவனவாயும் காணப்படுகின்றன. அவற்றுள் இரண்டொரு குறிப்புக்களை ஈங்கு அறிவோம்:

2. ஔவையார் மிகச் சிறந்த புலமைபெற்ற பெண்மணியார் ஆவர். இவரது இயற்பெயர் இன்னதென்பதை அறியக் கூடவில்லை. இவர், பிறர்க்கு அறிவுரைகளை இனிய முறையில் எடுத்துரைத்து வந்தமை காரணமாக, '**தாயார்**' என்னும் பொருள்பட, மக்கள் இவரை ஔவையார் என வழங்கியிருத்தல் வேண்டும். இவர் பாணர் மரபைச் சேர்ந்தவர்; '**பாணர்**' என்பவர் இசை வாணர். பாண் மரபைச்சேர்ந்த பாட்டில் வல்ல ஆடவர் '**பாணர்**' என்றும், பாட்டில் வல்ல பெண்டிர் '**பாடினியர்**' என்றும், ஆடலும் பாடலும் வல்ல பெண்டிர் '**விறலியர்**' என்றும் வழங்கப்பட்டனர். இம்மரபைச்சேர்ந்த ஔவையார் தம் வாழ்க்கையின் பெரும்பகுதியைக் கொங்கு நாட்டைச்சேர்ந்த தகடூரில் **அதியமான் நெடுமான் அஞ்சியோடு** கழித்தார். இவர் மிகச் சிறந்த புலவராதலின், முடியுடை மூவேந்தராலும் பாராட்டப்பட்டார்.

3. ஔவையார் ஒரு முறை பாண்டியன் அவைக்குச் சென்றபோது, அவைப்புலவர் அனைவரும் முகவாட்டத்துடன்

தம் எதிரில் வரக் கண்டார். ஔவையாரைக் கண்ட அப்புலவர்களின் முகங்கள் மேலும் வாட்டமடைந்தன. இதைக்கண்ட ஔவையார், அவர்களுடைய முகவாட்டத்துக்குக் காரணம் யாதெனக் கேட்டார். புலவர்கள், "நாளை மாலைக்குள் நான்கு கோடிக் கவிகள் பாடி வரவேண்டுமென்பது பாண்டியரின் கட்டளை. மனித முயற்சியால் ஆகாத இச்செயலை எவ்வாறு நிறைவேற்றுவதென்பதறியாத நாங்கள், வருந்தாமல் என் செய்வோம்? பாண்டியரின் கட்டளையை நிறைவேற்ருமலிருப்பது புலவர் உலகின் பெருமைக்கு இழுக்கு அன்ருே? அதனை எண்ணியே வருந்துகின்ருேம்," என்று கூறினூர்கள்.

4. இதைக் கேட்ட ஔவையார், "புலவர் பெருமக்களே, நீங்கள் வருந்தாதீர்கள்; நாளை நான் பாண்டியரின் அவையில் அதனை நிறைவேற்றிவிடுகின்றேன். நீவிர் அச்சமொழிந்து மகிழ்ச்சியுடன் செல்லுங்கள்," என்று கூறி அகன்ருர்.

5. புலவர் அனைவரும், ஔவையார் கூறியதை நம்ப மாட்டாமல், 'நாளை அரசவையில் என்ன நிகழுமோ!' என்னும் அச்சம் கொண்டவராய்த் தத்தம் இல்லம் ஏகினர்.

6. மறுநாள் அவை கூடியதும், பாண்டியன் புலவர்களை விளித்துக் கவிதையைப்பற்றிக் கேட்டான். அவ்வமயம் அவையில் நுழைந்த ஔவைப் பெருமாட்டியார் மன்னனை நோக்கி, "வேந்தரே, இதோ புலவர்கள் சார்பில் நான் பாடுகின்றேன்; கேளும்," என்று கூறி,

"மதியாதார் முற்றம் மதித்தொருகாற் சென்று
மிதியாமை கோடி பெறும்.

"உண்ணீர்உண் ணீரென்று உபசரியார் தம்மனையில்
உண்ணுமை கோடி பெறும்.

"கோடி கொடுத்தும் குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுதல் கோடி பெறும்.

"கோடானு கோடி கொடுப்பினும் தன்னுடைநாக்
கோடாமை கோடி பெறும்."

என்று பாடி முடித்தார். இந்த நான்கு கோடிக் கவிகளைக்

கேட்ட புலவர்கள், மகிழ்ச்சிப் பெருக்கடைந்து, ஔவை-யாரைப் பாராட்டினார்கள். பாண்டியன் ஔவையாரின் திற-னறிந்து பெருவியப்புக்கொண்டு, அவரை நன்கு பேணிப் பரிசில்கள் அளித்து மகிழ்வித்தான்.

7. ஔவையார் ஒரு சமயம் சோழ மன்னனைக் காணச் சென்றிருந்த போது, இவருடைய ஆற்றலை அறியாத புலவர் ஒருவர், "அம்மையீர், வள்ளுவர் 1330 குறட்பாக்களில் அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றனையும் விளக்கிவிட்டார். இத்தகைய ஆற்றல் பெரும்புலமைச்செல்வியர் எனப் பாராட்-டப்பெறும் உமக்கு உண்டோ?" என்று கேட்டார். அப்புலவ-ருடைய உள்ளக்கருத்தினை உணர்ந்த ஔவையார், "வள்ளுவ-னார் வெளிப்படையாகக் கூறாது விட்ட வீடு பேற்றினையும் வெளிப்படையாக விளக்கி, அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய நான்கனையும் ஒரே கவிதையில் அமைத்துப் பாடலாமே! புலவரே, அஃது உம்மால் ஆகாதோ? அங்ஙனமாயின், கேளும்; பாடுகின்றேன்," என்று கூறி,

"ஈதல்அறம்; தீவினைவிட் டீட்டல்பொருள்; எஞ்ஞான்றும்
காத லிருவர் கருத்தொருமித்—தாதரவு
பட்டதே இன்பம்; பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு."

என்னும் செய்யுளைப் பாடினார். புலவர் வெட்கி, ஔவை யாரை வணங்கிப் போற்றினர்.

8. ஔவையார் ஒரு சமயம் பாண்டிய மரபைச்சேர்ந்த குறுநில மன்னன் ஒருவனுடைய திருமணத்துக்குச் சென்றார். திருமணம் முடிந்த பின்னர் விருந்து நடந்தது. திருமணங் காணப் பெருங்கூட்டம் வந்திருந்தபடியால், விருந்து மண்டபத்-திற்குள் புக இயலாதபடி நெருக்கம் மிகுந்திருந்தது. விரை-வில் விருந்தருந்திவிட்டுத் திரும்ப விரும்பிய ஔவையார், விருந்து மண்டபத்திற்புக முயன்ற போது, கூட்டத்தினரால் நெருக்குண்டு, தளர்ந்து, வருந்தி, ஓரிடத்தில் அமர்ந்து விட்டார்.

9. கூட்டத்தினர் ஓரளவு கலைந்து சென்ற பிறகு ஔவையார் பேசாமல் ஓரிடத்தில் அமர்ந்திருக்கக் கண்ட ஒருவர், "நீவிர் சோறுண்டீரோ?" என்று கேட்ட போது,

> "வண்டமிழைத் தேர்ந்த வழுதி திருமணத்து
> உண்ட பெருக்கம் உரைக்கக்கேள் :—அண்டி
> நெருக்குண்டேன் ; தள்ளுண்டேன் ; நீள்பசியி னாலே
> சுருக்குண்டேன் ; சோறுண்டி லேன்."

என்னும் செய்யுளைக் கூறி, தாம் கூட்டத்தில் நெருக்குண்டு பட்ட துன்பத்தையும் பசித்துக்கிடந்ததையும் ஔவையார் நயம்பட எடுத்துக் காட்டினார்.

10. ஔவையார் அதியமான் என்பவனுக்காகத் தொண்டைமான் என்பவனிடம் தூது சென்ற வரலாறும், காரி என்னும் வள்ளலிடம் அதியமானின் ஆற்றலை விரித்துரைத்த வரலாறும், இன்ன பிறவும் சங்கச் செய்யுட்களிற் காணக்கிடத்தல் போலவே, ஔவையாரைப்பற்றி வழங்கும் செவிவழிச் செய்திகள் மிகப் பலவாம். அவற்றை நீங்கள் மேல் வகுப்புக்களிற் படித்தறியலாம்.

பயிற்சி :

I. விடை எழுதுக :—

1. பழங்காலப் புலவர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை நாம் அறிவதெங்ஙனம் ?
2. 'ஔவையார்' என்னும் பெயருக்குக் காரணம் யாது ?
3. ஔவையாரின் குடிப்பெருமை குறித்து நாம் அறிவது யாது?
4. ஔவையார் புலவர்களின் வாட்டத்தை எவ்வாறு தீர்த்தார் ?
5. ஔவையார் பாடிய 'நான்கு கோடிக் கவிகள்' எவை ?
6. ஔவையார் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கனையும் அமைத்துப் பாடிய ஒரே பாட்டு எது ?
7. திருமண விருந்து குறித்து ஔவையார் தம் நிலைமையை எங்ஙனம் விளக்கினார் ?

II. எதிர்ச்சொற்கள் எழுதுக :—

தக்க, பெருமை, அச்சம், அறம், வெளிப்படை, குறுநிலம்

III. வாக்கியங்களில் அமைக்க :—

குறைபாடு, விரவி, செவிவழிச்செய்தி, சுவை பயப்பன, நெஞ்சுரம், முகவாட்டம்

IV. அகராதி பார்த்துப் பொருள் எழுதுக :—

சான்று, நிகழ்ச்சி, விரவி, செவிவழிச்செய்தி, பாணர், விறலியர், முற்றம், கோடாமை, எஞ்ஞான்றும், வீடு, வழுதி

3. பல்லவர் காலத்து ஓவியங்கள்

1. ஓவியம், சிற்பம், இசை, நடனம் ஆகிய நுண்கலைகளே ஒரு நாட்டின் நாகரிகத்தை நிர்ணயிக்கும் அளவுகோல்களாம். இக்கலைகளிற் பண்டு முதல் சிறப்புற்று விளங்கிய நாடுகள் சிலவே. அவற்றுள் நமது நாடும் ஒன்று. இந்தியா நெடுங் காலமாகவே நுண்கலைகளில் தலைசிறந்த நாடு என்பதற்கு நமது நாட்டின் பல பாகங்களிலும் காணக் கிடக்கும் பண்டைய ஓவியங்களும், சிற்பங்களும், புதை பொருள் ஆராய்ச்சிப் பொருள்களும் சான்று பகர்கின்றன. இவற்றுள் இன்றளவும் காண்பவர் மனத்தைக் கவரும் வண்ணம் தோற்றமளிக்கும் சித்தன்ன வாசல் ஓவியங்களைப்பற்றிக் கவனிப்போம்:

2. 'சித்தன்னவாசல்' என்னும் இடம் புதுக்கோட்டை-யில் உள்ளது. திருச்சிராப்பள்ளிக்குத் தெற்கே ஏறத்தாழ இருபது கல் தொலைவில், நாரத்தாமலைப் புகைவண்டி நிலையத் தின் அருகில் இஃது அமைந்திருக்கிறது. இங்குள்ள குடைவரைக் கோவில், ஒரு சிறிய மலைமீது, ஓவியக்கலையின் உறைவிடமாய் அமைந்துள்ளது. இக்கோவில் மிகச் சாதாரண முறையில்

முன் மண்டபமும் அதன் பின்னே சதுர வடிவில் உள்ள ஓர் உள்ளறையும் கொண்டதாய் மலையில் குடையப்பட்டிருக்கிறது. இவற்றுள் முன் மண்டபத்தின் தூண்களும், கூரையுமே ஓவியங்களுக்கு உறைவிடமாய் விளங்குகின்றன.

3. முன் மண்டபத்தில் கூரை முழுவதையும் ஒரே ஓவியம் அணி செய்கின்றது. அழகு பெற அமைக்கப்பெற்ற ஒரு கமல வாவியின் தோற்றத்தை உடையது அது. அவ்வாவியில் கமல மலர்களும் இலைகளும் காணப்படுகின்றன. மலர்கட்கும் இலைகட்கும் இடையில் யானைகளும் எருமைகளும அன்னங்களும் மீன்களும் காட்சி அளிக்கின்றன. ஒரு புறம் சமணர் இருவர் கமல மலர்களைக் கைகளில் வைத்திருப்பது போலத் தீட்டப்பட்டுள்ளது. மற்றொரு சமணர், வலக்கையால் மலர் பறிப்பது போலவும் இடக்கையில் மலர்க்கூடை வைத்திருப்பது போலவும் ஓர் உருவம் வரையப்பட்டிருக்கிறது. ஓவியத்திற் காணப்படும் குளத்து நீரும், அந்நீரில் உள்ள கமல மலர்களும் இலைகளும் இயற்கையாய் உள்ள தாமரைக்குளம் போலவே காணப்படுவது அந்த ஓவியங்களின் சிறப்பை விளக்குவதாயிருக்கிறது.

4. அந்த மண்டபத்தின் முன்புறத்தைத் தாங்கும் நான்கு தூண்களுள் பின் புறம் உள்ள இரண்டும் பாதி அளவே தூணாய்த் தெரிகின்றன; மறு பாதிகள் பாறையுடன் ஒட்டியிருக்கின்றன. நடுவில் தனித்து நிற்கும் இரண்டு தூண்களிலும் அழகு மிகுந்த நடன மாதர் இருவருடைய உருவங்கள் வரையப்பட்டுள்ளன. இவ்விரணடு ஓவியங்களும் உயிருள்ள பெண்டிர் நடனமாடுவதைப்போலவே காட்சி அளிக்கின்றன. இவ்விரண்டு ஓவியங்களுள் இடப்புறத் தூணின்மீதுள்ள ஓவியம், சிறிது பழுதுபட்டிருக்கிறது; வலப்புறத் தூணின மீதுள்ள ஓவியம், பழுதுபடாமல், முழுவதும் நல்ல நிலையில் காணப்படுகிறது. வலப்புறத் தூணின் உட்புறத்தில் அரசன் ஒருவனது தலையும், அவன் கோப்பெருந்தேவியினது தலையும் வரையப்பட்டிருக்கின்றன.

5. இந்த ஓவியங்கள் பல்லவர் காலத்தவை என்றே கருதப்படுகின்றன. பல்லவ மரபினர் கி. பி. 300 முதல் 900

வரை தமிழ் நாட்டின் பெரும்பகுதியை ஆண்டு வந்தனர். அவர்களே முதன்முதலாகத் தமிழகத்தில் கற்கோவில்களைக் கட்டினார்கள்; குன்றுகள் பாறைகளைக் குடைந்தும், கற்பாறைகளை உடைத்து ஒன்றன்மீதொன்றாக அடுக்கியும் கோவில்களை அமைத்தார்கள்; கற்களிலும் பெரும்பாறைகளிலும் புராணப் படிவங்களைச் செதுக்கினார்கள்; அழகிய ஓவியங்களை அக்கோவில்களில் தீட்டுவித்தார்கள்; அவர்களால் வரைவிக்கப்பட்ட ஓவியங்களின் அழிந்து போன அடையாளங்கள் பல கோவில்களில் காணப்படுகின்றனவெனினும், சித்தன்னவாசல் குடைவரைக் கோவில் ஓவியங்கள், பல்லவர்களின் ஓவியச் சிறப்பினை விளக்க இன்றும் அழியாச் சான்றாயமைந்துள்ளன.

6. சித்தன்ன வாசல் குடைவரைக் கோவில் ஓவியங்களிலிருந்து கி. பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை பொதுவாகத் தமிழகப் பெண்மணிகள் அணிந்த அணி வகைகளையும், சிறப்பாக விறலியர் அணிந்த அணி வகைகளையும், கூந்தல் அலங்காரங்களையும், மேலாடை அணியும் முறையினையும், அக்கால நடனக்கலை விவரங்களையும், ஓவியக்கலை இயற்றும் கை வன்மையையும், என்றுமழியா உரத்துடன் கூடிய நிறங்கூட்டும் திறமையையும் நாம் நன்கறிய முடிகின்றது.

7. இந்த ஓவியங்களுள் வலப்புறத் தூணின்மீது காணப்படும் நாட்டியப் பெண்ணின் ஓவியம், சிறப்பித்துக் கூறத் தகுவதாகும். இதில் நாட்டியப் பெண்ணின் முடி அலங்காரம் மிகச் சிறந்து காணப்படுகிறது. கூந்தல், நடுவிலே வடு எடுக்கப்பட்டு, உச்சியிலே முடியப்பட்டுள்ளது. கூந்தல் முடிப்பில் சில வகை அணிகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. பல நிற மலர்க்கொத்துக்கள், கொழுந்து இலைகள், கமல இதழ்கள் முதலியவை செருகப்பட்டு, அக்கூந்தல் ஒப்பனை செய்யப்பட்டிருப்பது கண் கொள்ளாக் காட்சியாய் இருக்கிறது. காதில் அணிந்துள்ள காதணிகள், குண்டலங்களைப் போன்றிராமல், வளையங்களில் கல் வைத்திழைக்கப்பட்டது போலத் தோற்றமளிக்கின்றன. கழுத்தில் பல வகையான நகைகள் காணப்படுகின்றன. அக்கழுத்தணிகள் சிறந்த வேலைப்பாட்டுடன் அழகு

பெற்றிருக்கின்றன. கைகளில் வளைகளும் கடகங்களும், வலக் கையின் கட்டை விரலிலும் சுண்டுவிரலிலும் மோதிரங்களும் காணப்படுகின்றன. கைக் கடகங்கள் மிக அழகான வேலைப் பாடுடையவைகளாய் மிளிர்கின்றன.

8. இந்நாட்டியப் பெண் ஓவியம் இரண்டு மேலாடை-களுடன் கூடியதாய் விளங்குகிறது. ஒரு மேலாடை, இடை-யில் மேலாகக் கட்டப்பட்டிருக்கிறது; மற்றொன்று, தோளைச் சுற்றிப் பின் புறமாக விடப்பட்டிருக்கிறது. உடுத்தும் ஆடை-யில் ஏற்படும் சுருக்கங்களும், பெண்கள் மேலாடையைப் பல மடிப்புக்களாக வைத்துக் கட்டுவதால் ஏற்படும் மடிப்புக்-களும், மிகத் தெளிவாகவும் இயற்கையாகவும் தீட்டப்பட்-டிருத்தல், ஓவியத்தின் எழிலைப் பெருக்குவதுடன், அக்கால ஓவியர்களின் கைத்திறனையும் மெய்ப்பிக்க வல்லதாயிருக்கிறது.

9. இடப்புறத் தூணில் காணப்படும் நடனப் பெண்ணின் ஓவியம் சிறிது பழுதுற்றிருந்த போதிலும், வலப்புறத் தூணி-லிருப்பதைவிட வனப்புடையதாய்க் காணப்படுகிறது. இதிற்-காணப்படும் பெண்ணோவியத்தின் கூந்தல் ஒப்பனை, முன்னை-யதைக்காட்டினும் சிறிது வேறுபாடுடையதாயிருக்கிறது. அணி வகைகள் மட்டும் ஒரே வகையாய் இருக்கின்றன.

10. வலப்புறத் தூணின் உட்புறத்தில் காணப்படும் அரசன் அரசி ஓவியங்களிற் காணப்படும் அணி வகைகள் நடனப் பெண்களின் அணிகளினின்று வேறுபாடுடையவை களாயிருக்கின்றன. அரசனது கழுத்தில் மணி மாலைகளும், காதுகளில் குண்டலங்களும், தலையில் இரத்தினக் கற்கள் பதித்த முடியும் காணப்படுகின்றன. அரச மாதேவியின் முகத்தில் பெருந்தன்மையும் பெருமிதத் தோற்றமும் மிளிர்-கின்றன. இந்த அரசன் மாமல்லபுரத்தைத் துறைமுகப் பட்டினமாகவும் காஞ்சிபுரத்தைத் தலைநகரமாகவும் கொண்டு ஆட்சி புரிந்த மகேந்திரவர்மனுடைய சாயலாய் இருப்பதால், சித்தன்னவாசல் குடைவரைக் கோவிலை அமைத்தவன் இவ்-வரசனேயாதல் வேண்டுமென்றும், கி. பி. ஏழாம் நூற்றாண்-டின் முற்பகுதியில் இவன் வாழ்ந்தவனுதலால், அக்காலத்தி-

லேயே இக்கோவில் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்றும் அறிஞர் கருதுகின்றனர்.

11. பொதுவாக, சித்தன்னவாசல் குடைவரைக் கோவிலிற்காணப்படும் பெண்ணோவியங்களில் மூக்கணி காணப்படவில்லை. அரசமாதேவி ஓவியத்திலும் மூக்கணி இல்லை. எனவே, பல்லவர் காலத்துப் பெண்மணிகள் மூக்கணி அணிவதை அறியார் என்றும், அக்காலத்தில் பெண்கள் மூக்கணி அணிதல் வழக்கத்தில் இல்லையென்றும் கருதலாம்.

12. பொதுவாக இக்கோவில் ஓவியங்கள் அனைத்தும் கற்பாறைகள்மீது வரையப்பட்டு, ஆயிரம் ஆண்டுகட்கு மேலாகியும், அவை இன்றளவும் வனப்பழியாதிருப்பதொன்றே தமிழ் நாட்டவரின் ஓவியக்கலைக் கை வன்மையை விளக்கப் போதிய சான்றாகும். கட்புலனுக்கெட்டும் பொருள்களையும், கவிதைகளில் பொதிந்துள்ள உணர்வுக்கெட்டும் பொருள்களையும், கண்ணையும் கருத்தையும் ஒருங்கே ஈர்க்க வல்ல அரிய ஓவியங்களாகத் தீட்டும் ஓவியக்கலையில் இத்துணைச் சிறப்படைந்திருந்த நம் நாட்டு நாகரிகமும் தனிப் பண்பும் மீண்டும் நம்மிடையே ஏற்படுமாறு நாம் தொண்டாற்றுவோமாக.

பயிற்சி :

I. விடை எழுதுக :—

1. ' நாகரிக நாடுகள் ' என்பதற்குச் சான்றுகள் எவை?
2. பண்டை நாகரிக நாடுகள் எவை?
3. ' சித்தன்னவாசல் ' என்பது பற்றி நீ யாது அறிவாய்?
4. முன் மண்டபக் கூரையில் என்ன ஓவியம் காணப்படுகிறது?
5. தூண்களில் உள்ள ஓவியங்கள் யாவை?
6. இந்த ஓவியங்கள் எவர் ஆட்சிக் காலத்தவை?
7. சித்தன்னவாசல் கோவிலை அமைத்தவர் யார்? எக் காலத்தில்?
8. இந்த ஓவியங்களினின்று நாம் அறிபவை யாவை?

9. தமிழ் நாட்டின் சிறப்பை இந்த ஓவியங்கள் எவ்வாறு விளக்குகின்றன ?

10. நம் கடமை யாது ?

II. எதிர்ப்பதங்கள் எழுதுக :—

நாகரிகம், அழகு, அழியா, தெளிவாக, இயற்கையாக, வேறுபாடு, பெருந்தன்மை, அறிஞர்கள், வன்மை

III. வாக்கியங்களில் அமைக்க :—

பண்பட்ட, நெடுங்காலமாகவே, நுண்கலே, அகழ்ந்தெடுத்தல், மனத்தைக் கவரும், பழுதுபட்டு, ஒன்றன்மீதொன்றாக, ஓவியப்பண்பு, அழியாச்சான்று, கை வன்மை, என்றுமழியா உரம், கண் கொள்ளாக் காட்சி, மெய்ப்பிக்க வல்லது, வேறுபாடுடையது, கட்புலன், வனப்பழியா திருத்தல், கண்ணேயும் கருத்தையும் ஈர்க்கும், தனிப் பண்பு

IV. அகராதியைப் பார்த்துப் பொருள் எழுதுக :—

நுண்கலே, அகழ்தல், சான்று, அணி, கமலவாவி, கோப்பெருந்தேவி, உரம், ஒப்பனே, மிளிர்தல், எழில், வனப்பு, பெருமிதம், கட்புலன், ஈர்க்க

4. சிலப்பதிகாரமும் மணிமேகலையும்

1. கடைச் சங்க நூல்களெனப் போற்றப்படுபவை பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு எனப்படும் முப்பத்தாறு நூல்களேயாகும். கடைச்சங்க காலத்தை அடுத்துத் தோன்றிய ஐம்பெருங்காப்பியங்களுள் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் தலையாயவை ; தொடர்புடையவை ; ஒரே காலத்து, ஓரவைப் புலவர் பெருமக்கள் இருவரால் இயற்றப்பட்டவை ; ஒரே வரலாற்றின் பகுதிகளை விவரிப்பவை. இவற்றுள் சிலப்பதிகாரத்தால் விவரிக்கப்படும் வரலாற்றின் பிற்பகுதியே மணிமேகலையால் விவரிக்கப்படுகிறது.

2. சிலப்பதிகாரம் மூன்று பெரும்பிரிவுகளாகவும் முப்பது சிறு பிரிவுகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. பெரும்பிரிவு காண்டம் எனவும், சிறு பிரிவு காதை எனவும் வழங்கப்படுகின்றன. பெரும்பிரிவுகள் முறையே, புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் என்பன. 'புகார்' என்பது, சோழ நாட்டுத் தலைநகர் ; 'மதுரை' என்பது, பாண்டி நாட்டுத் தலைநகர் ; 'வஞ்சி' என்பது, சேரநாட்டுத் தலைநகர். சிலப்பதிகாரக் கதைத் தலைவியாகிய கண்ணகி, புகாரிற்பிறந்து வளர்ந்தவள். அவள் தன் கணவனாகிய கோவலனுடன் மதுரையை அடையும் வரை நடந்த நிகழ்ச்சிகளைப் புகார்க் காண்டம் விளக்குகின்றது. கண்ணகி மதுரையை அடைந்ததுமுதல் அதை அழித்துவிட்டுச் சேரநாடு நோக்கிப் புறப்பட்ட வரை நிகழ்ந்த நிகழ்ச்சிகளை மதுரைக் காண்டம் அறிவிக்கின்றது. அவள் சேரநாட்டை அடைந்து வேங்கைமர நிழலில் நின்றது முதல் பத்தினி விழாவையுள்ளிட்ட நிகழ்ச்சிகளை விளக்குவது வஞ்சிக்காண்டம்.

3. புகார்க் காண்டம் பத்துக் காதைகளாகவும், மதுரைக் காண்டம் பன்னிரண்டு காதைகளாகவும், வஞ்சிக் காண்டம் எட்டுக் காதைகளாகவும் அமைக்கப்பட்டிருக்கின்றன. புகார்க் காண்டத்தின் இறுதியில் சோழமன்னன் பெருமையும், மதுரைக் காண்டத்தின் இறுதியில் பாண்டியன் சிறப்பும், வஞ்சிக் காண்டத்தின் இறுதியில் சேரன் புகழும் குறிக்கப்பட்டுள்ளன.

4. சிலப்பதிகாரம், இயல், இசை, நாடகம் ஆகிய மூவகைத் தமிழையும், ஒன்பான் சுவைகளையும் கொண்ட அரிய நூல். இதனாலும், இந்நூலிற் கூறப்படும் கண்ணகி வரலாறு படிப்பவர்க்கு இன்பம் பயக்கத்தக்க முறையில் அமைந்துள்ளமையாலும் இதனை 'நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்' என்று வியந்து கூறுகின்றார் கவிஞர் பாரதியார்.

5 சிலப்பதிகார வரலாறு : கண்ணகியும் கோவலனும் மனைவியும் கணவனுமாவர் ; இருவரும் சோழநாட்டைச் சேர்ந்தவர். இருவரும் தனியே மனையறம் நடத்தி வருங்கால், அரங்க மேடையில் நடனத்தை அரங்கேற்றம் செய்த மாதவியின்பால் காதல் கொண்ட கோவலன், கண்ணகியை விட்டுப்பிரிந்து, மாதவியின் இல்லம் அடைகிறான். அவன் அங்கு நெடுங்காலம் மாதவியுடன் வாழ்கிறான் ; தங்களுக்குப் பிறந்த பெண் குழந்தைக்கு மணிமேகலை எனப் பெயரிடுகின்றான் ; பின்னர் ஒருநாள் இந்திர விழாவில் மாதவியுடன் பிணக்குக் கொள்கின்றான் ; அவளை விட்டுப் பிரிகின்றான் ; கண்ணகியை அடைகின்றான் ; தன் வறுமையைக் களையப் பொருளீட்ட, கண்ணகியின் காற் சிலம்பை விற்று முதற்பொருள் திரட்ட எண்ணிக் கண்ணகியை அழைத்துக்கொண்டு மதுரையை அடைகின்றான் ; மதுரையில் பொற்கொல்லன் சூதினால் கள்வன் எனக் கருதப்பட்டு, அரசன் ஆணைப்படி கொல்லப்படுகின்றான். இச்செய்தியறிந்த கண்ணகி அரசனை நேரிற்கண்டு, அரசன் நீதியில் தவறியதைச் சான்றுடன் மெய்ப்பிக்க, தான் நீதிதவறியதை அறிந்த பாண்டியன், உயிர்விடுகிறான் ; கணவன் உயிர் நீத்ததறிந்த கோப்பெருந்தேவியும் உடன் உயிர் விடுகிறாள். பின்னர்க் கண்ணகி மதுரையை எரியுண்ணச் செய்து, சேரநாடு புகுந்து, ஒரு மலைமீது ஏறி வேங்கை மர நிழலில் நின்ற போது, வானத்திலிருந்து அங்கு விமானம் ஒன்று வருகிறது. அதில் கோவலன் வீற்றிருக்கிறான். அவனுடன் கண்ணகி விண்ணுலகம் செல்கிறாள்.

6. இந்த வரலாற்றைக் குன்றக் குறவர் சேரமன்னனிடம் கூறினர். சேரன், கண்ணகிக்குக் கோவில் எடுக்க விழைந்தான். பத்தினிக்குப் படிவம் சமைக்க, இமயத்திலிருந்து கல்கொணர

முடிவு செய்யப்பட்டது. தமிழர்கள் வீரத்தைப் பழித்துரைத்த கனக, விசயர்களை வென்று, அவர்கள் தலைமீது கல்லைவைத்துக் கொணர்ந்து, பத்தினிக்குப் படிவம் சமைக்கப்பட்டது. இவ்வரலாற்றைச் சேரமன்னன் செங்குட்டுவன் தம்பியாராகிய இளங்கோவடிகள் ஒரு நூலாகப் பாடினர். சிலம்பு காரணமாக எழுந்த கதையைக் கூறும் இந்நூல் 'சிலப்பதிகாரம்' என வழங்கப் பெற்றது.

7. **மணிமேகலை வரலாறு:** கோவலன் இறந்த செய்தியறிந்த மாதவியும் மணிமேகலையும் பௌத்தப் பள்ளியிற் புகுந்தனர். மணிமேகலை அறவண அடிகளிடம் அறவுரை பெற்றாள். ஒரு நாள் மணிமேகலை உவவனம் சென்றிருந்த போது, உதயகுமரன் என்னும் அரசகுமாரன் அவளைப் பின் தொடர, அவனுக்கு அஞ்சி அவள் பளிக்கறையிற்புகுந்தாள்; பின்னர் இரவைச் சக்கரவாளக் கோட்டத்திற்கழித்து, மணிமேகலா தெய்வத்தின் உதவியால் மணிபல்லவத் தீவு சென்றாள்; அங்கு 'அமுதசுரபி' என்னும் எடுக்கவெடுக்கக் குறையாத அன்னப் பாத்திரம் பெற்று, காஞ்சி, புகார் நகரங்களில் வறிஞர் பசிப்பிணியைப் போக்கி, பத்தினிக்கோட்டம் சென்று, பத்தினியைவணங்கி, ஆசி பெற்றாள்; பல சமயவாதிகளைக் கண்டு, அவரவர் சமய உண்மைகளை அறிந்து, இறுதியில் தவம் கிடந்து துறக்கம் அடைந்தாள்.

8. மணிமேகலையின் இந்த வரலாற்றை விரித்துரைப்பதே மணிமேகலை என்னும் அரிய காவியம். இந்நூல் முப்பது காதைகளைக் கொண்டது. இதனைச் சேரன் செங்குட்டுவனுடைய அவைப்புலவராகிய சீத்தலைச் சாத்தனார் என்பார் இயற்றினர். சீத்தலைச் சாத்தனர், கோவல கண்ணகியர் வரலாற்றைக் காவியமாகப் பாடுமாறு இளங்கோவடிகளை வேண்ட, இளங்கோவடிகள், மணிமேகலை வரலாற்றைக் காவியமாகப் பாடச் சீத்தலைச் சாத்தனர் இசைவாராயின், தாம் கோவல கண்ணகியர் வரலாற்றைப் பாடுவதாகக் கூறினர். அவ்வாறே இரு பெரும்புலவர்களும் இவ்விரண்டு வரலாறுகளையும் காவியங்களாகப் பாடினர்கள். வஞ்சிமாநகரத்தில் சேரமன்னன் பேர-

வையில், தமிழ்ப் பெரும்புலவர் கூடினர். அப்புலவர் கூட்டத்திற்குச் சீத்தலைச் சாத்தனார் தலைமை தாங்கினார். அக்கூட்டத்தில், இளங்கோவடிகள் தாம் பாடிய கோவல கண்ணகியர் வரலாறாகிய சிலப்பதிகாரம் என்னும் அரிய நூலைப் படித்து, ஆங்காங்குப் பொருள் விளக்கி, அரங்கேற்றம் செய்தார். அந் நூலின் சொல்வளம், பொருள் வளங்களைக் கண்ட புலவர்கள் பெருமகிழ்வெய்திப் பாராட்டினார்கள். மறுநாளும் அப்புலவர் பேரவை கூடியது. இரண்டாம் நாள் கூட்டத்திற்கு இளங்கோ அடிகள் தலைமை தாங்கினார். அக்கூட்டத்தில் சீத்தலைச் சாத்தனார் தாம் பாடிய மணிமேகலை என்னும் அரிய நூலைப் படித்துப் பொருள் விளக்கம் செய்து, அரங்கேற்றினார். புலவர்கள் அந்நூலையும் பெரிதும் பாராட்டி மகிழ்ந்தார்கள். சேரமன்னன் செங்குட்டுவன், இரு நூல்களையும் மிகச் சிறப்பித்துப் பேசினான்.

9. சிலப்பதிகாரமும் மணிமேகலையும் அன்று முதல் **'இரட்டை நூல்கள்'** என்று வழங்கப்பட்டன. இவ்விரு பெரு நூல்களும் கி. பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை ஆகும். இவ்விரண்டும் அப்பழங்காலத்து நம் தமிழ் நாட்டின் சிறப்பைத் தெளிவாக விளக்குகின்றன. இவ்விரு நூல்களும் அழகிய தமிழ் நடையில் அமைந்து, படிக்கப் படிக்கத் தெவிட்டாத சுவை பயப்பவைகளாயுள்ளன. மேல் வகுப்புக்களுக்குச் சென்ற பின், இந்நூல்களை நீங்கள் படித்து மகிழலாம்.

பயிற்சி :

I. விடை எழுதுக :—

1. 'சங்க நூல்கள்' என்பவை எவை? அவை எத்தனை?
2. ஐம்பெருங்காப்பியங்களின் காலம் எது?
3. சிலப்பதிகாரம் எவ்வாறு அமைக்கப்பட்டுள்ளது? அதனாசிரியர் யார்?
4. சிலப்பதிகாரத்தின் ஒவ்வொரு காண்டத்திலும் கூறப்படும் நிகழ்ச்சிகள் யாவை?

5. சிலப்பதிகாரத்தில் எவ்வெம்மன்னர் பாராட்டப்பட்டுள்ளனர்?
6. 'நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்' என்று கவிஞர் பாரதியார் கூறியதற்குக் காரணம் யாது?
7. சிலப்பதிகாரத்தில் கூறப்படும் வரலாறு யாது?
8. மணிமேகலையும் சிலப்பதிகாரமும் எத்தகைய தொடர்பு உடையவை?
9. 'மணிமேகலை' என்னும் காவியத்தின் வரலாறு யாது?
10. மணிமேகலையை இயற்றியவர் யார்?
11. இவ்விரு நூல்களும் அரங்கேற்றம் செய்யப்பட்ட வகை யாது?
12. 'இரட்டை நூல்கள்' என்பவை யாவை?

II. வாக்கியங்களில் அமைக்க :—

தலையாயவை, தொடர்புடையவை, வரலாறு, மூவகைத்தமிழ், ஒன்பான் சுவை, பயக்கத்தக்க, நெஞ்சையள்ளும், மணையறம், அரங்கேற்றம், பிணக்குக் கொண்டு, பொருளீட்ட, படிவம், சொல் வளம், பொருள் வளம், படிக்கப்படிக்கத் தெவிட்டாதது, சுவை பயப்பது

III. எதிர்ச்சொற்கள் எழுதுக :—

போற்றப்படுபவை, பிணக்கம், அறவுரை, குறையாத, பேரவை, பழங்காலம், தெவிட்டாத, பயப்பவை

IV. அகராதியைப் பார்த்துப் பொருள் எழுதுக :—

ஒன்பான்சுவை, பயக்கத்தக்க, நெஞ்சையள்ளும், மணையறம், அரங்கேற்றம், இந்திரவிழா, பிணக்கு, கோப்பெருந்தேவி, எரியுண்ண, குறவர், குரவர், விண்ணுலகம், துறக்கம்

V. சிறு வாக்கியங்களாக மாற்றுக :—

இருவரும் மணையறம் நடத்தி வருங்கால், அரங்கமேடையில் நடனத்தை அரங்கேற்றம் செய்த மாதவியின்பால் காதல்கொண்ட கோவலன் கண்ணகியை விட்டுப்பிரிந்து, மாதவியின் இல்லம் அடைகிறான்.

IV. ஒரே வாக்கியமாக்குக :—

பின்னர் ஒரு நாள் கோவலன் இந்திரவிழாவில் மாதவியுடன் பிணக்குக் கொள்கிறான்; அவளை விட்டுப் பிரிகிறான்; கண்ணகியை அடைகிறான்.

5. நாவிகர் ஜேம்ஸ் குக்

1. உலகத்திலுள்ள ஐந்து கண்டங்களுள் ஒன்றுமெ ஆஸ்திரேலியா, மாபெருந்தீவு எனபதை நீங்கள் அறிவீர்கள். பசிபிக்கு மாக்கடலில் நியூஜீலந்து தீவும் எண்ணற்ற மற்றும் பல தீவுக் கூட்டங்களும் இருக்கின்றன என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

2. இவை எக்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டன? இவற்றைக் கண்டு பிடித்தவர் யாவர்? ஆஸ்திரேலியா ஒரு தீவு போன்ற அமைப்புடையதென்பதையும், நியூஜீலந்து ஒரு தீவுதான் என்பதையும் இன்று நாம் எவ்வாறு அறிய முடிகிறது?

3. 1770-ஆம் ஆண்டுவரை பசிபிக்கு மாக்கடலில் உள்ள பல தீவுகளை உலக மக்கள் அறியவில்லை; ஆஸ்திரேலியா, நியூஜீலந்து முதலியவை தனித்தனி தீவுகளே என்பதையும் அறியவில்லை; ஆஸ்திரேலியாவின் தென்பகுதி ஒரே கடல் மயம் என்பதையும் அறியவில்லை.

4. ஆஸ்திரேலியா, நியூஜீலந்து உட்பட அத்தென்கடலில் ஒரு பெரிய நிலப்பரப்பு இருப்பதாக மேனாட்டு மக்கள் அக்காலத்தில் எண்ணியிருந்தார்கள். இந்த ஐயத்தினைப் போக்கிக்

கொள்ள ஐரோப்பியர் பலர் முயன்றனரெனினும், அரிதின் முயன்று வெற்றி கண்டவர் ஆங்கில நாட்டினரேயாவர்.

5. இங்கிலாந்தில் இராயல் கழகம் என்னும் பெயருடன் அறிஞர் கழகம் ஒன்று அக்காலத்தில் இருந்தது. அக்கழகம் உலகப் புதுமைகள், விஞ்ஞானப் புதுமைகள், வானநூல் ஆராய்ச்சி, புதிய இடங்கள் காணுதல் முதலிய துறைகளில் ஈடுபட்டுப் பல அரிய செய்திகளை உலகுக்குணர்த்தி வந்தது. அக்கழகம், தென்கடலில் பெரிய நிலப்பரப்பு இருக்கிறதென்று மேனாட்டினரிடைப் பரவியிருந்த செய்தியின் உண்மையை நேரிற்சென்று கண்டுவிட வேண்டுமென்று முடிவு செய்தது. அதனுடன் கி. பி. 1769-ஆம் ஆண்டு, ஜூன் திங்கள், 3-ஆம் நாள், நிலத்திற்கும் கதிரவனுக்கும் இடையில் வானத்தில் வெள்ளிக்கோள் ஊர்ந்து செல்லும் என்பதை வானநூலிற் புலமை சான்றிருந்த இராயல் கழகத்தினர் அறிந்திருந்தனர்; வெள்ளிக்கோள் கதிரவனையும் நிலத்தையும் கடந்து செல்லும் நேரத்தைக் கணக்கெடுத்தால், வானநூல் ஆராய்ச்சிக்கு அது பெருந்துணை புரியும் என்றும், கதிரவனுக்கும் நிலத்துக்கும் இடையிலுள்ள தொலைவை அதன் மூலம் கணக்கிட்டுவிட முடியும் என்றும் கருதினர்; அதை இங்கிலாந்திலிருந்து காண, மேகங்கள் சூழ்ந்த தெளிவற்ற வானம் இடந்தாராதாகையால், பசிபிக்கு மாக்கடலில் உள்ள ஏதாவது ஓர் இடத்திலிருந்து, அங்குக் காணப்படும் மேகங்களற்ற தெளிவான வானத்தில் காணும்படி எவரையாவது அங்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று முடிவு செய்தனர். அவர்கள் கருத்தை இங்கிலாந்து அரசாங்கமும் ஆதரித்தது.

6. நீண்ட கடற்பயணம் செய்து, பசிபிக்கு மாக்கடலில் உள்ள ஏதேனும் ஒரு தீவில் தங்கி வெள்ளியின் போக்கைக் காணவும், தென்பசிபிக்குமாக்கடலில் நிலப்பரப்பு இருக்கிறதா என்பதை ஆராய்ந்து காணவும் தக்கார் ஒருவரை இராயல் கழகத்தினர் தேடி, இறுதியில், இப்பணியாற்றவல்லவர் நாவிகர் ஜேம்ஸ் குக் என்ற கடற்படை அறிஞரே என்று முடிவு செய்தனர். அக்கடற்படை அறிஞரும் அதற்கிணங்கினர்.

7. நாவிகர் ஜேம்ஸ் குக், 1728-ஆம் ஆண்டு, நவம்பர்த் திங்களில் யார்க்ஷயரைச் சேர்ந்த மார்ட்டன் என்னும் ஊரில் ஏழைக்குடி ஒன்றிற்பிறந்தார்; வறுமையினால், இளமையி-லேயே படிக்க வாய்ப்பற்றுத் தொழிலில் ஈடுபட்டார்; கப்பல் தொழில் செய்துகொண்டே இலக்கியம், கணிதம், வானக்கலை, கடல் அறிவு முதலியவற்றைப் பிழையறப் பயின்றார்; அரசர் கடற்படையில் படிப்படியாக உயர்பதவியடைந்து, பலர் பாராட்டுக்கு உரியவரானார்; பதின்மூன்று வயதுவரை தந்தை-யாருக்கு உதவியாய் உழவுத்தொழிலில் ஈடுபட்டிருந்து, அதன் பின் நான்காண்டுகள் கிராமப்பள்ளியிற்படித்து, பதினேழாம் வயதில் பலசரக்குக் கடையில் பணியாளராய் அமர்ந்து, பத்-தொன்பதாம் வயதில் கப்பல் தொழிலிற் சேர்ந்து, இருபத்தெட்டாண்டுகள் உழைத்த பின் 'காப்டன்' பதவி பெற்று, இறுதி வரை (51-ஆம் வயது வரை) கப்பல் தொழிலிலேயே ஈடுபட்டிருந்தார். இவர் தம் 35-ஆம் வயதில் பாட்ஸ் என்னும் பெண்மணியை மணந்து, ஆறு குழந்தைகளுக்குத் தந்தையா-ரானார். இவர் தம்முடைய மனைவி மக்கள்மாட்டு மட்டற்ற காதல் உடையவர் எனினும், தம் கடமையை ஆற்றுவதி-னின்றும் ஒரு நாளும் பிறழ்ந்திலர்; சொந்த நலன்களைவிடப் பொதுக்கடமையையே பெரிதெனக் கருதினார்.

8. இத்தகைய குணநலன்கள் வாய்ந்த நாவிகர் ஜேம்ஸ் குக், 1768-ஆம் ஆண்டு, ஜூலைத் திங்கள், 30-ஆம் நாள், 'எண்டவர்' என்னும் கப்பலில் 84 துணைவர்களுடன் பசிபிக்கு மாக்கடலுக்குப் புறப்பட்டுச் சென்று, டாஹிட்டித் தீவில் தங்கி, இராயல் கழகத்தார் விரும்பிய வான் நிகழ்ச்சியைக் கண்டு, பிழையின்றிக் குறிப்பெடுத்தார். சொசைட்டித் தீவுகளைக்கண்டு, அஃது எத்தனை தீவுகள் அடங்கிய கூட்டம் என்பதைக் கணக்கிட்டார்; நியூஜீலந்து, இரு தனித் தீவுகளே என்பதை அறிந்தார்; அது வரை எவரும் காணாதிருந்த ஆஸ்திரேலியாவின் கிழக்குக்கரை நெடுகச் சுமார் 2000 கல் தொலைவுவரை ஆராய்ந்து கண்டுபிடித்தார்; நியூகினி எனப்-படும் ஆஸ்திரேலியாவுடன் இணைந்திராத தனித் தீவென்பதைக் கண்டார்; தென்கடலில் பெருநிலப்பரப்புடைய கண்டம்

எதுவும் இல்லை என்பதைத் தெளிவுபடக் கண்டார்; இன்னும் பல புதிய தீவுகளையும் கண்டார்; இவையனைத்தையும் தெளிவான படங்களாக வரைந்து, ஆங்கில ஆளுகைக்கு உட்படுத்தினார்.

9. இவர் தம்முடைய முதற்பயணத்தில், மடெய்ராத் தீவு, டிவெர்டேத் தீவுகள், ரையோடி ஜனீரோ, டியரா டெல் புவெகோ வழியே தென்னமெரிக்காவைச் சுற்றிக்கொண்டு போக வேண்டியிருந்தது. இவர் சொசைட்டித் தீவுகளின் மக்கள் வாழ்க்கை முறையினை எழுதி வைத்தார்; நியூஜீலந்து, ஆஸ்தி-ரேலியாப் பகுதிகளில் மக்களையுண்ணும் இனத்தவரைக் கண்டார்; அவர்களை அச்சுறுத்தியும் அன்பு காட்டியும் பணிய வைத்தார்; அந்நாடுகளில் பயிரிடுதல், கால் நடைகளை வளர்த்தல் முதலியவற்றைப் பயிற்றுவித்தார். அவ்வந்நாடுகளி-லுள்ள தாவரங்கள், பறவைகள், விலங்குகள், தட்ப வெப்ப நிலை முதலியவற்றினைப்பற்றிக் குறிப்பெடுத்தார்; ஆங்காங்-குள்ள ஆறுகள், மலைகள் முதலியவற்றைப்பற்றியும் குறிப்-பெடுத்தார்; பிறகு ஜாவா வழியாகத் திரும்பி, தென்னாப்பிரிக்-காவைச் சுற்றிக்கொண்டு, தம் சுய நாடு போய்ச் சேர்ந்தார்; இடையில் பல வகை இடையூறுகளுக்கு ஆளானார். இவ்வா-றாக முதற்கடற்பயணம் இரண்டு ஆண்டு, ஒன்பது திங்கள், பதினான்கு நாட்களில் முடிந்தது.

10. நாவிகர் ஜேம்ஸ் குக், முதற்கடற்பயணத்தில் ஆற்றிய பணிகள் இராயல் கழகத்தினருக்கும் ஆங்கில அரசாங்-கத்தினருக்கும் மட்டற்ற மகிழ்ச்சியை விளைத்தன. எனி-னும், ஜேம்ஸ் குக் போகாத தென்கோடிக் கடலில் ஒரு பெருநிலப்பரப்பு இருக்கவேண்டும் என்பதை அவர்கள் திட-மாக நம்பினார்கள்.

11. எனவே, மீண்டும் நாவிகர் ஜேம்ஸ் குக் 1772-ஆம் ஆண்டு, ஜூலைத் திங்கள், 13-ஆம் நாள், இரண்டு கப்பல்களில் 193 பேருடன் இரண்டாம் கடற்பிரயாணத்தைத் தொடங்-கினார்; இம்முறை தென்னாப்பிரிக்காவைச் சுற்றிக்கொண்டு, நேரே தென்துருவம் சென்றார்; தென்துருவத்தில் 70-ஆம் ரேகாமிசக் கோட்டைக் கடந்து, 27 நாட்கள் வரை சுற்றியும்

அங்குள்ள கடுங்குளிர், வெடிக்கும் பனிமலைகள், உறையும் பனிக்கடல் முதலியவற்றின் கொடுமைகளைச் சகிக்க முடியாமல், நியூஜீலந்துக்குத் திரும்பிச் சென்று, சிறிது காலம் வரை தாம் கண்டிருந்த தீவுகளைச் சுற்றிப்பார்த்துவிட்டு, மீண்டும் தென் துருவம் சென்றார்; முன்னைவிட இன்னும் சற்றுத் தென் புறமாகச் சென்று ஆராய்ந்து, பரந்த நிலப்பரப்பு ஒன்றும் அப் பகுதியில் இல்லை என்பதைத் தெளிவாக உணர்ந்துகொண்டு, பசிபிக்குமாக்கடல் தீவுகளை மற்றுமொரு முறை பார்வை யிட்ட பிறகு, தென்னமெரிக்க முனையைச் சுற்றி அட்லாண்டிக்கு மாக்கடலின் தென்பகுதியில் உள்ள சில தீவுக்கூட்டங்களை ஆங்கில ஆளுகைக்குட்படுத்திவிட்டு, தென்னாபிரிக்கா சென்று, அங்கிருந்து நேரே 1775-ஆம் ஆண்டு, ஜூலைத் திங்கள், 30-ஆம் நாள், இங்கிலாந்து போய்ச் சேர்ந்தார். இரண்டாங்கடற்பயணம் முடிய மொத்தம் மூன்றாண்டுகளும் பதினேழு நாட்களுமாயின. இந்நெடிய கடற்பயணத்தில் நாவிகர் ஜேம்ஸ் குக் **நியூ கலிடோனியா, ஜார்ஜியாத் தீவு, காண்டில் மாஸ் தீவு** என்பவைகளையும், மற்றும் பல தீவுக் கூட்டங்களையும் கண்டு, அவற்றை ஆங்கில ஆட்சியில் இணைத்தார்; இக்கடற்பயணத்திற்குப் பிறகு, ஆங்கில அரசியலார் ஜேம்ஸ் குக்குக்குக் '**காப்டன்**' பதவியை அளித்துச் சிறப்பித்தனர்.

12. பசிபிக்கு மாக்கடலையும் அட்லாண்டிக்கு மாக்கடலையும் இணைக்கும் வடகடற்பாதை ஒன்றிருத்தல் வேண்டுமென்றும், அதைக் கண்டுபிடித்தல் வேண்டுமென்றும் விரும்பி, ஆங்கில அரசியலார் மீண்டும் நாவிகர் ஜேம்ஸ் குக்கை மூன்றாங் கடற்பயணத்துக்கு ஊக்கினர். அதற்கிணங்கிய நாவிகர் ஜேம்ஸ் குக், 192 பேருடன், 1776-ஆம் ஆண்டு, ஜூலைத் திங்கள், 14-ஆம் நாள், மூன்றாங்கடற்பயணத்தைத் தொடங்கினார்; தென்னாப்பிரிக்க முனையைச் சுற்றிக்கொண்டு, நியூஜீலந்துக்கும் மற்றத் தீவுகளுக்கும் சென்று, அவற்றைப் பார்த்துக்கொண்டு, நேரே வடக்கு நோக்கிச் சென்று, ஹவாய்த் தீவுகளைக் கண்டு, அவற்றிற்குச் '**சாண்டுவிச்சுத் தீவுகள்**' எனப் பெயரிட்டார்: பின்பு வட அமெரிக்காவின் மேற்குக் கரை முழுவதையும் ஆராய்ந்து, பல இடங்களுக்குப் பெயரிட்டு,

3500 கல் நீளமுள்ள அக்கடற்கரை முழுவதையும் ஆங்கில ஆட்சிக்குட்படுத்தினர்; பேரிங்கு கடலிணைப்பு வழியே வட கடலில் (ஆர்க்டிக்கு) புகுந்து, அஃது உறைபனிக் கடலா யிருக்கக் கண்டு, அதற்கு மேலும் போக முடியாததை அறிந்து, வடகடலின் வழியே அட்லாண்டிக்கு மாக்கடலையும் பசிபிக்கு மாக்கடலையும் இணைக்கும்பாதை இல்லையென்பதை அறிந்து, தெற்கு நோக்கித் திரும்பினர். நாவிகர் ஜேம்ஸ் குக் தெற்கு நோக்கி வந்து, ஹவாய்த் தீவில் தங்கிய போது, அத்தீவின் மக்களால் 1779-ஆம் ஆண்டு, பிப்பிரவரித் திங்கள், 14-ஆம் நாள், கொல்லப்பட்டார். பிறகு, அவர் சென்ற கப்பல்கள் ஆசியக்கரை வழியே ஜாவாத்தீவுக்கு வந்து, அங்கிருந்து நேரே தென்னுபிரிக்கா சென்று, 1780-ஆம் ஆண்டு, அக்டோபர்த் திங்கள், 4-ஆம் நாள், இங்கிலாந்து சென்றன.

13 நாவிகர் ஜேம்ஸ் குக், சற்றேறக்குறையப் பதினெ-ராண்டுகள் வரை, இம்மூன்று கடற்பயணங்களைக் கடலில் செய்து, உலகத்தைச்சுற்றி அறுபதினுயிரங்கல் தொலைவுபயணம் செய்துள்ளார். அவருடைய அருமுயற்சியினுல் பசிபிக்கு மாக் கடலிலுள்ள பல தீவுக் கூட்டங்களை உலகத்தார் அறிய முடிந்-தது; ஆஸ்திரேலியா, நியூஜீலந்து முதலியவற்றின் முழு அமைப்பினையும் அறிய முடிந்தது; அந்த அநாகரிக நாடுகள் நாகரிகம் பெற்று இன்று உலகிற்சிறந்த நாடுகளாய் மிளிரவும் முடிந்தது. இளமை முதலே நல்லியல்பும், நல்லொழுக்கமும், விடாமுயற்சியும், உலையா உழைப்பும் உடையவராய் வளர்ந்து வந்து, இத்தகைய அரும்பெரும்பணிகளை வெற்றியுடன் நிறை-வேற்றிய நாவிகர் குக்கின் புகழ், நம்மவர்களை முன்னேற்றத் துறையில் ஈடுபடுத்துமாக!

பயிற்சி:

I. விடை எழுதுக:—

1. இராயல் கழகம் எப்பணிகளை ஆற்றி வந்தது?
2. பசிபிக்கு மாக்கடலுக்கு ஜேம்ஸ் குக் ஏன் சென்முர்?
3. நாவிகர் ஜேம்ஸ் குக்கின் இளமை வரலாறு யாது?
4. முதற்பயணத்தில் ஜேம்ஸ் குக் கண்டவை யாவை?

5. முதற்பயணம் முடிய எவ்வளவு காலமாயிற்று ?
6. நாவிகர் குக் இரண்டாம் பயணம் செய்யக் காரணம் யாது ?
7. இரண்டாங்கடற்பயணத்தின் பலன் யாது ?
8. நாவிகர் குக் மூன்றாங்கடற்பயணம் செய்ய நேர்ந்ததேன் ?
9. மூன்றாங்கடற்பயணத்தின் முடிவு என்ன ?
10. ஜேம்ஸ் குக்கின் கடற்பிரயாணத்தால் உலகம் அடைந்த நன்மை யாது ?

II. எதிர்ச்சொற்கள் எழுதுக :—

நிலப்பரப்பு, மேனாடு, ஐயம், புதுமைகள், தொலை, தக்கார், அறிஞர், வறுமை, பரந்த

III. வாக்கியங்களில் அமைக்க :—

எண்ணற்ற, நிலப்பரப்பு, அரிதின்முயன்று, ஈடுபட்டு, தெளிவற்ற, ஐயம்திரிபற, அச்சுறுத்தி, உலையா உழைப்பு

IV. கீழே தரப்பட்டுள்ள தலைப்புக்களின் துணையால் சிறியதொரு கட்டுரை வரைக :—

1. ஜேம்ஸ் குக் இளமை வரலாறு
2. குக்கின் முதற்கடற்பயணம்-நோக்கமும் பலனும்
3. குக்கின் இரண்டாம், மூன்றாம் கடற்பயணங்களினால் விளைந்த பலன்

V. அகராதியைப் பார்த்துப் பொருள் எழுதுக :—

அரிதின், கோள், ஊர்ந்து, தக்கார், வாய்ப்பு, காதல், பிறழ்வு நிகழ்ச்சி, அச்சுறுத்தி, தட்பம், வெப்பம், ஐயந்திரிபற, ஊக்கினர், கல்வியல்பு

6. தமிழுக்குத் தொண்டாற்றிய பிற நாட்டறிஞர்—I

1. பல்வளமும் பல்லறமும் செறிந்தது பழந்தமிழ் நாடாகும். இங்கு வாழ்ந்திருந்த மக்கள், நாகரிகம், சாதி வேறுபாடில்லாச் சமூக ஒற்றுமை, செல்வநிலை என்பனவற்றைப் பெற்றிருந்தார்கள். இவற்றிற்குக் காரணம் கல்வியே என்பதனையும் இவர்கள் நன்குணர்ந்தவர்கள். பண்டைக் காலத்து மூவேந்தர்களும், குறுநில அரசர்களும், பெருநிலக் கிழார்களும் தமிழையும் தமிழ்ப்புலவர்களையும் ஆதரித்து வந்தார்கள். இங்ஙனமாகச் சங்க காலத்தில் தமிழ் நன்கு வளர்ச்சியுற்று வந்தது.

2. பின்னர்ப் பௌத்தரும், சமணரும் தமிழ் நாடு புக்குத் தமிழ்த் தொண்டாற்றத் தலைப்பட்டனர். சமீப காலத்தில் நம் நாட்டவரையன்றி, மேலை நாட்டறிஞர் பலரும் தமிழ் நாடு புக்குத் தமிழ்ப் பணியாற்றியுள்ளனர். இவ்வாறு தொண்டாற்றியவருள் வீரமாமுனிவர், கால்டுவெல் ஐயர், போப்பு ஐயர் ஆகிய மூவரும் தலை சிறந்தவராவர்.

3. இற்றைக்குச் சற்றேறக் குறைய இருநூற்று நாற்பத்தைந்து ஆண்டுகட்கு முன் இத்தாலிய நாட்டில், கிறித்தவ மதத்தைச் சார்ந்த பாதிரியார் ஒருவர் இருந்தார். அவர் பெயர் கான்ஸ்டன்ஷியஸ் பெஸ்கி என்பது. அவரைத் தமிழுலகம் வீரமா முனிவர் என்று வழங்கியது. அவர் இளமையிலேயே தம் தாய் மொழியை நன்கு பயின்று புகழுற்றார். அவர்

மதப்பற்று மிக்கவராய்த் துறவு பூண்டு, தண்ணளிமிக்க நன்னெறியில் நடந்து வந்ததைக் கண்ட இயேசுநாதர் சங்கத்தார், மத போதனை புரிவதற்காக அவரைத் தமிழ் நாட்டுக்கு அனுப்பினர்.

4. தமிழ் நாடு போந்த அவர், தமிழ் மொழியை நன்கு பயின்று, தமிழ்த் தொண்டு புரிவதன்வாயிலாகவே தாம் இயற்ற வந்த சமயத் தொண்டினை வெற்றிகரமாகச் செய்ய இயலுமென்பதை உணர்ந்தார். எனவே, அவர் தமது உலையா ஊக்கத்தால் தமிழ் மொழியில் உள்ள சிறந்த நூல்கள் அனைத்தையும் முறையாகப் பயின்றதோடு, இலக்கண நூல்களையும் ஐயந்திரிபறப் பயின்று, தமிழ்ப் புலவரென்று போற்றப் பெற்றார்: பின்னர்த் தமிழ் மொழியில் நூல்கள் இயற்றத் தொடங்கினர். அங்ஙனம் அவரால் முதலில் வெளியிடப் பெற்ற நூல்களுள் முக்கியமானவை தேம்பாவணி, தொன்னூல் விளக்கம் என்பன.

5. தமிழ் மொழியின்கண் வழங்கும் சொற்களின் பொருள்களைச் செவ்விதின் உணர்ந்துகொள்ளுவதற்கேற்ற அகராதியில்லாமை, பண்டைக் காலத்தில் ஒரு குறையாயிருந்து வந்தது. சொற்பொருளை அறிதற்குரிய நிகண்டு, திவாகரம் முதலிய நூல்கள் செய்யுள் வடிவத்தில் இருந்தன. எனவே, முனிவர் அரிதின் முயன்று, ஓர் அகராதியைத் தொகுத்துச் 'சதுரகராதி' என்னும் பெயருடன் அதை வெளியிட்டார். அன்றியும், சங்க காலம் முதல் பதினெட்டாம் நூற்றாண்டு வரை தமிழில் இயற்றப் பெற்ற நூல்கள் அனைத்தும் செய்யுள் வடிவில் இருந்தனவேயன்றி, உரை நடை நூல்கள் இல்லாக் குறை ஒன்றும் தமிழுக்கிருந்துவந்தது. அவர் அதையும் போக்க விரும்பி, வேதியரொழுக்கம், பரமார்த்தகுரு கதை போன்ற சிறந்த உரைநடை நூல்களை ஆக்கி வெளியிட்டார். 'தமிழ் உரை நடையின் தந்தையார்' அவரே என்று கூறுவது மிகவும் பொருத்தமுடையதே. பிற நாட்டவரும், பிற மதத்தவருமான வீரமாமுனிவர் தமிழுக்குப் புரிந்த தொண்டினை நினைத்து, அவர்க்கு எஞ்ஞான்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டது தமிழகம்.

6. அயர்லாந்து நாட்டில், கிளாடி நதிக் கரையிலுள்ள ஒரு சிற்றூரில், 1814-ஆம் ஆண்டில் பிறந்தார் ராபர்ட் கால்டுவெல் என்பவர். பிறந்த பத்தாம் ஆண்டு, அவர் தம்முடைய தாய் தந்தையருடன் ஸ்காட்லாந்து நாட்டுக்குச் சென்றார். 'விளையும் பயிர் முளையிலே,' என்னும் முதுமொழிக்கிணங்க, அவர் இளமையிலேயே ஆங்கில மொழியை ஐயமறக் கற்றார்; பின்னர் ஓவியத் துறையிற்புக்கு, நேரிய முறையிற்பயின்று, பரிசும் பெற்றார். ஆயினும், அத்துறையிலேயே அரும்பணி புரியும் அவா அவருக்கு இல்லாது போயிற்று. அவர் உள்ளம், எங்கும் நிறைந்த இறைவனது இன்னருட்டிறனையும் ஆற்றலையும் எடுத்தியம்பும் மெய்யுணர்வு நூல்களைக் கற்றுச் சமயத் தொண்டு புரிவதிலேயே சென்றது.

7. அதற்கேற்ப, அவர் தமது இருபதாம் வயதில் 'இலண்டன் கிறிஸ்து சமயத்தொண்டர் கழக'த்தில் ஓர் உறுப்பினராய்ச் சேர்ந்தார்; பின்னர் அக்கழகச் சார்பில் கிளாஸ்கோப் பல்கலைக் கழகத்திற்சேர்ந்து, கிறிஸ்து சமய நூல்களை நன்கு பயின்றார். அஞ்ஞான்று கிரேக்க மொழிப் பேராசிரியர், அவருக்கு மொழி நூல் முறைப்படி கிரேக்க மொழியின் சிறப்புக்களைப் பிற மொழிகளுடன் ஒப்பிட்டுக் காட்டினார். இதுவே அவர் பிற்காலத்தில் திராவிடக் குழு மொழிகளின் ஒப்பிலக்கணத்தை எழுதுவதற்குத் தூண்டுகோலாயிற்று.

8. இங்கிலையில் இலண்டன் கிறிஸ்து சமயத் தொண்டர் கழகத்தவர் அவரைத் தமிழ் நாட்டில் மதப்பணி புரியத்தேர்ந்தனுப்பினர். அவர் 1838ல் சென்னை வந்து சேர்ந்தார். அங்கு அக்காலத்தில் தமிழ்ப் பேரறிஞராய் விளங்கிய துரு என்ற ஆங்கிலேயருடன் மூன்றாண்டுகள் தங்கித் தமிழை நன்கு பயின்றார்; 1841ல் சமயத் துறையில் தேர்ந்து, குருப் பட்டமும் பெற்றார்.

9. பின்னர்க் கால்டுவெல் சென்னையை விட்டு, மதப் பணியாற்றத் தமிழ் வளம் நிறைந்த பாண்டி நாட்டிலுள்ள இடையன் குடியை அடைந்தார். அது திருநெல்வேலியை அடுத்த வெப்பம் மிக்க ஒரு சிறு கிராமமாகும். அவர் அங்குச்

சிறிது காலம் தங்கிய பிறகு நாஞ்சில் நாட்டிலுள்ள நாகர்-கோவிலில் வாழ்ந்து வந்த கிறித்தவப் பாதிரியார் ஒருவரின் அருமை மகளாரான எலிசா என்ற அம்மையாரை மணம் புரிந்துகொண்டார்.

10. கால்டுவெல் ஐயர் மதப்பணி புரிந்துகொண்டே தமிழ்ப் பணியும் செய்து வந்தார். இதன் பயனாகத் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, குடகு என்னும் திருந்திய மொழிகள் ஆறும், துதம், கோண்டு முதலிய திருந்தா மொழிகள் ஆறுமாகப் பன்னிரண்டு மொழிகளையும் ஒன்றோடொன்றை ஒப்பிட்டு ஆராய்ந்து, ஒப்பிலக்கண நூல் ஒன்றைச் சீரிய முறையில் ஆங்கிலத்தில் எழுதி முடித்தார்; அன்றியும், திருநெல்வேலிச் சரித்திரம், தாமரைத் தடாகம், ஞான ஸ்நானம், நற்கருணை முதலிய வேறு நூல்களையும் இயற்றினார்.

11. மொழிநூல் உலகிற்குப் புதுநெறி காட்டிய அம் மூதறிஞர்க்குக் கிளாஸ்கோப் பல்கலைக் கழகத்தார் 'டாக்டர்' பட்டம் வழங்கினர். அவர் 1891ல் ஆண்டவன் திருவடியை அடைந்தார். பிற நாட்டவரான அவர் தமிழ் மொழிக்கும், திராவிடக் குழு மொழிகட்கும் புரிந்த சீரிய தொண்டு நம்மால் என்றும் மறத்தற்கரியதொன்றும்.

பயிற்சி :

I. விடை எழுதுக :—

1. *தமிழுக்குத் தொண்டாற்றிய பிற நாட்டறிஞர் யாவர் ?*
2. *வீரமாமுனிவரது வேறு பெயர் யாது ?*
3. *வீரமாமுனிவர் இயற்றிய தமிழ் நூல்கள் யாவை? அவர் தொகுத்த அகராதிக்குப் பெயர் என்ன ?*
4. *'உரை நடையின் தந்தையார்' என்பது யாருக்குப் பெயர் ?*
5. *ராபர்ட் கால்டுவெல் ஒப்பிலக்கணம் எழுதக் காரணமாய் இருந்தது எது ?*
6. *ராபர்ட் கால்டுவெல்லுக்குத் தமிழ் பயிற்றியவர் யார் ?*
7. *கால்டுவெல் இயற்றிய ஒப்பிலக்கணம் எத்தனை மொழிகளைக் கொண்டது ? அவைகளுட் சிலவற்றைக் கூறுக.*
8. *அவர் இயற்றிய வேறு நூல்களின் பெயர்களைக் கூறுக.*

II. எதிர்ச்சொற்கள் எழுதுக :—

மேலே, இயலும், இயற்ற, பண்டை, செய்யுள், வெப்பம்

III. வாக்கியங்களில் அமைத்து எழுதுக :—

உலையா ஊக்கம், தொண்டாற்று, நாடு போந்த, செவ்விதின், எஞ்ஞான்றும், ஐயமற, சீரிய முறையில்

IV. சொல்லியுள்ளபடி செய்க :—

1. வீரமாமுனிவரால் முதலில் வெளியிடப்பட்ட நூல்களுள் முக்கியமானவை தேம்பாவணி, திருக்காவலூர்க் கலம்பகம், தொன்னூல் விளக்கம் என்பன. (செய்வினை வாக்கியமாக மாற்றுக.)

2. அவர் இடையன் குடியில் சிறிது காலம் தங்கிய பிறகு காஞ்சில் நாட்டிலுள்ள நாகர் கோவிலில் வாழ்ந்துவந்த கிறித்தவப் பாதிரியார் ஒருவரின் அருமை மகளாரான எலிசா என்னும் அம்மையாரைத் திருமணம் புரிந்துகொண்டார். (நான்கு தனி வாக்கியங்களாக அமைக்க.)

V. அகராதி பார்த்துப் பொருள் எழுதுக :—

குறுநிலம், கிழார், மேலே, துறவு, செவ்விதின், மூதறிஞர், திருவடி, துறை, சமயம்

7. தமிழுக்குத் தொண்டாற்றிய பிற நாட்டறிஞர்—II

1. அமெரிக்காவின் அண்மையிலுள்ள பிரின்ஸ் எட்வர்டு என்னும் தீவில், ஜான் போப், கேதரின் யுக்ளோ என்ற இருவருக்கும் 1820-ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள், 24-ஆம் நாள் ஜியார்ஜ் யுக்ளோ போப் என்பவர் பிறந்தார். அவருக்கு ஐவர் தம்பியரும், நால்வர் தங்கையரும் இருந்தனர்.

2. போப் தமது ஆறும் வயதில் தம்முடைய முதுகுரவருடன் இங்கிலாந்தை அடைந்தார். அவர் இளமையிலிருந்தே நன்கு கல்வி கற்று வந்தார் ; சிறந்த பேரறிஞராயும் மதப்பற்றுடையவராயும் விளங்கினர். இங்கிலாந்திலுள்ள வெஸ்லியன் சங்கத்தார், அவருடைய நுண்ணறிவின் திறனையும் மதப்பற்றினையும் கண்டு, அவரைச் சமயத்தொண்டு புரியத் தென்னிந்தியாவிற்கு அனுப்ப எண்ணினர். இதனை அறிந்த போப், தென்மொழியையும் வடமொழியையும் நன்கு கற்றுவந்தார். பின்னர், சங்கத்தார் ஆணைப்படி அவர் மதத்தொண்டு புரிய இங்கிலாந்தைவிட்டுத் தென்னிந்தியாவிற்குப் புறப்பட்டார்.

3. போப் 1839-ஆம் ஆண்டு சென்னை வந்தடைந்தார். அவர் சென்னையிலுள்ள சாந்தோம் என்னும் இடத்தைத் தாம் வாழ்வதற்கேற்ற இடமாகக் கொண்டு, இரண்டாண்டுகள் மதப்பணி புரிந்துகொண்டே தமிழ் மொழியையும், அதன் வழி மொழிகளாகிய மலையாளம், கன்னடம், தெலுங்கு என்பன வற்றையும் கற்று வந்தார். பிறகு அவர் குருப் பட்டம் பெற்று, மதபோதனை புரியச் சாயர்புரத்திற்குச் சென்றார்.

4. சாயர்புரம் என்பது, தூத்துக்குடிக்குப் பத்துக்கல் தொலைவில் உள்ள ஒரு சிற்றூர். போப்பையர் அங்குச் சென்றதும் சிறுவர்க்குரிய பள்ளி ஒன்றை ஏற்படுத்தினர் ; அதில் கற்று வந்த மாணவர்களுக்குத் தமிழ், ஆங்கிலம், எபிரேயம், இலத்தீன், கிரேக்கம் என்னும் பல மொழிகளையும் தமது விவிலிய நூலையும் போதித்து வந்தார். இவ்வாறு எட்டாண்டு

கள் இடை விடாது உழைத்து வந்த போது அவருக்கு உடல் நலம் குன்றத் தலைப்பட்டது. உடனே அவர் 1849-ஆம் ஆண்டு இங்கிலாந்து சென்று ஓய்வு பெற்றார்.

5. போப்பையர் 1850-ஆம் ஆண்டு மணம் புரிந்து கொண்டு, தம் மனைவியாரோடு மீண்டும் சென்னையை அடைந்தார். இங்குள்ள நற்செய்திக் கழகத்தார் அவரைத் தஞ்சையில் தொண்டு புரிய அனுப்பினர். அவர் தஞ்சையில் எட்டாண்டுகள் தங்கி, மதத்தொண்டோடு தமிழ்த் தொண்டும் புரியலானார். அவர் காலத்தில் தொல்காப்பியம், நன்னூல் முதலிய இலக்கண நூல்களை மக்கள் கற்றுணர்வது மலையைக் கல்லி எலியைப் பிடிப்பது போன்றிருந்தது. இதனை உணர்ந்த ஐயர், அவ்விலக்கண நூல்களை நன்கு கற்றார்; பின்னர், மாணவர்கள் உள்ளத்தில் பசுமரத்தாணிபோலப் பதியும் வண்ணம், வினா விடையாக இரண்டு இலக்கண நூல்களை எழுதி வெளியிட்டார்; இலக்கண நூல்களின் நுட்பங்களை அறிவதற்கேற்ற விரிவான நூல் ஒன்றையும் எழுதினார். 'போப்பையர் உரை நடைப்பகுதி' என்னும் உரைநடை நூலையும் வெளியிட்டார்.

6. கி. பி. 19-ஆம் நூற்றாண்டின் இடைக்காலம் வரையில் தமிழ் நாட்டில் நாட்டு வரலாறுகளை எழுதிப் படிப்பதும், பல நீதி நூல்களிலுள்ள சிறந்த பாடல்களையெல்லாம் திரட்டித் தொகுத்துப் படிப்பதும் ஆகிய வழக்கங்கள் இல்லாதிருந்தன. போப்பையர் இக்குறைபாட்டைக் களைந்தெறிய எண்ணங் கொண்டார்; ஆங்கில மொழியிலுள்ள முறைப்படி நாட்டு வரலாறுகளை எழுதியும் பல நீதி நூல்களிலுள்ள சிறந்த பாக்களைத் தொகுத்துச் செய்யுட்கலம்பகம் என்று பெயரிட்டும் முதன்முதல் வழங்கிய பெருமை ஐயரவர்கட்கே உரியதாகும். இவற்றுடன், ஆங்கிலம்-தமிழ், தமிழ்-ஆங்கிலம் அகராதிகளையும் இவர் நல்ல முறையில் தொகுத்தார்.

7. தஞ்சையிலுள்ள கிறிஸ்தவர்களுக்குள் உயர்வு தாழ்வு என்ற சாதிப் பிரிவு மனப்பான்மையால் சிறு குழப்பம் ஏற்பட்டது. இதனால் மனம் நொந்த புலவர் போப்பையர், மதப்பணி புரிவதை விடுத்து, உதகமண்டலம் சென்றார்; அங்கு

'ஸ்டோன் அவுஸ்' என்னும் இடத்தில் பள்ளி ஒன்றை ஏற்படுத்தி நடத்திக்கொண்டே பொது நூல் நிலையப் பொறுப்பையும் ஏற்றுத் தொண்டாற்றினர்: உதகையிலிருந்தபோதே நமதுநாட்டு வரலாற்றை எழுதப் பல குறிப்புக்களைத் திரட்டினர். தமிழர்களின் தவக்குறைவால் அவை சிதல் வாய்ப்பட்டன.

8. உதகையில் வாழ்ந்த காலத்தில் ஐயரவர்கட்குப் போதிய வசதி இல்லாதிருந்தது. அதற்காக அவர் பெங்களூரிலுள்ள பிஷப்புக் காட்டன் பள்ளியில் தலைவர் பதவியை ஏற்று, 1871 முதல் 1882 வரை மொழித் தொண்டு புரிந்து வந்தார். அப்பொழுது அவருக்கு உடல் நலிவு ஏற்பட்டது. சுமார் 42 ஆண்டுகள் தமிழ் நாட்டிலிருந்து தமிழ்த்தொண்டு புரிந்த போப்பையர், மீண்டும் இங்கிலாந்து சென்றார்.

9. ஆக்ஸ்பர்டு பல்கலைக் கழகத்தார் 1885ல் தமிழும் தெலுங்கும் பயிற்றும் பேராசிரியராகப் போப்பையரை நியமித்தனர்; பின்னர் அவருடைய ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், சம்ஸ்கிருதம், இலத்தீன், எபிரேயம், கிரேக்கம், பிரெஞ்சு, ஜெர்மன் ஆகிய பன்மொழிப் புலமையைப் பாராட்டி, அவருக்கு எம். ஏ. பட்டம் அளித்தனர்.

10. போப்பையர் பல்கலைக் கழகத்திலிருந்துகொண்டே திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கத் தொடங்கி, 1886-ஆம் ஆண்டு முடித்தார். அவர் அம்மொழிபெயர்ப்பின் முகவுரையில், 'தாழ்மை, அன்பு, மன்னிப்பு என்னும் இம் மூன்று சிறந்த குணங்களும் கிறிஸ்தவர்களின் குணங்களாகும். இவற்றை நமது மறை நூலில் குறிப்பிடவில்லை. ஆனால், இம் மூன்றும் குறளில் காணப்படுகின்றன,' என்றும், 'வேதம், கோபம், சாட்சி என்ற இம்மூன்று வட சொற்களும் குறளில் காணப்படவில்லை' என்றும்; 'இவற்றிற்குப் பதிலாக, மறை, வெகுளி, கரி என்னும் சொற்களே உபயோகிக்கப்பட்டிருக்கின்றன' என்றும்; 'தமிழே தென்னிந்திய மொழிகளுக்குத் தாய்மொழி,' என்றும் குறளின் மாட்சியைத் தெளிவுற எடுத்துக் காட்டியுள்ளார்.

11. அவர் 1893-ஆம் ஆண்டு நாலடியார் என்னும் நீதி நூலின் மொழி பெயர்ப்பையும், 1900-ஆம் ஆண்டு, ஏப்பிரல் திங்கள், 24-ஆம் நாளாகிய தமது பிறந்த நாளன்று திருவாசகத்தின் மொழி பெயர்ப்பையும் முடித்துத் தமிழருடைய ஒழுக்கத்தினையும் மதக்கோட்பாட்டையும் மேனாட்டாரும் அறிந்து பாராட்டச் செய்தார். இத்தகைய அரும்பெருந்தொண்டுக்காகப் போப்பையருக்கு 1906-ஆம் ஆண்டில் ஒரு தங்கப் பதக்கம் பரிசளிக்கப்பட்டது. போப்பையர் இதனுடன் அமையாது, மணிமேகலை மொழிபெயர்ப்பையும், தமிழ் அகராதித் தொகுப்பையும் தொடங்கினார். ஆனால், அவை முற்றுப் பெறுவதற்குள் 1908-ஆம் ஆண்டு, பிப்பிரவரித் திங்கள், 11-ஆம் நாள் அவர் பெரும்பிரிவெய்தினார்.

12. இங்ஙனம் கிறிஸ்தவ சமயத்தைத் தென்னிந்தியாவிற்பரப்ப வந்த பிற நாட்டறிஞர் பலர். அவர்களுள் தலை சிறந்த மூவரின் வாழ்க்கை வரலாறுகளால் அவர்கள் தமிழுக்குப் புத்தம்புதிய முறைகளை வகுத்துக்கொண்டு தம் இறுதி நாள்வரை புரிந்த இனிய தொண்டின் திறத்தை நாம் அறிகின்றோம்; அவர்கட்குத் தமிழுலகம் எத்துணை கடமைப்பட்டுளது என்பதையும் அறிகின்றோம். இவற்றால் தமிழராகிய நாம் பிற மொழியாளர் தமிழின்பால் கொண்டிருந்த அன்பின் அளவை அறிந்து, அதைக்காட்டிலும் நமது தமிழ்ப் பற்று மிக்கு விளங்க வேண்டுமென்னும் பாடத்தை மனத்திற்கொள்வோமாக.

பயிற்சி:

I. விடை எழுதுக:—

1. ஜியார்ஜ் யுக்ளோவின் இளமைப்பருவத்தை 10 வாக்கியங்களில் எழுதுக:—
2. போப்பையர் அவர்கள் எந்நாட்டவர்? அவர் தாய் தந்தையர் பெயர்கள் யாவை?
3. ஐயர் முதல் தடவையாக இந்தியாவுக்கு வந்தபோது எங்கு, எத்தனை ஆண்டுகள் தங்கினார்? பின்பு எங்குச் சென்றார்? அது எங்கே உள்ளது? அங்கு அவர் ஏற்படுத்திய பள்ளியின்

பெயர் என்ன? அங்கு என்னென்ன பாஷைகள் போதிக்கப் பட்டன?

4. ஐயர் அவர்கள் தமிழுக்காக ஆற்றிய தொண்டினைக் குறித்து ஒரு பக்கத்துக்கு மிகாமல் ஒரு கட்டுரை வரைக.

5. அவர் பிஷப்புக் காட்டன் பள்ளித் தலைமைப் பதவியை ஏன் ஏற்றார்?

6. ஐயர் அவர்கள் கற்ற பாஷைகள் எத்தனை? அவைகள் யாவை?

7. திருக்குறளைப்பற்றி ஐயர் கூறியது யாது?

8. தமிழே தென்னிந்திய மொழிகளுக்குத் தாய்மொழி—காரணத்துடன் விளக்குக.

9. ஐயர் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்ட நூல்கள் யாவை?

II. எதிர்ச்சொற்கள் எழுதுக :—

பற்று, குறள், தாழ்மை, இடைவிடாது, ஒய்வு, குழப்பம், நலிவு

III. வாக்கியங்களில் அமைத்தெழுதுக :—

தலை சிறந்த, மொழி பெயர்த்து, சமயம், ஆணைப்படி, வாழ்வதற்கேற்ற, இடைவிடாது, கல்வி, பதியும்படி, தொடுத்து, நலிவு

IV. அகராதி பார்த்துப் பொருள் எழுதுக :—

திங்கள், கோட்பாடு, அமையாது, பெரும் பிரிவெய்தினர், திறல், மறை, கரி, வெகுளி, குறள், குறவர், சமயம், மணம், கல்வி, மதிநுட்பம், தொகுத்து, இதழ், நலிவு

V. 1. குற்றியலுகரம், முற்றியலுகரம் என்பவை யாவை? ஒவ்வொன்றற்கும் மும்மூன்று உதாரணங்கள் தருக.

2. குற்றியலுகரம் எத்தனை வகைப்படும்? ஒவ்வொன்றற்கும் இரண்டிரண்டு உதாரணங்கள் தருக.

8. கலிங்கப் போர்

1. பண்டைக் காலத்தில் சோழ நாட்டை ஆண்ட மன்னர்கள், வெவ்வேறு நகரங்களிற்றங்கி ஆட்சி புரிந்தார்கள். எனவே, உறையூரும், புகாரும், தஞ்சையும், கங்கை கொண்ட சோழ புரமும், திருவாரூரும் வெவ்வேறு காலங்களில் சோழ நாட்டின் தலை நகரங்களாய்த் திகழ்ந்தன. தஞ்சையைக் கோநகரமாகக் கொண்டான் சோழப் பேரரசன் இராசராசன். அவன் மகன் இராசேந்திரன், கங்கை நீரைக் கொணர்ந்து, ஒரு புதிய நகரை அமைத்தான். கங்கை நீரைக் கொணர்ந்த இராசேந்திரனுக்குக் **கங்கை கொண்ட சோழன்** என்ற பெயர் வழங்கினமையால், அவனால் அமைக்கப் பெற்ற நகரத்துக்குக் **கங்கைகொண்ட சோழபுரம்** என்னும் பெயர் வழங்குவதாயிற்று.

2. இராசேந்திரன் ஈடுமெடுப்புமற்ற வீரனாய் இருந்தமையால், அவன் தனது நாட்டுக்கு வடக்கிலிருந்த நாடுகளை வென்று, தனதாட்சிக்குள் கொண்டு வந்தான். அந்நாடுகளுள் **வேங்கி** நாடும் ஒன்று. அந்நாட்டு மன்னன் இராசராசனை வென்றானெனினும், அவனுக்குத் தன் தங்கையைத் திருமணம் செய்வித்து, அவனைத் தன் உறவினனாகக் கொண்டான்.

3. இராசேந்திரனுக்குப் பிறகு அவனுடைய மைந்தர் மூவர், ஒருவர் பின் ஒருவராகச் சோழப் பேரரசை ஆண்டு வந்தனர். அவர்களுள் இறுதியரசனான **வீரராசேந்திரனுக்கு** மக்கள் இன்மையால், அவன் தன் தங்கைக்கும் வேங்கி நாட்டு மன்னனான இராசராசனுக்கும் பிறந்த **விசயதரன்** என்பானை இளமை முதல் தன் அரண்மனையில் வைத்து வளர்த்து வந்தான்.

4. 'விளையும் பயிர் முளையிலே தெரியும்,' என்னும் முதுமொழிக்கிணங்க, விசயதரன் இளமையிலேயே அறிவு ஆற்றல் ஒழுக்கம் முதலிய உயர்குணங்களை உடையவனாயிருந்ததோடு, ஈடுமெடுப்புமற்ற வீரனாயுமிருந்தான். அப்போது வடநாட்டிலிருந்த **சக்கரகோட்டத்துக்கு** அதிபனான **தாராவர்ஷன்** என்பவன், சோழப் பேரரசில் குழப்பத்தை உண்டாக்கினான். அவனை

அடக்கித் திரும்புமாறு விசயதரனை ஏவினுன் வீரராசேந்திரன். விசயதரன் தனக்கிடப்பட்ட கட்டளையை ஈடேற்ற வடநாடு சென்றிருந்த போது வீரராசேந்திரன் தனது கோநகரில் உயிர் நீத்தான். அப்போது அங்கிருந்த அரச குலத்தினர் ஆட்சி-யுரிமை காரணமாகக கலகம் செய்ய முற்பட்டனர். அச்செய்தி கேட்ட விசயதரன், தன் பகைவனை வென்று, வாகை சூடி, விரைந்து வந்து, கங்கை கொண்ட சோழ புரத்தில் தாண்டவம் புரிந்துகொண்டிருந்த கலகத்தையும் குழப்பத்தையும் ஒழித்-துத் தனதுரிமைப்படி அரியணையிலமர்ந்து ஆட்சி புரிந்து வந்தான். அவனுக்கு அக்காலத்தில் குலோத்துங்கன், இராசேந்திரன், அபயன் என்ற பெயர்கள் வழங்கலாயின.

5. விசயதரன் பட்டத்துக்கு வந்த பின்பு சோழப் பேரரசில் அமைதி நிலவத் தொடங்கியது. அவனுடைய பகை-வர் அனைவரும் அவனை எதிர்த்துப் பொர அஞ்சி, அவனுக்கு அடங்கித் திறை செலுத்தி வந்தனர். இங்ஙனம் தன்னேரில்லாத் தனியரசு செலுத்தி வந்த விசயதரன், ஒரு கால் காவிரிக் கரையில் வேட்டையாடிக்கொண்டிருந்தபோது தனது ஆட்சிக்-குட்பட்ட தொண்டை நாட்டுப் பாலாற்றங்கரையிலும் வேட்டையாட விரும்பினுன்.

6. மறு நாளே விசயதரன் தன்னுடைய பரிவாரங்களு-டன் தொண்டை நாடு நோக்கிப் புறப்பட்டான். முதலில் அவன் தனது குல தெய்வமாய் விளங்கிய தில்லை நடராசப் பெருமானைத் தரிசிக்க எண்ணிச் சிதம்பரம் சென்றுன்; இறை-வனை வழிபட்ட பிறகு அங்கிருந்து புறப்பட்டுக் காஞ்சீபுரத்தை அடைந்தான். அக்காலத்தில் காஞ்சிமா நகரம் அவனது பேரரசின் வடபகுதியின் தலைநகராய் விளங்கியது. விசயதரன் கச்சியை அடைந்து, ஆண்டிருந்த தனது அரண்மனையிற்றங்-கினுன்.

7. ஒரு நாள் விசயதரன் அரியணையில் அமர்ந்திருந்த போது அவனுக்கடங்கியிருந்த அரசர் பலர் திறைகளைக் கொணர்ந்து அவன் அடி முன் வைத்து வணங்கினர். அபயன் அவற்றை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு, அவரவர்க்குரிய மரியாதைகளைச் செய்தான். அவர்கள் தத்தம் இருக்கையி-

லமர்ந்த பிறகு, விசயதரன் தன் மந்திரவோலை நாயகனைப் பார்த்து, "இவர்களையன்றித் தம்முடைய திறைகளைச் செலுத்தாத வேறு வேந்தரும் உளரோ?" என்று வினவினன். உடனே கருமத் தலைவன் விசயதரனைப் பணிந்து, "அரசரேறே, எல்லா அரசர்களும் திறைகளுடன் வந்து நும் கழல் வணங்கினர். ஆனல், கலிங்க நாட்டு மன்னன் அனந்தவன்ம சோடகங்கன் மட்டும் உரிய திறையோடு வந்திலன்," என்று விடை பகர்ந்தான்.

8. அது கேட்ட அரசன் முகம், அன்றலர்ந்த செந்தாமரை போலப் பொலிவுற்றுப் புன்முறுவல் அரும்பியதே அன்றி, ஒரு சிறிதும் கோபக் குறியைத் தோற்றுவிக்கவில்லை. அது கண்ட அனைவரும் அப்புன்முறுவலின் விளைவு யாதோ என எண்ணிப் பேசாதிருந்தனர். அரசன் தானைத் தலைவரை விளித்து, "சோடகங்கன் படைப்பலமற்றவனெனினும், தனது குன்றரணைப் பெரிதாக மதித்துத் தருக்கியிருக்கின்ருன் போலும்! அவனுக்குத் தக்க பாடம் கற்பித்தல் வேண்டும். நம்முடைய யானைப் படைகளுடன் சென்று அவனைச் சிறை செய்து கொணர்மின்!" என்று சினந்து கூறினன்.

9. அது கேட்ட சோழப் பெரும்படையின் தலைவனும், வண்டை நகர்க்கதிபனுமான கருணகரத் தொண்டைமான், விரைந்தெழுந்து, வேந்தனை வணங்கி, வெளிப்போந்து, தன் வீரரை அழைத்து, "வடகலிங்கத்தைத் தாக்கிச் சோடகங்கனைச் சிறை பிடித்து வருமாறு வேந்தர் கட்டளை பிறந்துள்ளது. எழுமின் போருக்கு!" என்று கூறித் தன் யானைமீதேறிப் புறப்பட்டான். உடனே துணைத் தானைத் தலைவர்களான வாணகோவரையன், முடி கொண்ட சோழன் முதலியவர், தத்தம் மத்தயானையின்மீது ஏறிப் புறப்பட்டனர். நால்வகைச் சேனைகளும் அவர் பின்னே புறப்பட்டன.

10. அச்சேனை ஊழிப் பெருவெள்ளம் போலக் காட்சி அளித்தது. சேனை வீரர்கள் இரை வேட்டெழுந்த புலிகள் போலக் காட்சியளித்தார்கள். அப்படை கடலொலி போலவும் இடிமுழக்கம் போலவும் ஆரவாரம் செய்துகொண்டு, பாலாறு, குசைத்தலை, முகரி, பெண்ணை, வயலாறு, மண்ணாறு, பேராறு,

கோதாவிரி, பம்பை, கோதமை என்னும் ஆறுகளைக் கடந்து, கலிங்க நாட்டுள் நுழைந்தது; போர் முறைப்படி அந்நாட்டின் பகுதிகளைத் தீக்கொளுவிச் சூறையாடத் தொடங்கியது.

11. அச்செயல்களால் துன்புற்ற கலிங்க மக்கள், நடுநடுங்கித் தங்கள் மன்னன் அவையை அடைந்து, "அரசரே, சோழன் படைகள் நமது நாட்டின்மீது படையெடுத்துவந்து, ஊர்களையும் பட்டணங்களையும் சூறையாடுகின்றன! எங்களைக் காத்தருளவேண்டும்!" என்று கூறிச் சரண்புகுந்தார்கள். அது கேட்ட கலிங்க மன்னன், வெகுண்டெழுந்தான். கோபத்தால் அவன் புருவங்கள் நெற்றியிலேறின; கண்கள் சிவந்தன; மீசையும் உதடும் துடித்தன. அவன் பற்களைக் கடித்தான்; "அமைச்சர் பெருமக்களே, தானைத் தலைவர்களே, நாம் திறை செலுத்த மறுத்தமையால், சோழன் தன் படையை நம்மீது ஏவியுள்ளான் போலும்! நன்று நன்று! அபயன் வலியனே; ஆயினும், அவன் வரவில்லை. அவன் படைகள் மட்டுமே வந்துள்ளன. அப்படைகட்கு யான் எளியனோ? காட்டரண், கடலரண், மலையரண் ஆகிய மூவரணையும் பெற்றது நமது நாடென்பதனைச் சோழன் மறந்தான் போலும்! அவன் சேனையை எலிப்படையைப் பாம்பழிப்பது போலச் சிறிது நேரத்தில் அழிக்கின்றேன்! புறப்படுங்கள் போருக்கு!" என்று படபடத்துக் கூறினான்.

12. அமைச்சர் குழாத்தைச் சேர்ந்த எங்கராயன் என்பான் எழுந்து, "வேந்தரே, நீர் சினந்தாலும், உமக்கு உறுதி கூற வேண்டுவது என் போன்றோர் கடமை. பாண்டியர் ஐவரையும் அவர் நாட்டிலேயே தோல்வியுறச் செய்தது இப்படையே அன்றோ? சேரரைக் காந்தளூர்ச் சாலையிலும், விழிஞத்திலும் வெற்றி கண்டது இப்படைதான் என்பதை நீர் அறியீரா? வத்தவனைச் சக்கர கோட்டத்தில் வாட்டியது எப்படை? நவிலையிலும், அளத்தியிலும் சளுக்கியரைச் சாடிய இப்படையின் பெருமையை நீர் அறியீர் போலும்! இவ்வெற்றிகள் எல்லாம் சோழன் நேரிற்சென்று பெற்றவை அல்லவே! கருணாகரன் தலைமையிற்சென்ற தண்டின் கை வன்மையன்றோ இத்தனை வெற்றிகட்கும் காரணம்? இன்று நம் நாட்டின்

மீது படையெடுத்து வந்திருப்பதும் அதே சேனைதான் என்பதையும், அத்தொண்டைமானே படைத் தலைவன் என்பதையும் சிந்தித்துப் பின்னர்ப் போர் தொடங்குவது நலமெனத் தோன்றுகிறது. யான் கூறவேண்டியவற்றைக் கூறிவிட்டேன். பின்பு உமது விருப்பம்!'' என்று கூறி அமர்ந்தான்.

13. எங்கராயன் எடுத்துரைத்த இன்மொழிகள் சோடகங்கன் காதில் இடம் பெறவில்லை. 'கேடு வரும் பின்னே; மதி கெட்டு வரும் முன்னே,' என்னும் முதுமொழிக்கிணங்கக் கலிங்க வேந்தன் தனக்கு நல்லறிவு கொளுவிய அமைச்சனைப் பலவாறு கடிந்து கூறித் தன் படைக்கு முன் எப்படையும் நிற்கும் தரத்ததன்று என்று சொல்லிச் சோழன் படையை எதிர்த்து அழிக்கும்படி தன்னுடைய தானைத் தலைவர்கட்குக் கட்டளை இட்டான்.

14. கலிங்கர் படை கலித்தெழுந்தது. தேர், கரி, பரி, காலாள் என்ற நால்வகைப் படைகளும் பல்லியங்களார்ப்பப் புறப்பட்டன. கலிங்கர் படைக்கும் சோழர் படைக்கும் கடும் போர் மூண்டது. தேரைத் தேரும், கரியைக் கரியும், பரியைப் பரியும் எதிர்த்து இரு திறச் சேனைகளும் கடும்போர் புரிந்தன. வெற்றி தோல்வியின்றி இரு படைகளும் நீண்டநேரம் பொருது கொண்டிருந்த காலைக் கருணாகரன் மதகளிற்றின்மீதமர்ந்து, போர் முனையில் நுழைந்து, சங்கநாதம் புரிந்து, தன் வாளாயுதத்தைக் கையிலேந்திக் கண்டவர் நடுங்கும்படி கடும்போர் புரியத் தொடங்கினன். அவன் போர்க்களத்திற்புகுந்ததைக் கண்ட சோழர் படைகள், வீராவேசத்துடன் பொரத்தொடங்கின. பற்பல போர்களைப் புரிந்து பண்பட்ட சோழர் படை, சிறிது நேரத்தில் கலிங்கர் படையை முற்றிலும் வளைத்துக் கொண்டு சின்னபின்னம் செய்தது. அதன் வலிமைக்கு ஆற்றாது கலிங்கர் படை கால் வாங்கத் தலைப்பட்டது. கரிப்படை மிக்க கலிங்கர் சேனை முழுதும் வளைக்கப்பட்டுவிட்டமையால், நொடிப்பொழுதில் போர்க்களத்தில் குருதியாறு பாயத் தொடங்கியது. கொன்று குவிக்கப்பட்ட கரியும், பரியும் எண்ணிறந்தன ; குற்றுயிராய்ப் பதைத்துத் துடித்துப் பாரிற்புரண்-

டவை கணக்கற்றவை; வீரசுவர்க்கத்திற்கு விருந்தினரான வீரர் எண்ணிலடங்கார்.

15. தனது படைக்கு நேர்ந்த கதியைக் கண்ணுற்ற கலிங்க வேந்தனுன சோடகங்கன், உயிர் பிழைக்கக் கருதி ஓட்டமெடுத்தான். கலிங்கர் செல்வமனைத்தையும் கைக்கொண்டது கருணாகரன் படை. பின்னர்ச் சோழவீரர் சிலர் சோடகங்கனைச் சிறை பிடித்து வருமாறு ஏவப்பட்டனர். அவர்கள் கலிங்க வேந்தனைத் தேடித் திரிந்தபோது அவர்கள்முன் எதிர்ப்பட்ட கலிங்க வீரர், தம் தலையை முண்டனம் செய்துகொண்டு, தாம் சமண முனிவர் என்றும், பௌத்த பிட்சுக்கள் என்றும் கூறி, உயிர் பிழைத்தனர். சிலர், தம்மைப் பாணர் என்று கூறிக்கொண்டனர். வேறு வழியின்றிச் சிலர் சரண் புகுந்தனர். கலிங்க வீரர்கள் கதி இங்ஙனமாக, சோழ வீரர் சிலர் சாலையும், சோலையும், காடும், மலையும் ஆகிய எல்லா இடங்களிலும் தேடி, இறுதியில் ஒரு மலை முழையிற்பதுங்கியிருந்த கலிங்க வேந்தனைச் சிறை பிடித்துத் திரும்பினர்.

16. கருணாகரன் போரில் கிடைத்த பொருள்களோடும், கலிங்க வேந்தனோடும் வெற்றி வீரனாய்த் திரும்பினான். அவன் அபயன் முன்னிலையில் சோடகங்கனை நிறுத்தி, அடி பணிந்து நின்றான். சோழ மன்னன் அவனைப் பலபடப் புகழ்ந்து, அவனுக்குப் பட்டமும் பரிசிலும் வழங்கினான். அங்ஙனமே பிற படைத் தலைவர்கட்கும் சிறப்புப் பல செய்த பின்னர்ச் சோழன் சோடகங்கனை அரசர்க்குரிய முறையில் இருக்கச் செய்து, அறிவுரை பல வழங்கித் தனக்கு அவன் அடங்கிக் கப்பம் செலுத்த இசைவித்து, அவனைக் கலிங்க நாட்டுக்கு அனுப்பினான்.

17. 'வெண்பாவிற் புகழேந்தி; பரணிக்கோ ஜயங்கொண்டான்.' என்னும் வாக்கிற்கிணங்கக் குலோத்துங்கனுடைய அவைப் புலவர்களுள் ஒருவரான ஜயங்கொண்டார் இக்கலிங்கப் போரைச் சிறப்பித்துக் கலிங்கத்துப்பரணி என்னும் நூலை யாத்துள்ளார். அந்நூலின்கண் பண்டைத் தமிழர் நாகரிகத்தை விவரிக்கும் செய்திகள் பலவற்றைக் காணலாம். தமிழராகிய அனைவரும் படித்து இன்புறத்தக்கது அந்நூல்.

பயிற்சி :

I. விடை எழுதுக :—

1. சோழ நாட்டுத் தலைநகரங்கள் யாவை?
2. 'கங்கை கொண்ட சோழபுரம்' என்னும் பெயர்க் காரணம் யாது?
3. விசயதரனுக்குரிய வேறு பெயர்கள் யாவை?
4. சோடகங்கனுக்கு அமைச்சன் எங்கராயன் கூறியது யாது?
5. "தனது குன்றாணைப் பெரிதெனை மதித்துத் தருக்கியிருக்கின்றான் போலும்!"—சந்தர்ப்பம் கூறி விளக்குக.
6. இப்பாடம் எந்நூலைத் தழுவியது? அந்நூலின் ஆசிரியர் யார்? அவரைப்பற்றிப் புகழ்ந்து கூறியுள்ள செய்யுள் அடியை எழுதுக. அந்நூலிலிருந்து நாம் தெரிந்துகொள்ளக்கூடியது யாது?

II. எதிர்ச்சொல் எழுதுக :—

வெற்றி, குழப்பம், அவதி, கொடுமை, அலர்ந்த, கோபம், பொலிவு, புன்முறுவல், மறந்தான், பழி, அழி

III. வாக்கியத்தில் அமைத்தெழுதுக :—

ஈடுமெடுப்பும், நிகரற்ற, துணைத்தலைவர், தத்தம், காட்சி அளி, நடுநடுங்கி, குழாம், ஆர்த்தெழுந்தது, சின்னபின்னம்

IV. அகராதி பார்த்துப் பொருள் கூறுக :—

கோநகர், மக்கள், அதிபன், அரியணை, பொர, திறை, கழல், தருக்கி, தானைத்தலைவர், மத்தியானை, ஊழி, தீக்கொளுவி, வெகுண்டு, குழாம், சாடிய, தண்டு, கலித்தெழுந்தது, கரி, பரி, பல்லியங்களார்ப்ப, களிறு, கால் வாங்குதல், முறை

V. சொல்லியபடி செய்க :—

1. 'வேற்றுமை விரி' என்பது என்ன? சில உதாரணங்கள் தந்து விளக்குக.
2. 'விளித்தொடர்' என்பது என்ன? இப்பாடத்தினின்றும் சில உதாரணங்கள் தருக.
3. வேற்றுமை எத்தனை வகைப்படும்? அவற்றுள் ஒவ்வொன்றற்கும் உதாரணம் தருக.

9. செந்தமிழ்ப் புலவரும் ஷாஜஹானும்

1. நம் நாட்டிலிருந்த பண்டைக் காலப் புலவர் இரு வகையினராவர் : அரிய செய்யுட்கள் பல இயற்றிப் புரவலர்கள் முன் பாடி, அவர்களை மகிழ்வித்துப் பரிசில்கள் பெற்று வாழ்க்கை நடத்தியவர் ஒரு வகையினர் ; பிற தொழில்களில் ஈடுபட்டுப் புலமை எய்திச் செய்யுட்கள் இயற்றியவர் மற்றொரு வகையினர். ஔவையார், பெருஞ்சித்திரனர், பெருந்தலைச் சாத்தனர் முதலியோரை முதல் வகையிற்சேர்க்கலாம் ; மருத்துவன் தாமோதரனர், கூலவாணிகன் சாத்தனர், உழவன் நாகனர் முதலியவரை இரண்டாம் வகையிற்சேர்க்கலாம்.

2. இவ்விரு வகையினரும், பரிசில் பெற்று வறுமை நோய் களைய வேண்டியவராயும், பொருளீட்டும் பிற துறைகளிற்புக்கு வாழ்க்கையைச் செவ்விதிலமைத்துக்கொண்டவராயுமிருந்தபோதிலும், தம் மானவுணர்ச்சி கேடுறும் நிலையை விரும்பினரல்லர் ; அரசர்களும் நெறி முறை வழுவியவிடத்து அவர்களைக் கண்டித்துத் திருத்துவதற்கு அச்சங் கொண்டாரல்லர்.

3. சங்க காலத்துப் புலவர் பெருமக்களிடத்தே காணப்பட்ட சிறந்த பண்பாடு, பிற்காலத்துப் புலவர்களிடத்தும் காணப்படாமற் போகவில்லை. பன்னிரண்டாம் நூற்றுண்டுக்குப் பிற்பட்ட புலவர்கள், வாழ்க்கை நிலையிலும் நெஞ்சுறுதியிலும் மொழிப்பற்றிலும் மானவுணர்ச்சியிலும் சங்க காலப் புலவர்களுடன் ஒப்பு நோக்கக் கூடாதவர்களாயினரெனினும், ஒரு சிலர் அச்சிறப்புக்களுள் பலவற்றைப் பெற்றேயிருந்தனர். இத்தகைய பிற்காலப் புலவர்களுள் நெஞ்சுறுதிக்கு ஓர் எடுத்துக்காட்டாய் அமைந்தவர் பதினேழாம் நூற்றுண்டுப் புலவராய குமரகுருபரர் ஆவர்.

4. குமரகுருபரர், பொருநை ஆற்றங்கரை மீதுள்ள கைலாசபுரத்தில் (ஸ்ரீவைகுண்டம்), சண்முக சிகாமணிக் கவிராயருக்கும் சிவகாமசுந்தரி அம்மையாருக்கும் அருந்தவச்

செல்வராய் உதித்தார். இவர் ஐந்தாண்டளவும் மூங்கையாயிருந்து, பின்னர்ப் பேசும் திறன் பெற்றார். இவருடைய ஆசிரியர் எவரென்பது தெரியவில்லையாயினும், தருமபுர ஆதீனத்து நான்காவது குருவாகிய மாசிலாமணித் தேசிகரை இவர் தம் ஞானாசிரியராகக் கொண்டிருந்தார்.

5. இவர் தம் ஞானாசிரியரை அடையுமுன்னரே, கந்தர் கலி வெண்பா, கயிலைக் கலம்பகம், மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், மீனாட்சியம்மை குறம், மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை, மதுரைக் கலம்பகம், நீதி நெறி விளக்கம், முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ், சிதம்பர மும்மணிக் கோவை, சிதம்பரச் செய்யுட் கோவை, சிவகாமியம்மை இரட்டைமணி மாலை, பண்டார மும்மணிக் கோவை, திருவாரூர் நான்மணி மாலை என்னும் நூல்களை இயற்றியருளினார். ஞானாசிரியரை அடைந்த பிறகு இவர் பாடியவை காசிக் கலம்பகம், சகல கலாவல்லி மாலை, காசித் துண்டி விநாயகர் பதிகம் என்பவைகளேயாகும்.

6. ஞானாசிரியர் கட்டளைப்படி குமரகுருபரர் அறச்சாலை அமைக்கக் கருதிக் காசிக்குச் சென்றார். அக்காலத்தில், காசி மொகலாயர் ஆட்சிக்குட்பட்டிருந்தது. ஷாஜஹான் என்ற மொகலாயப் பேரரசர், அது போது வடநாட்டை ஆண்டு கொண்டிருந்தார். அவ்வடநாட்டு மக்கள் பேசிய மொழியும், அரசாங்க மொழியும் இந்துஸ்தானியாய் இருந்தது. அம்மொழி அறியாத தமிழர் வடநாடு சென்றால் இரண்டொரு நாள் தங்கியிருத்தலும் துன்பமாயிருந்தது.

7. அவ்வாறிருந்தும், குமரகுருபரர் காசிக்குச் செல்ல அஞ்சினாரல்லர். இவர் இளம்பருவத்திலிருந்தே அஞ்சாநெஞ்சினர்; தந்நலமற்றவர்; பொருட்பற்றற்றவர்; பரிசில் கருதிப் பாட விழையாதவர்; மொழிப்புலமை நிரம்பியவர்; துறவு பூண்டவர்; எதனையும் எளிதில் உணரவல்லவர்; கற்கவல்லவர். இவ்வருங்குணங்களை அறிந்தே மாசிலாமணித் தேசிகர் இவரைக் காசிக்கு அனுப்பி வைத்தார்.

8. காசி சென்றடைந்த குமரகுருபரர், அங்கிருந்த மொழி வேறுபாட்டினை அறிந்தார்; அரசரை நேரிற்கண்டு உரையாடத்

தாம் கற்ற தமிழ் மொழி பயன்படாதென்பதை அறிந்தார்; அரசரைக் கண்டு அறநிலையம் காண இடமும் அனுமதியும் பெற வேண்டுமென அவாக் கொண்டார்; இந்த அவாவினை நிறைவேற்றக் கருதி, இந்துஸ்தானி மொழியை எளிதில் கற்றறிந்தார்.

9. குமரகுருபரர் ஒரு நாள் மன்னரைக் காண அரச அவைக்குச் சென்றார். அங்கிருந்த அவைப் புலவர்கள் வினாக்கள் பல எழுப்ப, அவற்றிற்குக் குமரகுருபரர், அரசரும் அவைப்புலவர்களும் வியக்குமாறு விடையிறுத்தார். குமரகுருபரர் இல்லறவியல் குறித்து விளக்கிய காலை, "இத்துணை நுண்ணிய விஷயங்களை அறிந்திருக்கும் இவர் உண்மைத் துறவியராயிருத்தல் இயலுமோ? அனுபவத்தாலன்றி இவை அறியக்கூடியவை அல்லவே!" என்னும் ஐயப்பாட்டை அவைப் புலவர் கிளப்பினர்.

10. குமரகுருபரர் அதைக்கேட்டு அஞ்சவில்லை. மறுநாள் இவ்வையப்பாட்டைக் களைவதாகக் கூறி, களிம்பேறிய செப்புப்பாத்திரம் ஒன்றை வருவித்து, அதை அவையோர் அறியுமாறு மலத்தில் புதைக்கச் செய்து, மருந்தில்லாமலே, மறுநாள் அதைப் பொன்னாக்குவதாகக் கூறி, அவையை விட்டகன்றார்.

11. மறுநாள் குமரகுருபரர் அவைக்கு வந்தபோது, அவருடைய பொன்செய்யும் வித்தையைக் காணப் பலர் பேரவாக் கொண்டு அங்குக் குழுமியிருந்தனர். குமரகுருபரர், மலத்திற் புதைத்திருந்த செப்புப் பாத்திரத்தைத் துப்புரவு செய்து, அவையின் முன் கொணரச் செய்து, அதனைத் துடைத்துப் பளபளப்பாக்கிப் பொன் என அரசர் முன் வைத்தார். அவையில் இருந்தார் அனைவரும் இச்செயல் கண்டு கொதித்தெழுந்து, "இது பொன் செய்யும் வித்தையன்று; மலத்தின் புளிப்புச் சத்தால் செப்பின்மேலிருந்த களிம்பு நீங்கிப் பாத்திரம் பளபளப்பாய்த் தெரிகிறது," என்று கூறினர்.

12. குமரகுருபரர், அவைப் புலவரின் ஆத்திரங் கண்டு அஞ்சாமல், புன்னகை பூத்த முகத்துடன், "நீங்கள் மலம் புளிப்புச் சத்துடையது என்றீர்களே! அதைத் தின்று அனுப-

வித்தே கூறுகின்றீர்கள் போலும்!'' என்ருர். இதைக் கேட்ட-தும் வெகுண்டெழுந்த சிலர் அவரை அணுகியபோதும், அவர் உலையா உளவுரம் பூண்டு நின்று, ''நேற்று நாம் இல்லறவியல் குறித்து விளக்கம் கூறியபோது நீவிர் கோரிய அனுபவம் எமக்-கும் வெகுளியை உண்டாக்கியிருக்குமே! வெகுளி உம்முடைய தனிச் சொத்தன்றே?'' என்று விடையிறுக்க, அவர்கள் அஞ்சித் தங்கள் இருக்கைகளுக்கேகினுர்கள்; மற்றவர் நாணித் தலை குனிந்தனர்.

13. இங்ஙனம் குமரகுருபரர் அம்மன்னர் மன்னரின் அவையில் பல துறைகளில் சொற்போர் நிகழ்த்திப் புலவரை வென்றமை கண்ட ஷாஜஹான், மகிழ்ச்சிப் பெருக்கடைந்து, இப்புலவர் பெருமான் விரும்பிய யாவற்றையும் அளித்து, காசியில் அறச்சாலை அமைக்க அனுமதியும் இடமும் கொடுத்து உதவினுர். குமரகுருபரர், நெடுநாள் காசியில் தங்கி, பலருக்குத் தமிழ் பயில்வித்தும் சமயத் தொண்டாற்றியும் வாழ்ந்து, பின்னர்க் காலகதி அடைந்தார்.

14. இப்புலவர் பெருமான், தம் வாழ்நாள் முழுவதும் தமக்கென இன்றித் தமிழுக்காகவும் தாம் மேற்கொண்டொழு-கிய சைவ சமயத்துக்காகவும் உலையாது உழைத்து வந்தார். இவர் எக்காரணம் கொண்டும், எவர்மாட்டும், தம் மனத்திற்-குச் சரியெனத் தோன்ருததைச் சொல்லியதுமில்லை; செய்ததும் இல்லை. அச்சமோ, இச்சகமோ இவர் மனத்தைச் சற்றும் அசைக்க முடியாதவைகளாயின. இவ்வருங்குணநலன்கள் அமையப்பெற்றிருந்தமையினுலேயே, மன்னர் மன்னராய் விளங்கிய ஷாஜஹானின் நட்பையும், புறச்சமய மக்களிடையே யும் வேற்று மொழியினரிடையேயும் மட்டற்ற புகழையும் பெருமையையும் உதவியையும் இவர் பெற்றுத் திகழ்ந்தார்.

15. இவர் போன்ற புலவர் பலரைக் கொண்டது நம் தமிழ் நாடு. குமரகுருபரர் சமயத் துறையில் தொண்டாற்றத் தம் அறிவின் ஆற்றலை வெளிப்படுத்தி வடநாட்டில் வெற்றிக் கொடி நாட்டினுர். வீரத்தை நிலை நாட்ட இமயத்தில்

இலச்சினை பொறித்த புலமை சான்ற தமிழ் மன்னர் பலரைக் கொண்டது நம் தமிழ் நாடு. இவர்களைப் பற்றிய விரிவான செய்திகளை நீங்கள் மேல் வகுப்புக்களிற்படிக்கலாம்.

பயிற்சி :

I. விடை எழுதுக :—

1. பண்டைக்காலப் புலவரை எத்தனை வகையினராகப் பிரிக்கலாம் ? ஏன் ?
2. அவர்களின் குணநலன்கள் யாவை ?
3. ' குமரகுருபரர் ' என்பவர் யார் ?
4. குமரகுருபரர் இயற்றிய நூல்கள் யாவை ?
5. குமரகுருபரர் காசிக்குச் சென்றதேன் ?
6. ஷாஜஹான் அவையில் நடந்ததென்ன ?
7. பொன் செய்யும் வித்தை எதற்காகக் கூறப்பட்டது ?
8. இப்புலவரைக் குறித்து நீ அறிவன யாவை ?

II. எதிர்ச்சொற்கள் எழுதுக :—

புரவலர், அச்சம், விருப்பம், செல்வர், தந்நலம், துறவறம், வேறுபாடு, எளிதில், வெகுளி, அறம்

III. வாக்கியங்களில் அமைக்க :—

அரிய செய்யுள்கள், மகிழ்வித்து, வறுமை நோய், மானவுணர்ச்சி, நெஞ்சுறுதி, மொழிப் பற்று, மொழிப் புலமை, பொருட்பற்று, வேறுபாடு, தப்புரவு, உலையா, உளவுரம்

IV. சொல்லியுள்ளபடி செய்க :—

1. குமரகுருபரர் மறு நாள் அச்செப்புப் பாத்திரத்தைப் பொன்னாக்குவதாகக் கூறினர். (தன் வினையைப் பிற வினையாக்குக.)

2. குமரகுருபரர் இதைக் கண்டு அஞ்சாமல், மறு நாள் ஐயப்பாட்டைக் களைவதாகக் கூறி, களிம்பேறிய செப்புப் பாத்திரம் ஒன்றை வருவித்து, அதை மலத்தில் புதைக்கச் செய்து, மறு நாள் பொன்னாக்குவதாகக் கூறினர். (இதை ஐந்து தனி வாக்கியங்களாக்குக.)

V. அகராதி பார்த்துப் பொருள் எழுதுக :—

புரவலர், கூலவாணிகன், மரபு, மூக்கை, தப்புரவு, வெகுளி, உலையா, இருக்கை, இலச்சினை

10. திருமதி விஜயலட்சுமி அம்மையார்

1. திரேதாயுகத்தில் சம்பரனுடன் போர் புரியச் சென்ற தசரதனுக்குக் கைகேயி தேர்ச் சாரதியானாள் என்பதும், துவாபரயுகத்தில் நரகாசுரனுடன் போர் புரிந்த கிருஷ்ணனுக்குச் சத்தியபாமை தேர் ஓட்டினாள் என்பதும் புராணக் கதைகள் என நம்பாமல் விலக்குகின்றவர் உளர். பல்லாயிர மைலுக்கப்பாலுள்ள ரஷ்யா, அமெரிக்கா முதலிய நாடுகளுக்கு நம் நாட்டுப் பெண்மணிகள் இராயபாரிகளாகவும், ஸ்தானிகர்களாகவும் சென்று பணியாற்றி வருகின்றார்கள் இக்காலத்தில். இது கண்டு நாம் உளம் பூரிக்கிறோம். இங்ஙனம் பணியாற்றும் பெண்களுள் தலைமை வாய்ந்தவர் திருமதி விஜயலட்சுமி அம்மையார்.

2. விஜயலட்சுமியம்மையாரின் முன்னோருள் ஒருவர் டில்லி பாதுஷாவின் அவையில் முதன்மையான அலுவலராய்

வேலை பார்த்து வந்தார். அவர் பெயர் கங்காதர நேஹ்ரு என்பதாகும். அவருடைய அருந்தவப் புதல்வராய் 1861-ஆம் ஆண்டு, மேத் திங்கள் நம் அம்மையாரின் தந்தையாராகிய பண்டித மோதிலால் நேஹ்ரு தோன்றினர். மோதிலால் நெஹ்ரு-விற்கு இருவர் தமையன்மாருமிருந்தனர்.

3. மோதிலால் நெஹ்ரு இளமையிலேயே கல்வியை நன்கு கற்று வக்கில் தேர்வில் தேறினர்; பின்னர் அலகாபாது நகரில் நீதிவாதத் தொழிலை மேற்கொண்டு வழக்கறிஞராய் வேலை பார்த்துப் பெரும்பொருள் ஈட்டினர். அது போது குடும்பப் பொறுப்பை ஏற்று நடத்தி வந்த தமையன்மார் இரு-வரும் பெரும்பிரிவெய்தினர். அதனால், மோதிலால் தாமே தமது குடும்பப் பொறுப்பை ஏற்று நடத்தக் கடமைப்பட்ட-வராயினமையின், சொரூப ராணி என்னும் அம்மையாரை மணந்தார். அவ்வம்மையார் அருங்குணம் வாய்ந்தவர். அவர்-களுடைய அன்பு கெழுமிய இல்லறம் நல்லறமாகத் திகழ்ந்து வருங்கால், ஒருவர் தனயரும் இருவர் புதல்வியரும் தோன்றி-னர். அத்தனயரே நம் நாட்டு முதலமைச்சராய ஜவாஹர்லால் நெஹ்ரு. புதல்வியர் இருவருள் மூத்தவரே திருமதி விஜய-லட்சுமி அம்மையார்.

4. விஜயலட்சுமியம்மையார் 1900-ஆம் ஆண்டு, ஆகஸ்டு திங்கள், 18-ஆம் நாள் பிறந்தார். இவர் அழகே உருவெடுத்தாற்போல விளங்கினமையாலும், சொரூபராணி-யாரின் குமாரியாராதலினாலும் 'சொரூப குமாரி' என்று வழங்-கப்பட்டார். மோதிலால் இவ்வம்மையார் தோன்றிய பின்பு எங்குச் செலினும், எத்தொழிலைப் புரியினும், வெற்றியே அடைந்து வந்தார். அதனால் அவர் தம் மகளாரை விஜயலட்சுமி என்று அன்புடன் வழங்கி வந்தார். இப்பெயரே இப்பொழுது பொது மக்களால் நன்கு மதித்து வழங்கப்படும் பெயர். அலகாபாது நகரில் அதி அழகாக அமைக்கப்பட்ட ஆனந்த பவனமே அம்மையாரின் இல்லம். அம்மையார் அதில் தம் தமையனருடன் அகமகிழ்ந்து, சீரும் சிறப்பும் பெற்று, வளர்ந்து வந்தார். இவர் தளர்நடைப் பருவத்தை எய்திய

பொழுது இவருடைய தந்தையார் ஒரு குதிரை வாங்கினர். அம்மையார் தம் தமையனுருடன் அக்குதிரைமீது ஏறி, அஞ்சாது சவாரிசெய்து வந்தார். இவரிடம் இளமையிலிருந்தே வீரமும், மனத் திடமும் நிலை பெற்றிருந்தன.

5. இவர் ஐயாட்டைப் பருவத்தை அடைந்தபொழுது, இவருடைய பெற்றோர் நற்குணம் நிறைந்த ஹபேர் என்ற ஆங்கில மங்கையரை இவருக்குச் செவிலித் தாயராக அமர்த்தினர். அம்மங்கையார் விஜயலட்சுமியம்மையாருக்கு வளர்ப்புத் தாயராய் இருந்ததோடமையாது, அறிவுறுத்தும் ஆசான் போலவும் இருந்து, வேண்டிய பணிகளைச் செய்து வந்தார். மோதிலால் தம் மகளாரைப் பள்ளிக்கனுப்ப மனமிசையாது, தம் இல்லத்திலேயே ஆசிரியரை அமர்த்திக் கல்வி கற்பித்து வந்தார். அவ்வமயம் மோதிலால் அரசியலில் தலையிடவே, அரசியல் வாதிகள் ஆனந்தபவனத்தில் வந்து குழுமினர்கள். அதனல், அம்மையாருக்குப் பெரியார்களைப் பேணும் வாய்ப்பும், அரசியலறிவும், பொது அறிவும் உண்டாயின.

6. பஞ்சாபில் 1919-ஆம் ஆண்டில் ஒரு பெரிய கலகம் நிகழ்ந்தது. அதனை அடக்க வெள்ளையர் இந்தியர் பலரைக் கொன்று குவித்தனர். இப்படுகொலையே விஜயலட்சுமியம்மையாரையும், நெஹ்ரூவையும் அரசியற்புரட்சியில் ஈடுபடச் செய்ததென்னலாம். இதுவே மிதவாதியாய் இருந்த மோதிலால் நெஹ்ரூவையும் புரட்சியிலிறங்கத் தூண்டியது.

7. காந்தியடிகள் 1920-ஆம் ஆண்டில் தமது அறப் போரை ஆரம்பித்தார். "நாட்டின் நலனுக்காக அஹிம்ஸையை மேற்கொள்ள வேண்டும். அடி, சிறை முதலியன ஏற்க நேரிட்டாலும், பொறுமையுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். தீங்கு செய்தார்க்கும் தீங்கு செய்யக் கூடாது. உயிரிழக்க நேரினும் உறுதியை இழத்தல் கூடாது," என்பவையே அவ்வியக்கக் கொள்கைகளாகும். இது சம்பந்தமாகக் காந்தியடிகளனுப்பிய சுற்றறிக்கையில் நம் விஜயலட்சுமியாரே முதலில் கையொப்பமிட்டனர். பின்னரே இவர் குடும்பத்தினர் கையொப்பமிட்டனர்.

8. சின்னாட்களுக்குப் பின்னர்க் காந்தியடிகள் விஜய லட்சுமியாரைச் சந்திக்க நேர்ந்தது. அப்பொழுது அவர் அம்மையாரின் அழகிற்கும் அறிவிற்கும் ஏற்ற கணவரொருவரைத் தேட வேண்டுமென எண்ணிச் சென்றார். ஒரு சமயம் காந்தியடிகள் மகாதேவ தேசாயுடன் ஆனந்தபவனத்தில் தங்கினார்; அவ்வமயம் 'மாடர்ன் ரெவ்யூ' என்னும் ஆங்கிலப் பத்திரிகையில் வெளி வந்த 'குருநாதரின் பாதந்தில்' என்ற கட்டுரையைப் படித்துப் பார்க்கும்படி அப்பத்திரிகைப் பிரதியொன்றை அம்மையாரிடம் கொடுத்தார். அதனைப் பெற்றுப் படித்த அம்மையார், அதன் சொல்லழகையும் பொருளழகையும் கண்டார்; அதனை இயற்றிய ஆசிரியரின் பெயரைக் கூறும்படி தேசாயை வினவினார். அதற்கு அவர், "இக்கட்டுரையாசிரியர் நுண்ணறிவும், நற்குணமும் வாய்ந்தவர்; பாரிஸ்டர் பட்டம் பெற்றவர்; இரஞ்சித பண்டிதர் என்னும் பெயரினர்," என்று கூறினார்.

9. நாட்கள் சில கடந்தன. ஒரு நாள் விஜயலட்சுமியாருக்குத் தாம் முன்பு படித்த கட்டுரை ஆசிரியரைக் காணும் வாய்ப்புக் கிட்டியது. ஒருவரை ஒருவர் கண்டபொழுதே இருவர் மனத்தும் ஒரு தனி அன்பு ஏற்பட்டது. அதை அறிந்த பெற்றோர், 1921-ஆம் ஆண்டு, மேத் திங்கள், பத்தாம் நாள் அம்மையாரை இரஞ்சித பண்டிதருக்குத் திருமணம் செய்வித்தனர்.

10. விஜயலட்சுமியம்மையார் பின்னர்ச் சின்னாள் கழித்துத் தமது கணவருடன் கத்தியவாருக்குச் சென்றார். காதலர் இருவரும் கல்வியிற்சிறந்தவர்; ஒரே கொள்கையைப் பின்பற்றுபவர்; ஆதலின், கருத்தொருமித்து, மலரும் மணமும் போல இல்வாழ்க்கையை நல்வாழ்க்கையாக நடத்தி வந்தனர்.

11. அம்மையார் தம் கணவர், தமையனார், மதனியார் முதலியவருடன் 1926-ஆம் ஆண்டு இங்கிலாந்துக்குச் சென்றார். ஆண்டு அவர்கள் பல இடங்களிலும் வாழ்கின்ற மக்களின் நடை உடை பாவனைகளையும், செல்வச் செருக்கையும், ஆடம்பர வாழ்க்கையினையும் கண்டார்கள். அம்மையார்

மனங்கொதித்தார்: "இவர்கள் இவ்வாறு வாழ்வது நம் நாட்டுச் செல்வத்தைச் சுரண்டுவதனாலன்றோ!" என்று எண்ணினார்; "இதற்கொரு வழி ஏற்பட்டாலொழிய நம் அடிமைத்தளை தகராது," என்று எண்ணினார். பின்னர்ச் சில நாட்கள் கழித்து இந்தியா வந்தடைந்தனர்.

12. நெஹ்ருவின் தலைமையில் 1927-ஆம் ஆண்டு காங்கிரஸ் மகாசபை கூடியது. அப்பொழுது அச்சபையினர் சில தீர்மானங்களை நிறைவேற்றி, உரிமைப்போர் தொடங்கினர். அச்சமயம் ஆங்கிலேயர் 'சைமன் கமிஷன்' என்ற ஒன்பதின்மர் கொண்ட ஆராய்ச்சிக் குழுவை இந்தியாவுக்கு அனுப்பினர். அதனை ஏற்க மறுத்த காங்கிரஸார் வேலை நிறுத்தம் செய்து, போலீசாரிடம் தடியடி பட்டனர். இதனைக் கண்ணுற்ற அம்மையார் அடக்குமுறையை எதிர்த்துப் போர் தொடங்கினார்; இவருடைய வீர முழக்கத்தைக் கேட்ட அரசியலார், இவரையும், கமலா நேஹ்ருவையும், கிருஷ்ணபாயையும் சிறைப் படுத்தினர். அப்போது அம்மையாருக்கு ஓராண்டு கடுங்காவலும் அபராதமும் விதிக்கப்பட்டன. அம்மையார் பல இன்னல்களுக்கிடையில் சிறையில் ஓராண்டு இருந்து விடுதலை பெற்றார்.

13. 1936-ஆம் ஆண்டில் நடந்த தேர்தலில் பெரும்பாலும் காங்கிரஸாரே வெற்றி பெற்றனர். அதன் பயனாக அமைச்சர் சபை அமைக்கும் பொறுப்பும் அவர்க்குக் கிட்டியது. அப்பொழுது, பலர் தூண்டுதலால் விஜயலட்சுமியார் தேர்விற்கு நின்று வெற்றி பெற்றார். பின்னர் இவர் 1937-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் ஸ்தலஸ்தாபன மந்திரியாரானார்; பல சீர்திருத்தச் சட்டங்களை இயற்றித் தம் கடமையைத் திறம்படச் செய்தார். ஆனால், அச்சட்டங்களை அமுலுக்குக் கொண்டுவர அரசாங்கம் இடந்தர மறுக்கவே, காங்கிரஸார் முழு உரிமைக்குப் போராடினர். அப்பொழுது இரண்டாம் உலகப் போர் தொடங்கியது. அதற்காக ஆங்கிலேயர் காங்கிரஸ் மந்திரிகளைக் கலந்தாலோசியாமல் இந்தியாவையும் அப்போரில் ஈடுபடச் செய்தனர். அதனால் வெறுப்புற்ற மந்திரிகள், 1939-ஆம் ஆண்டு பதவியிலிருந்து விலகினார்கள்.

14. பின்னர்க் காங்கிரஸார் போர்க்காலத்தில் அரசியலார்க்கு இன்னல் நேரா வண்ணம் மீண்டும் அறப்போர் தொடங்கினர். அதைக் கண்ட அரசாங்கம் வெகுண்டு, 1940-ஆம் ஆண்டு, டிசம்பர்த் திங்கள், 9-ஆம் நாள், விஜயலட்சுமியாரைச் சிறைப்படுத்திப் பின்னர் விடுதலை செய்தது: 1942-ஆம் ஆண்டு, ஆகஸ்டு திங்கள், 12-ஆம் நாள் நள்ளிரவில் மீண்டும் இவரை அரசியலார் சிறைப்படுத்தினர். அதற்காகச் சிறிதும் மனம் கலங்காத அம்மையார், தம் மகளிரை எழுப்பி விஷயத்தைத் தெரிவித்து, விடை பெற்றுச் சென்றார். சிறை சென்ற அம்மையார் பல இன்னல்களை அனுபவித்து, மீண்டும் விடுதலையடைந்தார்.

15. அமெரிக்காவில் ஐக்கிய தேச மாநாடொன்று 1944-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்களில் நடந்தது. விஜயலட்சுமியார் அங்குச் சென்று, இந்திய நாட்டு நிலையைப் பற்றிப் பலபடப் பகர்ந்தார். அதைக்கேட்ட மாநாட்டவர் அம்மையாரின் சொல் வன்மை, சுறுசுறுப்பு, அஞ்சாமை முதலியனவற்றைக் கண்டு வியப்பெய்தினர். அதனால், இந்திய நாட்டிற்கே ஒரு தனிப்பெருமை உண்டாயிற்று. இவர் தமது பேச்சால், இந்தியா விடுதலை பெற்றாலன்றி உலகம் அமைதி அடையாது என்பதை அமெரிக்கர் நன்கு உணரும்படி செய்து மீண்டார்.

16. இத்தகைய சிறந்த வீரத்தாயராய் விளங்கும் அம்மையார், இப்பொழுது இந்திய ஸ்தானிகர் குழுவினருள் ஒருவராய் விளங்குகிறார். இவருடைய நாட்டுப் பற்றையும், நாட்டுத் தொண்டையும், தந்நலமற்ற வாழ்க்கையையும் இந்திய மக்களாகிய நாம் போற்றக் கடமைப்பட்டுள்ளோம்.

பயிற்சி :

I. விடை எழுதுக :—

1. பெண்களின் வீரத்திற்கு இரு புராணச் சான்றுகள் தருக.
2. விஜயலட்சுமி அம்மையாரின் வரலாற்றைச் சுருக்கிக் கூறுக.
3. விஜயலட்சுமி என்று பெயர் வரக் காரணம் யாது?
4. அம்மையார் அரசியலில் ஈடுபட ஏதுவாய் இருந்தது எது?

5. 1920ல் காந்தியடிகள் ஏற்படுத்திய இயக்கத்தின் கொள்கைகள் யாவை? அவ்வியக்கத்திற்சேர முதலில் கையொப்பமிட்டவர் யார்?
6. அம்மையாரது கணவர் பெயர் யாது? ஏன் அவரை மணக்க விரும்பினர்? எப்போது திருமணம் நடந்தது?
7. "இதற்கொரு வழி ஏற்பட்டாலொழிய நம்மடிமைத்தளை தகராது."—சந்தர்ப்பம் கூறி விளக்குக.
8. அம்மையார் எவ்வாண்டு, ஏன் சிறையிடப்பட்டார்?
9. 1939ல் காங்கிரஸ் மந்திரி சபை ஏன் கலைக்கப்பட்டது?

II. எதிர்ச்சொற்கள் எழுதுக :—

வசை, கலகம், செருக்கு, எதிர்த்து, சுறுசுறுப்பு, விடுதலை

III. வாக்கியங்களில் வைத்தெழுதுக :—

செல்வச்செருக்கு, தகராறு, திறம்பட, நேராவண்ணம், வெகுண்டு, பணியாற்றி, ஈட்டினர், பிரிவெய்தினர்

IV. அகராதி பார்த்துப் பொருள் எழுதுக :—

எய்து, ஈட்டு, வெகுளி, வண்ணம், செருக்கு, வசை, நங்கை, திரு, ஐயாட்டைப்பருவம், ஆசான், குழுமினர்

V. இலக்கணம் கூறுக :—

1. 2, 3, 4, 5, 6, 7 - ஆம் வேற்றுமைகளுக்கு இப்பாடத்திலிருந்து இரண்டிரண்டு உதாரணங்கள் தருக.

2. சைமன் கமிஷனை ஏற்க மறுத்து வேலை நிறுத்தம் செய்தபோது காங்கிரஸ்காரர்கள் எல்லாரும் தடியால் அடிக்கப்பட்டனர்.—(தன்வினையாக்குக.)

11. பண்டைப் புலவர்களுடைய பண்பாடுகள்

1. சங்க காலப் புலவர்களின் பாடல்களை நன்கு ஆராய்ந்தால், அப்புலவர்களின் பண்பாடுகள் தெரிய வருகின்றன. பரந்த மனப்பான்மையும், பரிந்துருகும் அருங்கருணையும், சிறந்த செல்வாக்கும், அரசரும் பிறரும் நடுவுநிலை தவறின் அவர்கட்கு இடித்துரைக்கும் மனவுறுதியும் அவர்களிடத்தே திகழ்ந்த அருங்குணங்களாகும்.

2. சங்க நூல்களுள் 'புறநானூறு' என்பதும் ஒன்று. அது நானூறு பாக்களைக் கொண்டது. அப்பாக்களைப் பாடிய புலவர் பலர். அவர்களுள் கோவூர் கிழார் என்பவர் ஒருவர். அவர் காலத்தில் நெடுங்கிள்ளி, நலங்கிள்ளி என்ற சோழ மன்னர் இருவர் இருந்தனர். அவர் அரசுரிமை காரணமாகப் பல இடங்களில் பொருது, இறுதியில் நெடுங்கிள்ளி சோழ நாட்டைக் கைவசப்படுத்திக்கொண்டான். எனவே, நலங்கிள்ளி தனக்குரிய பாகத்தைப் பெறுதற்கெண்ணி, நெடுங்கிள்ளி தங்கியிருந்த ஆவூர்க்கோட்டையை முற்றுகை செய்தான்.

3. அம்முற்றுகை நெடுங்காலம் நீடித்தது. அது காரணமாகக் கோட்டைக்குள்ளிருந்த மக்களும் பிற உயிர்களும் இயம்புதற்கரிய இன்னல்களுக்குள்ளானார்கள். அவ்வுயிர்கள்பால் இரக்கம் கொண்ட கோவூர் கிழார், ஆவூர் அரணை அடைந்தார். அக்காலத்தில் அரசர்களை எத்தருணத்திலும் காணத்தக்க உரிமை புலவர்கட்கிருந்தது. ஆதலால், ஆவூர்க் கோட்டையை முற்றுகையிட்டிருந்த வீரர், புலவரைத் தடை செய்யாது உள்ளே போக விட்டனர். பகைவர் உள்ளே வாராதபடி அடைக்கப்பட்டிருந்த கோட்டை வாயில்கள், புலவர்க்குத் திறக்கப்பட்டன.

4. புலவர் உள்ளே சென்றார்; நெடுங்கிள்ளியை நேரிற் கண்டு, அவனால் பரிந்து வரவேற்கப்பெற்று, அவனருகில் அமர்ந்து, "அரசரே, யான் கூறுவதைக் கேளும்: யானைகள்

எல்லாம் நீரில் முழுகாமலும், அரிசிக்கவளங்களைப் பெருமலும், நிலத்தின்மீது புரளும் கைகளை உடையனவாய்ப் பெருமூச்செறிந்து இடி போல முழங்கி நிற்கின்றன. வீடுதோறும் குழந்தைகள் பாலின்றி அழாநின்றன. மகளிர் தம்மை அலங்கரித்துக்கொள்ளாமல் அலங்கோலமாகக் காட்சியளிக்கின்றனர். குடிமக்களெல்லாரும் பசிப்பிணியால் தவிக்கின்றார்கள். இவற்றை நீர் ஒரு சிறிதும் பொருட்படுத்தாமல், உமது மாளிகையில் இனிது வீற்றிருத்தல் கொடிதன்றோ? நீர் தரும முறை தவறுதவராயின், உம் பங்காளியை அழைத்து, 'இக்கோட்டை உன்னுடையதன்றோ?' எனக் கூறித் திறந்து விடுவீராக. இன்றேல், போர் புரிந்து, உம் பகைவனைப் புறங்காட்டச் செய்து, உமது வீரத்தை வெளிப்படுத்துவீராக. இரண்டுஞ் செய்யாது, அடைக்கப்பட்ட அரணுக்குள்ளே அடங்கிக்கிடப்பது, ஆராயுமிடத்து, மிக நாணுந்தன்மையது!'' என்னும் அரிய கருத்துக்கள் அமைந்த செய்யுளைக் கூறி, அவன் கோட்டையைத் திறக்கும்படி செய்தனர்.

5. இவ்வரலாற்றால் அக்காலப் புலவர்கள் உயிர்களிடத்தே கொண்டிருந்த கருணையும், அரசனுயினும், நெறி தவறியவிடத்து இடித்துக் கூறும் மனவுறுதியும் நன்கு அறியக் கிடக்கின்றன. அன்றியும், அக்காலப் புலவர்கள் அரசர்கள் அளித்த பரிசிலுக்காகத் தங்களை அடிமைப்படுத்திக்கொள்ளும் மனப்பான்மை ஒரு சிறிதுமின்றிச் சுயமரியாதை மிக்கவர்களாய் வாழ்ந்தார்கள் என்னும் உண்மையை விளக்கும் பல செய்திகள் பண்டை நூல்களில் காணக் கிடக்கின்றன. அவற்றுள் இரண்டனை ஈண்டுக் காண்போம்:

6. பண்டைக் காலத்தில் நம் தமிழ் நாட்டில் மும்முடி வேந்தரைத் தவிர, வேறு பல சிற்றரசர்களும் வாழ்ந்து வந்தார்கள். அத்தகைய சிற்றரசர்களுள் இளங்கண்டீரக்கோ, இளவிச்சிக்கோ என்ற இருவர் இருந்தனர். ஒரு நாள் அவ்விருவரும் ஓரிடத்திற் சேர்ந்திருந்த போது அவர்களைப் பெருந்தலைச் சாத்தனர் என்ற புலவர் கண்டார். அவர் இளங்கண்டீரக்கோவை மார்புறத் தழுவி, மகிழ்ச்சி தெரிவித்துவிட்டு, இளவிச்சிக்கோவைப் புறக்கணித்து அமர்ந்தார்.

7. புலவர் செயலாற் பெரிதுஞ் சினமுற்ற இளவிச்சிக்கோ, அவரை நோக்கி, "புலவீர், நீர் எம்மைத் தழுவாமைக்குக் காரணம் என்னை?" என்றான். அதற்குப் புலவர், "சிறந்த மலைப்பக்கத்தில் தம் கணவர் நெடுந்தூரம் சென்றாலும், அவர் பெண்டிரும் தம் தரத்திலே நின்று புலவர்கள் விரும்பப் பெண் யானைக் கன்றுகளைப் பரிசிலாயளிக்கும் பெரும்புகழுடைய கண்டீரக்கோ இவனாகலின், தழுவினேன். நீயும் நன்னன் குலத்துதித்த பெருமையும் இயற்கைக் குணங்களுமுடையவனாயினும், நின் குலத்துதித்த முன்னோனொருவன், புலவர்கட்கு வாயிற்கதவடைத்த கொடுஞ்செயல் காரணமாக உங்கள் மலையை எம்மவர் பாடாதொழிந்தனர். அது பற்றி நின்னைத் தழுவ இசைந்திலேன்," என்று பதிலிறுத்தார். என்னே அப்புலவரது மனப்பான்மை! என்னே அவரது சுயமரியாதை உணர்ச்சி!

8. **பெருஞ்சித்திரனார்** என்பவர் பழம்புலவர்களுள் ஒருவர். அவர் ஒரு நாள் **வெளிமான்** என்ற புரவலனிடம் பரிசில் நாடிச் சென்றார். அச்சிற்றரசன் அப்புலவரின் பெருமைகளை நன்கறியாது, சிறிது பொருளைப் பரிசிலாக அளித்தான். அது கண்ட புலவர், அவ்வரசன் தம்மை ஏளனம் செய்ததாக எண்ணிச் சினமுற்று, அப்பரிசிலை ஏற்க மறுத்து, அவ்விடம் விட்டகன்றார்; நேரே குமண வள்ளலை அடைந்தார். அவ்வள்ளல் புலவரை மகிழ்ச்சியுடன் வரவேற்றார்; அவருடைய பாடல்களைக் கேட்டு இன்புற்றார். அவருக்கு யானையுள்ளிட்ட பல பரிசில்களை நல்கினார்.

9. அவற்றைப் பெற்றுக்கொண்ட பெருஞ்சித்திரனார், தம்மை அவமானப்படுத்திய வெளிமான் மாளிகையை அடைந்தார்; அங்கிருந்த காவல் மரமொன்றில் தாம் கொணர்ந்த பரிசில் யானையைக் கட்டினார்; நேரே வெளிமானிடம் சென்றார். "அரசரே, இரப்பவர்க்குக் கொடுத்துப் பாதுகாப்பவன் நீ ஒருவனே அல்லை. புரவலர்கள் இரவலர்க்கு இல்லாமற் போகவுமில்லை. இனி, யாசிப்பார் இருப்பதையும் பார்! யாசிப்பவர்க்கு ஈவோர் இருப்பதையும் காண்! உனது ஊரில் உள்ள காவல் மரம் வருந்தும்படி யாம் கொண்டு வந்து கட்டிய யானை

எமது பரிசில். வேகம் மிக்க குதிரைகளை உடைய தலைவனே, இனி யாம் செல்வோம்,'' என்னும் கருத்தமைந்த பாடலைக் கூறிவிட்டுச் சென்றார். என்னே அப்புலவரது மனவுறுதி! என்னே அவரது சுயமரியாதை! தாம் பரிசிலுக்குச் சென்றிருந்தும், தமது நிலைக்குத் தக்க பரிசிலை வெளிமான் அளிக்கவில்லை என்பதற்காகச் சினந்து, அவ்வரசனுக்குத் தக்க முறையில் புத்தி கற்பித்த அவர் பெருமையை என்னென்று கூறுவது! இதுகாறும் அறியப்பெற்ற அக்காலப் புலவர்களிடம் காணப் பெற்ற மனப்பண்புகள் இக்காலத் தமிழ் மக்களுக்குப் பெரிதும் தேவைப்படுகின்றன என்று கூறுவது இழுக்காகாதன்றோ?

பயிற்சி :

I. விடை எழுதுக :—

1. சங்க காலப் புலவர்களிடம் காணப்பட்ட அருங்குணங்கள் யாவை?
2. கலங்கிள்ளி ஆலூர்க் கோட்டையை முற்றுகையிடக் காரணம் யாது?
3. சங்க காலத்தில் புலவர்களுக்கிருந்த சிறந்த உரிமை ஒன்றனைக் கூறுக.
4. "இக்கோட்டை உன்னுடையதன்றோ?"—சந்தர்ப்பம் கூறி விளக்குக.
5. "புலவீர், நீர் எம்மைத் தழுவாமைக்குக் காரணம் என்ன?" —இது யாரைப் பார்த்து யார் வினவியது? ஏன்?
6. வெளிமானைப் பார்த்துப் பெருஞ்சித்திரனார் கூறியது யாது?
7. பெருஞ்சித்திரனார் பாடிய பாட்டின் கருத்தென்ன?

II. எதிர்ச்சொற்கள் எழுதுக :—

அமர்ந்து, கொடிது, திறந்து, அடிமை, சுயமரியாதை, மகிழ்ச்சி, புகழ், முன்னோன், கொடுஞ்செயல், உணர்ச்சி, புரவலன், ஈவோர், சினந்து, நெடுந்தூரம்

III. வாக்கியங்களில் அமைக்க :—

நடுவுநிலை, அருங்குணம், அலங்கோலமாக, ஆராயுமிடத்து, மனப்பான்மை, ஈண்டு, தரம், கொடுஞ்செயல், ஏளனம், பாதுகாப்பவன், சுயமரியாதை, மனப்பண்பு.

IV. சொல்லியுள்ளபடி செய்க :—

1. அரசரே, நான் கூறுவதைக் கேளும்: யானைகளெல்லாம் நீரில் முழுகாமலும், அரிசிக்கவளங்களைப் பெருமலும், நிலத்தின்மீது புரளும் கைகளை உடையனவாய்ப் பெருமூச்செறிந்து இடி போல முழங்கி நிற்கின்றன. (நான்கு தனி வாக்கியங்களாக எழுதுக.)

2. பகைவர் உள்ளே வாராதபடி அடைக்கப்பட்டிருந்த கோட்டை வாயில் புலவர்க்குத் திறக்கப்பட்டது. (செய்வினையாக மாற்றுக.)

3. அரிய கருத்துக்கள் அமைந்த செய்யுளைக் கூறி அவன் கோட்டையைத் திறக்கும்படி செய்வித்தனர். (தன்வினையாக மாற்றுக.)

V. அகராதி பார்த்துப் பொருள் எழுதுக :—

பண்பு, பொருது, அரண், தரம், பரிசில், புரவலர், இசைத்திலேன், இரப்பவர், இரவலர்.

12. கோழிப் பண்ணை

1. நமது நாட்டில் கோழி வளர்த்தல் பொருளாதாரத் தொழில்களுள் ஒன்ருகக் கருதப்படவில்லை. இந்தியாவில் கோழிகள் இல்லாத கிராமமோ, பட்டணமோ இல்லை என்று கூறலாம். ஆனல், அவை, அவற்றின் கறிக்காகவும் முட்டைகளுக்காகவும் வளர்க்கப்படுகின்றனவேயன்றி, அவற்றின் மூலம் பொருள் திரட்டக்கூடும் என்னும் கருத்தோடு பண்ணை முறையில் வளர்க்கப்படுவதில்லை. ஆனல், அமெரிக்க நாடுகளிலும் ஐரோப்பிய நாடுகளிலும் கோழிப் பண்ணை ஒரு முக்கிய பொருளாதாரத் தொழிலாகக் கருதப்படுகிறது. 1937-ஆம் ஆண்டின் கணக்குப்படி அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 4,261 லட்சம் கோழிகளும், ஐரோப்பாவில் 3,419 லட்சம் கோழிகளும், நமது இந்தியாவில் (பாகிஸ்தான் உட்பட) 1,732 லட்சம் கோழிகளும் இருந்தன. இப்புள்ளி விவரங்களின் மூலம் இந்தியர் கோழி வளர்ப்பதில் அதிக முயற்சியை மேற்கொள்ளவில்லை என்பது வெளியாகின்றது. இனி, கோழிகளைப்பற்றிய செய்திகளையும், கோழிப் பண்ணைகளை நடத்தும் முறைகளையும் சற்று ஆராய்வோம் :

2. இக்காலத்தில் உலகில் காணப்படும் வீட்டுக் கோழிகள் அனைத்தும் இந்தியாவின் காட்டுக் கோழிகளின் வமிசத்தைச் சேர்ந்தவை என்னும் உண்மை எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. உண்மை இங்ஙனமிருக்க, கோழியின் பிறப்பிடமாகிய நமது நாட்டில் உள்ள கோழிப் பண்ணைகளுக்கு வேண்டிய உயர்தர இனக்கோழிகள், பிற நாடுகளினின்றும் தருவிக்கப்படுகின்றன என்பதை அறிய நீங்கள் வியப்புறுவீர்கள். அன்றியும், நாம் ஒரு பொருளாக மதியாத கோழிகளின் விலை மதிப்பும் உங்களை வியப்புறச் செய்யும். இந்தியாவில் உள்ள கோழிகளின் மதிப்பு 7·6 கோடி ரூபாய்; சென்னை இராச்சியத்துக் கோழிகளின் மதிப்பு மட்டும் 1·4 கோடி ரூபாய் என்பதை அறியும்போது நாம் வியப்புருமல் என் செய்வது!

3. உலகில் எத்தனையோ வகையான கோழிகள் உண்டு. அவை எல்லாம் நமது நாட்டிற்கு ஏற்றவை அல்ல. வெண்காற் கொம்பு[1], கருமைனூர்க்கா[2], ரோட்தீவின் செவ்வல்[3] ஆகிய மூன்று வகைகள் மட்டுமே நமது நாட்டுக்குச் சிறந்தவை என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இவை சமவெளிப் பிரதேசங்களுக்கு ஏற்றவையேயன்றி, மலைப்பிரதேசங்களுக்கு ஏற்றவை அல்ல.



கருமைனூர்க்கா வெண்காற்கொம்பு ரோட்தீவின் செவ்வல்

4. கோழி வளர்ப்பு நமது நாட்டில் குடிசைத் தொழில்களுள் ஒன்றாக மேற்கொள்ளப்படின், சிறந்த ஊதியம் தரத் தக்கது என்று பொருளாதார நிபுணர்கள் கருதுகின்றார்கள். ஆதலால், கோழி வளர்ப்பைப்பற்றிய முக்கியமான சில செய்திகள் இங்குத் தரப்படுகின்றன :

5. கோழி வளர்ப்பொன்றையே தமது வருமானத்துக்கு வழியாகக் கருதுகின்றவர் குறைந்த பட்சம் இருநூறு ரூபாய் மூலதனம் வைக்க வேண்டுவது அவசியம். இவர்கள் தங்கள் பண்ணையைக் கிராமத்தினுள் அமைக்காமல், கிராமத்துக்கு வெளியே ஒரு தோப்பில் அமைப்பது நலம். அத்தோப்பில் மழை பெய்தால் நீர் தேங்காமல் விரைவில் வடிந்துவிடக்கூடிய இடத்தில் குறைந்த பட்சம் ஆறடி உயரமிருக்கும்படி இரும்புக் கம்பிகளாலாகிய வலையடித்து, காட்டுப் பூனை, குள்ளநரி முதலியன உள்ளே புக முடியாதபடி பலமான வேலியமைக்க

1. White leghorn. 2. Black minorca. 3. Rhode Island Red.

வேண்டும். வேலிக்கு உட்பட்ட பகுதியில் நிழல் தரத்தக்க மரங்கள் இருத்தல் வேண்டும். இவற்றின்கீழ்க் கூடுகள் இருக்க வேண்டும். ஒவ்வொரு ஜாதிக்கும் உரிய கூடுகள் வரிசையாக வைக்கப்பட்டு, ஓர் இனத்துக் கோழிகள் பிற இனங்களோடு கலவாமல் இருக்க இடையில் வேலிகள் அமைக்கப்பட வேண்டும். கோழிகள் உலாவித் திரிவதற்-கேற்றவாறு தாராளமாக வெற்றிடம் இருத்தல் அவசியம்.

6. இவ்வாறு வேலியமைக்கவும் கூடுகள் அமைக்கவும் மூலதனம் வேண்டுமன்றோ? இவற்றிற்கு நூறு அல்லது நூற்றைம்பது ரூபாய் தேவைப்படும். கோழிகள் வாங்குவதற்-கும் பணம் வேண்டும். முதலிலேயே உயர்தரக் கோழிகள் வாங்குவது இயலாது. ஆதலால், தொடக்கத்தில் இருபத்-தைந்து அல்லது முப்பது நாட்டுப் பெட்டைகளும், நல்ல உயரினச் சேவல் ஒன்றும் வாங்கி வளர்க்கத் தொடங்கவேண்-டும். இவற்றிற்கு ஏறத்தாழ நாற்பது ரூபாய் தேவைப்படும். இக்கோழிகள் முட்டையிடுவதற்காக வளர்க்கப்படுவனவாத லால், இவற்றின் முட்டைகளைச் சேகரித்து, வாரந்தோறும் சந்தைகளில் விற்றுப் பணமாக்கலாம்; அல்லது முட்டை வாங்குவதற்கென வரும் வியாபாரிகளிடம் விற்றும் பணமாக்க-லாம். அன்றியும், முட்டைகளிற்சிலவற்றை இனவிருத்திக்-காகச் சேகரித்து வைத்தல் அவசியம். அவற்றை அடைகாக்-கும் கோழிகளைக்கொண்டு பொரிக்க வைக்க வேண்டும். இன விருத்தியாக விட்டுக் கோழிகளையும் விற்கலாம்.

7. இங்ஙனம் தொடக்கத்தில் நாட்டுக் கோழிகளை வைத்-துப் பண்ணை நடத்திக்கொண்டே உயரினக் கோழிகளை விருத்தி செய்யத் தொடங்க வேண்டும். உயரினக் கோழிகளை அவை கிடைக்கக்கூடிய பண்ணைகளில் விலைக்குப் பெறலாம். ஆனால், அவற்றிற்குப் பெருந்தொகை வேண்டும். சாதாரண-மாக உயரினக் கோழி ஒவ்வொன்றுக்கும் ஐந்து முதல் பத்து ரூபாய் வரையில் விலை கொடுக்க வேண்டும். ஆதலால், உயரினக் கோழிகளை விருத்தி செய்வதற்கு அவை வளர்க்கப்படும் பண்ணைகளிலிருந்து முட்டைகளை வாங்கி, நாட்டுக் கோழி களைக்கொண்டு அடைகாக்கச் செய்து உற்பத்தி செய்வதும்,

அல்லது பண்ணைகளினின்று அன்று பொரித்த குஞ்சுகளை வாங்கி வளர்ப்பதும் குறைந்த செலவில் உயரினக் கோழிகளை விருத்தி செய்யும் முறைகளாகும்.

8. கோழி வளர்ப்பவர் அறிய வேண்டுவனவற்றுள் மிக முக்கியமானது, கோழிகட்குரிய உணவுப் பொருள்களைப் பற்றியதாகும். கோழிகட்குத் தினந்தோறும் மூன்று வகையான உணவுப் பொருள்கள் உபயோகிக்கப்பட வேண்டும். நெல், கேழ்வரகு, கம்பு, சோளம் முதலிய தானிய வகைகளுள் ஏதேனும் ஒரு வகையில் கோழியொன்றுக்குத் தினமும் இரண்டு அவுன்ஸ் தரவேண்டும். பன்னிரண்டு பாகம் அரிசித் தவிடும், ஆறு பாகம் கோதுமைத் தவிடும், ஆறு பாகம் கோதுமை அல்லது கேழ்வரகு மாவும், ஒரு பாகம் அடுப்புக்கரித் தூளும், ஒரு பாகம் மீனுணவும், ஒரு பாகம் எலும்புணவும், அரைப் பாகம் நிலக்கடலைப் பிண்ணுக்கும், அரைக்கால் பாகம் உப்பும் சேர்ந்த கலப்புணவு தினந்தோறும் கோழியொன்றுக்கு இரண்டு அவுன்ஸ் அளவு தரப்படல் வேண்டும். இவையன்றிக் கீரை உணவும் தினந்தோறும் அவசியமாக அளிக்கவேண்டும். எந்தக் கீரையாயினும், நன்ருகக் குறுக அரிந்து வைக்க வேண்டும். இவையன்றிக் கோழிகளுக்குக் குளிர்ந்த நீரைப் பாத்திரங்களில் நிழலில் வைத்து எப்போதும் கிடைக்கும்படி செய்யவேண்டும்.

9. மேற்கூறப்பட்ட முறையில் கோழியொன்றுக்கு வாரந்தோறும் மூன்றணுச் செலவாகும். எனவே, மாதமொன்றுக்குப் பன்னிரண்டணுச் செலவாகும். 'மாதந்தோறும் கோழியொன்றுக்குப் பன்னிரண்டணுச் செலவு செய்தால், அதற்கேற்ற இலாபம் கிடைக்குமா?' என்னும் வினு எழுகின்றது. இலாபம் கிடைப்பது நிச்சயம். ஆனல், இலாபத்தின் அளவு யாது என்பது வளர்க்கப்படும் கோழிகளைப் பொறுத்தது. சாதாரணமாக உயரினக் கோழிகள் வருடமொன்றுக்கு முந்நூறு முட்டைகளுக்குமேல் இடுவது நிச்சயம் என்பது ஆராய்ச்சியாளர் கூறும் உண்மை. இதன்படி கணக்கிட்டால், ஒரு முட்டை ஓர் அணு வீதம் ஒரு கோழியின் மூலம் வருடமொன்றுக்குப் பதினெட்டு ரூபாய் கிடைக்கும். ஆனல், அதற்குச் செலவு ஒன்பது ரூபாய் மட்டுமே.

10. இத்தகைய சிறந்த குடிசைத் தொழில் நமது நாட்டில் இதுவரையில் ஆராய்ச்சிக்காக அரசாங்கத்தினராலும், ஒரு சிலரால் பொழுது போக்குக்காகவும் மேற்கொள்ளப்பட்டுள்ளதேயன்றிக் கிராம மக்களால் மேற்கொள்ளப்படவில்லை. ஆனால், கிராமங்களில் கோழிகள் இல்லா வீடே இருப்பதில்லை. இவை தாமே தோட்டங்களில் அலைந்தும், வைக்கோற்போர்களைக் குடைந்தும் தீனி தேடிப் பிழைக்கின்றன. இவற்றை வளர்ப்பவர் இவற்றின் முட்டைகளை உபயோகிப்பதும், விருந்தினர் வந்தால் இவற்றுள் ஒன்றிரண்டைக் கொன்று விருந்தளிப்பதும் தவிர, ஊதியமடையத்தக்க முறையில் இவற்றை வளர்க்க முற்படாமை பெரிதும் வருந்தத் தக்கதேயாகும்.

பயிற்சி :

I. விடை எழுதுக :—

1. கோழி வளர்ப்பதில் நம்மவருக்கும் அந்நியருக்கும் உள்ள கருத்து வேறுபாடு யாது?
2. நம் நாட்டுக்கு உகந்த மூன்று கோழி வகைகளைக் கூறுக.
3. கோழிப் பண்ணையைக் குறித்துப் பொருளாதார நிபுணர்கள் கருதுவது யாது?
4. கோழிப் பண்ணை அமைக்க விரும்பும் ஒருவர் கவனிக்கவேண்டிய விதிகளை ஒன்றன்பின் ஒன்றாகக் கூறுக.
5. எவ்வெவ்விதிகளைக் கடைப்பிடித்து நடந்தால் கோழிப் பண்ணையைக் குறைந்த செலவில் ஆரம்பித்துக் கொஞ்சம் கொஞ்சமாக விரிவடையச் செய்யலாம்?
6. கோழிப் பண்ணையாளன் உணவுப் பொருள்கள் விஷயத்தில் கவனிக்க வேண்டிய முக்கியமான விஷயங்கள் யாவை?

II. வாக்கியத்தில் வைத்தெழுதுக :—

மூலம், பொழுது போக்கு, ஊதியம், பொருளாதாரம்

III. எதிர்ச்சொல் கூறுக :—

ஐக்கியம், முயற்சி, ஒப்புக்கொள், வியப்பு, மதிப்பு

IV. இலக்கணம் :—

1. ஆடு, காடு, மாடு, பாக்கு, கடு, காடு, பசு, பாடு, பட்டு, பாட்டு, அரக்கு, விடு, வீடு, கொசு, எஃகு, போற்று, குறு—குற்றிய லுகரம் பொருந்திய சொற்களை எடுத்து எழுதுக.

13. திருக்குறளும் திருவள்ளுவரும்

"வள்ளுவர்செய் திருக்குறளை மறுவறநன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மனுவாதி ஒருகுலத்துக் கொருநீதி?"

என்று மனோன்மணீய நூலாசிரியரால் புகழ்ந்து கொண்டாடப் பட்ட நூல், திருக்குறள். இந்நூல் பிற நூல்களைப்போலக் கால வேறுபாட்டாலும், கருத்து வேறுபாட்டாலும், மத வேறுபாட்டாலும் சீர்கெட்டுச் சிதைந்தொழியாமல், சிறப் புற்று அன்றும் இன்றும் பொது மறையாய்த் திகழ்ந்து வருகின்றது.

2. தமிழ் மொழியிலுள்ள பா வகைகளுள் முதலாவதாக வைத்து எண்ணப்படுவது வெண்பா. இவ்வெண்பா வகையில் முதற்கண்ணுள்ளது குறள் வெண்பா. 'குறள்' என்பதற்குக் 'குறுகிய பாட்டு' என்பது பொருள். இவ்வெண்பாவால் பாடப் பட்ட நூல் 'குறள்' எனப் பெயர் பெற்றது. 'திரு' என் பதற்குக் 'கண்டாரால் விரும்பப்படும் தன்மை' என்பது பொருள்.

3. தமிழ் மொழியில் முதல் எழுத்துக்களாய் உள்ளவை, உயிர் பன்னிரண்டும், மெய் பதினெட்டும் ஆகிய முப்பது எழுத்துக்கள். அவற்றுள் முதலில் நிற்பது அகரவுயிரும், ஈற்றில் நிற்பது னகர மெய்யும் ஆகும். குறளாசிரியர் தமிழ் மொழியின் சிறப்பை உலகத்தார்க்குப் பல்லாற்றானும் எடுத்-துக் காட்ட எண்ணி, தாம் பாடிய பொது மறையின் முதற் செய்யுளின் முதலெழுத்தாகத் தமிழில் முதலாயுள்ள அகரத்தை அமைத்துப் பாடியுள்ளார்; பின்னர் முதலெழுத்துக்கள் முப் பதில் ஈற்றிலுள்ள னகர மெய்யை இறுதிக் குறளின் இறுதி எழுத்தாகக் கொண்டு பாடிய திறம் வியக்கற்பாலது!

4. திருக்குறள், அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் முப்பெரும்பிரிவுகளைப் பெற்றுள்ளது. அறத்துப்பால், 'இல்லறவியல், துறவறவியல்' என்னும் இரண்டு உட்பிரிவு

களுடன், முப்பத்தெட்டு அதிகாரங்களை உடையது. பொருட்பால், 'அரசியல், அமைச்சியல், அங்கவியல், ஒழிபியல்' என்னும் நான்கு உட்பிரிவுகளுடன் எழுபது அதிகாரங்களை உடையது. காமத்துப்பால், 'களவியல், கற்பியல்' என்னும் இரண்டு உட்பிரிவுகளுடன் இருபத்தைந்து அதிகாரங்களை உடையது. இந்நூலின்கண் காணப்படும் நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களுள் ஒவ்வொன்றும் தனித்தனியே பப்பத்துப் பாக்களைக்கொண்டு மிளிர்கின்றது.

5. மேனாடுகளிலிருந்து நம் நாடு வந்த அறிஞர் பலரும் இத்திருக்குறளின் சிறப்பை உணர்ந்து, இதனை நன்கு கற்றுத் தத்தம் மொழிகளில் பெயர்த்தெழுதியுள்ளனர். திருக்குறள் ரெவரெண்டு பெஸ்கி என்பவராலேதான் முதன்முதல் இலத்தீனில் மொழி பெயர்க்கப்பட்டது; பின்னர் ஜி. யு. போப்பையர் என்பவரால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டது; டாக்டர் கிரால் என்பவரால் ஜெர்மனியில் மொழி பெயர்க்கப்பட்டது. வேங்கடராம ஸ்ரீ வைத்தியநாதரால் தெலுங்கிலும், ஸ்ரீ அப்பா தீட்சிதரால் வடமொழியிலும், க்ஷேமானந்த ராஹத்து என்பவரால் ஹிந்தியிலும், திவான் பகதூர் கோவிந்தப் பிள்ளை என்பவரால் மலையாளத்திலும் பெயர்த்து எழுதப்பட்டுள்ளது. வேறு சில மொழிகளிலும் இந்நூல் பெயர்த்தெழுதப்பட்டுள்ள பெருமை பெற்றது.

6. திருக்குறள் உலகத்திலுள்ள பல மக்களாலும் போற்றப்பட்டுப் புகழ் பெற்றதையும், குறளாசிரியர் சாலப் புகழெய்தியதையும் கண்ட நமது நாட்டு மதவாதிகளுள் பலர் திருவள்ளுவரைத் தத்தம் மதத்தவரென்று வாதிக்கத் தொடங்கினர். திருவள்ளுவர் பௌத்தர் என்று பௌத்தரும், சமணர் என்று சமணரும், வைணவர் என்று வைணவரும், சைவர் என்று சைவரும் கூறலாயினர். ஆனால், வள்ளுவர் வாய்மொழி மத வேறுபாடில்லா மாட்சியுடன் ஆட்சி பெற்று எல்லா மதத்தவராலும் போற்றப்படும் நிலையில் அமைந்துள்ளது என்பது வெள்ளிடை மலை. இந்நூல் இறவாப் புகழுடன் நின்று நிலவுவதால், மக்கள் இதனை 'முப்பால், தமிழ் மறை, பொதுமறை, பொய்யாமொழி, திருவள்ளுவர்' எனப் பல பெயரிட்டு

வழங்கலானார்கள். இவற்றிலிருந்தே இந்நூலின் சிறப்பு அங்கை நெல்லிக்கனியெனப் புலப்படுகின்றதல்லவா?

7. இந்நூலுட்காணப்படுகின்ற சொற்களுள் ஒவ்வொன்றும் வளமுற்றதாகவும், பொருட்செறிவுடையதாகவும், இனிமையும் எளிமையும் கொண்டு திகழ்வதாகவும் அமைந்துள்ளது. இந்நூலை மக்கள் நவிலுந்தொறும் கழிபேருவகை எய்துவார்கள்.

8. இத்தகைய பீடுடைய பெருநூலைப் பாடிய பெருந்தகையார், வான் புகழ் கொண்ட வள்ளுவர். இப்பெயர் குறளாசிரியரின் இயற்பெயரோ, புனை பெயரோ, அன்றிக் குடிப்பெயரோ என்பதை அறுதியிட்டுக் கூறுதலியலாது. 'இவர் மயிலையில் பிறந்து, 'வாசுகியார்' என்னும் வேளாண் குல மாதரை மணந்து, இல்லறவொழுக்கத்தைச் சிறந்த முறையில் நடத்திக் காட்டியவர்,' என்பர் சிலர்; 'இவர் மதுரையில் பிறந்தவர்,' என்பர் சிலர்; இன்னும் பலரும் பலவாறாகக் கூறுப.

9. முற்காலத்தில் வாழ்ந்த புலவர்கள் தங்கள் தங்கள் வரலாற்றைக் குறித்து வைப்பது தற்பெருமையாகும் என்று எண்ணியோ, அன்றி வேண்டா என்று நினைத்தோ குறிக்காமல் விட்டுச் சென்றுவிட்டார்கள். அதனாற்றான் நாம் சிறந்த புலவர்களுடைய உண்மை வரலாறுகளை உள்ளபடி உணர்தல் இயலாதாயிற்று. பிற்காலத்தில் வாழ்ந்த பலரும், பெரும்புலவர்களைப் பற்றிச் செவிவழிச் செய்தியாகத் தாம் தாம் கேட்டறிந்தனவற்றைத் துணைக்கொண்டு தத்தம் கருத்துக்கேற்றவாறு கூட்டியும், குறைத்தும், புதுக்கியும், புனைந்தும் கூறலாயினர்.

10. திருவள்ளுவர் தமிழ் நாட்டிற்பிறந்தார்; தமிழுக்குத் தலைசிறந்த தொண்டு புரிந்தார். இவர் அறநூற்றுறை, அரசியற்றுறை, இன்பநூற்றுறை ஆகிய பல துறைகளிலும் சிறந்த புலமை பெற்ற பெரும்புலவர். இவருடைய பரந்த அறிவின் திறத்தை இவர் பாடிய நூலைத் தெளிவாகக் கற்றுணர்பவர் யாவரும் நன்கறியலாம்.

11. திருக்குறள் தமிழ்மொழியில் தொல்காப்பியர் காலத்திற்குச் சற்றுப் பிற்பட்ட காலத்தில் எழுந்த நூல்; மக்கள்

வாழ்க்கையின் உயர்வுக்கு வேண்டிய வழிகளைக் கொண்டுள்ள நூல். இத்தகைய தனித்தமிழ் வளம் செறிந்த கலைக்கருவூலமெனத் திகழும் பொது மறையை—அறிவுப் பெருமலையாய் விளங்கும் அருமறையை—நன்கு கற்கும் மாணவர் கற்ற வழியில் நிற்றல் வேண்டும்.

பயிற்சி :

I. விடையெழுதுக :—

1. மனோன்மணீய ஆசிரியர் திருக்குறளைச் சிறப்பித்துக் கூறும் அடிகளை எழுதி, அதற்குப் பொருளும் எழுதுக.
2. திருக்குறளின் அமைப்பை விவரிக்க.
3. திருக்குறள் எவ்வெம்மொழியில் யார் யாரால் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது ?
4. குறளுக்குரிய வேறு பெயர்களைக் கூறுக.
5. ‘நாம் குறளால் எய்தும் பயன்கள்’ என்பதைக் குறித்து ஒரு பக்கத்திற்கு மேற்படாமல் ஒரு கட்டுரை வரைக.

II. எதிர்ச்சொல் கூறுக :—

புகழ்ந்து, வேறுபாடு, ஈற்றில், பெருமை, எளிமை, உவகை, புகழ், அறம்

III. வாக்கியத்தில் அமைத்தெழுதுக :—

சிதைந்தொழியாது, ஈற்றில், வியக்கற்பாலது, போற்றப்பட்டு, மாட்சியுடன், நவிலுந்தோறும், கழிபேருவகை, செவிவழிச் செய்தி

IV. அகராதி பார்த்துப் பொருள் எழுதுக :—

அறம், வெள்ளிடை, அங்கை, மாட்சி, செறிவு, பேருவகை, எய்துவர், வான்புகழ், வேளாண்குலம், புனைந்து, செவிவழிச் செய்தி, கருவூலம், மறை

V. சொல்லியபடி செய்க :—

(1) கண்டாரால் விரும்பப்படும், முதல் எழுத்துக்களாக, இதன்கண்—தொடர் இலக்கணம் கூறுக.

(2) மாணவர்காள், குறளை, வெண்பாவால், ஆசிரியர்க்கு, திருக்குறளின், அதிகாரங்களையுடையது, இந்நூலின்கண்—இவை என்ன என்ன வேற்றுமைகள் என்பதை ஆதாரத்தோடு கூறுக.

14. மங்கோ பார்க்

1. ஏறத்தாழ இரண்டு நூற்றுண்டுகட்கு முன் இருண்ட கண்டமென வழங்கிவந்த ஆப்பிரிக்காக் கண்டத்தின் உட்பகுதிகளைக் கண்டறிந்த மாந்தரிலர். ஆயினும், கிழக்கிந்தியத் தீவுகளோடும், நமது பாரத நாட்டோடும் வாணிகத் தொடர்பு கொண்டிருந்த ஐரோப்பியர், இக்கண்டத்தின் சில கடற்கரைப் பிரதேசங்களையும், பட்டினங்களையும் அறிந்திருந்தனர். அஞ்சா நெஞ்சம் படைத்த ஐரோப்பியரும் இக்கண்டத்தின் உட்பகுதிகளை ஆராயாமலிருந்ததற்குக் காரணங்கள் பல உள. கண்டத்தின் உட்பகுதிகளில் இருந்த மனிதர் நுழைய முடியா அடவிகளும், அயலாரைக் கண்டவுடன் அரவமெனச் சீறி அவரைக் கொல்ல முற்பட்ட முரட்டுமக்களும், வெள்ளையர்க்குப் பொருந்தாத வெப்பதட்ப நிலையும் சில முக்கிய காரணங்களாகும்,

2. இத்துணை இடர்களையும் எதிர்த்துக்கொண்டு கண்டத்தின் உட்சென்று ஆய்வு நடத்தல் அரும்பெருஞ்செயலாகக் கருதப்பட்டது. ஆயினும், ஆற்றல் மிக்க ஆங்கிலேயர் சிலர், ஆப்பிரிக்காக் கண்டத்தை ஆராய்ச்சி நடத்த முற்பட்டவர்க்கு

அவசியமான உதவிகளைப் புரிவதற்கென ஒரு கழகத்தை நிறுவினர். அக்கழகத்தார், ஆப்பிரிக்காவின் வடபாதியில் டிம்பக்டு என்னும் வாணிகச் சந்திப்பு ஸ்தலம் ஒன்றுண்டு என்பதைக் கேள்விப்பட்டு, அதைக் கண்டு திரும்பத்தக்க வீரர் ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். அக்காலத்தில் டிம்பக்டுவைப்பற்றி எழுந்த வியத்தகு செய்திகளே இம்முயற்சிக்குக் காரணமாகும். ஆப்பிரிக்காக் கண்டத்தின் வடபாதியின் மேற்கில் நைஜர் என்னும் ஒரு நதி பாய்கின்றது. அந்த நதிப் படுகையில் அமைந்த டிம்பக்டு பொற்குவியல்கள் நிறைந்தது என்னும் செய்தி அக்காலத்திற் பரவி வந்தது.

3. இத்தகைய பொன்னகரைக் காண விழைந்தார் ஓர் இளைஞர். அவர் அஞ்சா நெஞ்சமும், உலையா ஊக்கமும் உள்ளவர். அவரே மங்கோ பார்க் என்ற நாடாய்ந்த நல்லறிஞர். அவரைப்பற்றி இப்பாடத்திற் படிப்போம் :

4. மங்கோ பார்க், 1771ல் ஸ்காட்லாந்தில், செல்கர்க் ஷயரில் ஒரு குடியானவருக்கு ஏழாம் மகவாய்த் தோன்றினர். இவர் தொடக்கத்தில் வீட்டிலேயே கல்வி பயின்று, பிறகு கல்லூரியில் உயர்கல்வி கற்று, இறுதியில் மருத்துவக் கல்லூரியிற்சேர்ந்து மருத்துவர் பட்டம் பெற்றவர். சிறிது காலம் தமது தொழிலை மேற்கொண்டு நடத்திய பின்னர், இலண்டனுக்கும் கிழக்கிந்தியத் தீவுகளுக்குமிடையே சென்று வந்து கொண்டிருந்த ஒர்ஸெஸ்டர் என்ற கப்பலில் உதவி மருத்துவர் பதவியில் அமர்ந்தார்.

5. ஆப்பிரிக்க ஆராய்ச்சிக் கழகத்தார் டிம்பக்டுவைக் கண்டு மீளத் தக்கவர் மங்கோ பார்க்கே என நிச்சயித்து, அவரை அப்பணியில் ஊக்கினர். மங்கோ பார்க்கும் அப் பணியை மேற்கொண்டு, ஒரு நாவாயிலேறி, ஆப்பிரிக்காவின் வடபாதியின் மேற்குக்கரையில் பாயும் காம்பியா யாற்றின் கழிமுகத்தை அடைந்தார்; அங்கிருந்து உள் நாட்டிற் சிறிது தொலைவில் அமைந்துள்ள பைசானியா என்னும் பட்டணத்தை அடைந்தார். அக்காலத்திலும் ஆப்பிரிக்காவின் கடற்கரைப் பகுதிகளை ஐரோப்பியர் அறிந்திருந்தமையால், கிறித்தவப்

பாதிரிமார் பலர் அங்குக் குடியேறி, மதத்தொண்டு புரிந்து வந்தனர். அத்தகைய பாதிரிகளுள் ஒருவர் பைசானியாவில் இருந்தார். டாக்டர் லெய்ட்லி என்ற பெயரிய அவர், மங்கோ பார்க்குக்கு நல்வரவு கூறி, அவரைத் தம் இல்லத்தில் விருந்தினராய் இருக்கச் செய்தார். சில நாட்களில் மங்கோ பார்க்கை வெப்ப நோய் பீடித்தது. அந்நோயால் இரண்டு திங்கள் இடருற்ற மங்கோ பார்க், மிகவும் மெலிந்து, மேலும் நான்கு திங்கள் வரையிலும் தாம் மேற்கொண்ட பயணத்தில் ஈடுபட முடியாதவரானார்.

6. தமது மெலிந்த உடல் உரம் பெறும் வரை லெய்ட்லியுடன் தங்கியிருந்த மங்கோ பார்க், அந்த நான்கு மாதங்களையும் வறிதிற்கழியாது, அந்நாட்டு மக்களின் உடை நடை ஒழுக்கங்களை ஆராய்வதிலும், சுதேச மொழியைக் கற்பதிலும் கழித்தார். தமது உடல், பயணத்தை மேற்கொள்ளத் தக்க நிலை எய்தியவுடனே, இவர் பல வகைச் சோழிகள், பல வண்ண மணிகள், புகையிலை, இரண்டு திசை காட்டிகள், ஒரு வெப்பமானி, சில துப்பாக்கிகள், தமக்கவசியமான ஆடைகள் முதலியன நிறைந்த பொதிகளை இரண்டு கழுதைகளின்மீது ஏற்றிக்கொண்டு, சில நீகிரோப் பணியாளருடன் ஒரு குதிரையிலேறித் தமது பயணத்தை மேற்கொண்டார்.

7. இவர் மூன்று நாட்கள் பிரயாணம் செய்து மநீனு என்னும் பட்டணத்தை அடைந்தார்; அதன் அரசரைக்கண்டு அளவளாவித் தமது விருப்பத்தைத் தெரிவித்து, அவருடைய நட்பையும் உதவியையும் பெற்றுத் தமது பயணத்தைத் தொடங்கினார்.

8. மநீனுவை விட்டு நீங்கி, மேலும் சென்ற போது ஒரு மரத்தின் கிளைகளில் துணிக் கந்தைகள் கட்டித்தொங்கக் கண்டு, "இது என்ன? துணி காய்க்கும் மரமா?" என்று தம்முடன் வந்தவர்களை வினவினார். அவர்கள் பாலைவனப் பிரயாணிகள், அவ்வனக் கடவுளுக்குக் காணிக்கையாகச் சிறு கந்தைத் துணியைக் கட்டுவது வழக்கமென்று தெரிவித்ததைக் கேட்ட மங்கோ பார்க், அந்நாட்டு மக்களது விந்தைப் போக்கை உன்னிக்கொண்டே பயணத்தைத் தொடர்ந்தார்.

9. இவர் அங்கங்கே ஏற்பட்ட சிறு சிறு இடர்களை எதிர்த்துக்கொண்டு, காம்பியா நதிக்கும் செனிகல் நதிக்கும் இடைப்பட்ட நிலப்பகுதியைக் கடந்தார். அது வரை ஆங்கிலேயரைக் கண்டறியாத சுதேசிகள் இவரைக் கண்டதும் ஐயுற்று, அஞ்சி ஒடுங்கினார்கள். அதையறிந்த பார்க், அவர்களை அணுகி, அவர்களோடு நல்ல முறையில் பழகி, அவர்களது அச்சத்தை ஓட்டி, அவர்களது நன்மதிப்பைப் பெற்றார். பிறகு செனிகல் யாற்றின் மறு கரையிலிருக்கும் 'கார்டர்' என்னும் நகர் சேர்ந்து, அதன் அரசரை நேரிற்கண்டு, தமது நோக்கத்தை எடுத்தியம்பினார். அதற்கு அத்தலைவர் நைஜர் நதி சென்றடைவதற்குப் பாம்பார் நாட்டின் வழியே போக வேண்டும் என்றும், அந்நாட்டவருக்கும் தமக்கும் போர் மூண்டிருந்ததால் அவ்வழியே போக முடியாதென்றும், லூடமர் நாட்டின் மூலம் செல்வதே நலம் என்றும் கூறி வழியனுப்பினார்.

10. கார்டாவை விட்டுப் பார்க் மூர் எனும் இனத்தவரின் பதியாகிய லூடமர் நாட்டையடைந்தார். அதன் தலைவர் பெயர் அலி. பார்க், அலியிடம் சென்று தாம் அவ்வழியே செல்ல அனுமதிபெற்று வரும்படி தூதுவன் ஒருவனை அனுப்பினார். ஐரோப்பியர் தம் நாட்டில் புகுந்து வாணிகம் நடாத்துவதையும், நீகிரோக்களை அடிமைப்படுத்துவதையும் அறவே வெறுத்த அலி, தூதுவன் வாயிலாகச் சேதியைக் கேட்டதும், பார்க்கைச் சிறை பிடித்து வரும்படி தம் ஆட்களை ஏவினார். பார்க்கைச் சிறையில் வைத்து இன்னல்கள் பல இழைத்து வந்ததோடு நில்லாமல், அவரைத் தண்டிக்கத் தமது அரசவை அமைச்சருடன் ஆலோசித்த பிறகு, அரசி பாதிமாவையும் கலந்தாலோசித்தார். அரசி பார்க்கினிடம் பரிவு கொண்டு, இவரை விடுதலை செய்யும்படி அலியை வேண்டினாள். அதன்படி அலி பார்க்கை விடுதலை செய்து, ஜாராவுக்குச் சென்ற தம்முடைய ஆட்களோடு அனுப்பிவிட்டார்.

11. தம் மனைவியின் விருப்பப்படி பார்க்கை விடுதலை செய்த அலி, பார்க் ஜாரா சென்று அங்குத் தங்கியிருந்தபோது, மீண்டும் அவரைக் கைது செய்து வரும்படி ஏவிய ஆட்கள் அங்கு வந்து சேர்ந்தார்கள். தம்மை மீண்டும் சிறை செய்ய வந்திருக்-

கிறார்கள் என்பதை அறிந்த பார்க், அவ்வீரர்கள் அயர்ந்து உறங்கிக்கொண்டிருந்தபோது நடுநிசியில் எவரும் அறியாவண்ணம் தம் புரவிமீது ஏறி, அவ்விடத்தை விட்டகன்றார். இவ்வாறு தப்பிய பார்க், இரவு முழுவதும் பிரயாணம் செய்ததால் களைப்படைந்தார். பார்க்கின் நிலையையறிந்தது போல வானம் அருள் கூர்ந்து மழை சொரிந்தது. பார்க் தமது துண்டை விரித்து, மழைநீரை ஏந்தி, அதைப் பிழிந்து தமது நீர் வேட்கையைத் தணித்துக்கொண்டார். தாகம் தணிந்து சோர்வு நீங்கியதும், "உய்ந்தேன்! உய்ந்தேன்!" என்று உளமகிழ்ச்சியோடு கூறினார்; பிறகு பாம்பார் நாட்டை வந்தடைந்தார்; அங்கு வாழ்ந்த நீகிரோக்களின் தோழமையைப் பெற்றார்; சில நாட்களுக்குப் பிறகு அந்நாட்டுத் தலைவன் வாழ்ந்த பட்டணமாகிய செக்கோவுக்குச் சில வணிகருடன் சென்றார். இடைவழியில் தம்முடன் வந்தவர்கள், "அதோ ஜோலிபா!" என்று கூவினர். அவர்கள் மொழியில் பெரு நீருக்கு 'ஜோலிபா' என்பது பெயர். நைஜர் யாற்றைத்தான் அவர்கள் அங்ஙனம் குறித்தார்கள் என்பதை அறிந்த பார்க், தம் பரியினின்றும் குதித்தோடி, அதன் தெள்ளிய நீரை அள்ளி அள்ளிப் பருகி உள்ளம் பூரித்து, "என் ஆண்டவனே! இடர் பல வந்துற்றபோது உறுதுணையாய் நின்று அவ்விடர்களினின்றும் விடுவித்து இன்றளவும் எவரும் காணாத இத்தூய நதியாம் நைஜர் நதியை யான் முதற்கண் காணும் பேற்றை எனக்கு ஈந்தனையே! நின் கருணையே கருணை!" என்று பலவாறு இறைவனை வந்தித்துச் சோகா நாட்டைச் சென்றடைந்தார்.

12. மங்கோ பார்க், சோகா நாட்டு அரசனைக் காண அனுமதி பெற்று வரும்படி தூதனை அவ்வரசன்பால் ஏவினார். தூதன் சென்று செய்தியை அரசற்குத் தெரிவித்ததும் அரசன் தன் நாட்டில் வழங்கிய நாணயங்கள் ஐயாயிரத்தைப் பரிசாக அனுப்பி, உடனே அவ்வெல்லையை விட்டு விலகும்படி பார்க்குக்குப் பணித்தான். பார்க் அவன் கட்டளையை மீற எண்ணமில்லாதவராய்த் தம் நாடு திரும்பிய போது, ஒரு கொள்ளைக் கூட்டத்தினரால் தாக்கப்பட்டுத் தம்வசம் இருந்த பொருள்கள் எல்லாம் பறிக்கப்பட்டார்; அவர் தம்முடைய தொப்பியை-

யும், குறிப்புப் புத்தகத்தையுங்கூட எடுத்துக்கொண்டனரே என்று பெரிதும் விசனித்துக்கொண்டிருந்த போது அக்கூட்டத் தலைவன் அப்புத்தகம் வெறுங்காகிதங்களாகவே இருக்கக் கண்டு அதை வீசி எறிந்துவிட்டான். அதைக்கண்ட பார்க் ஓடி அப்புத்தகத்தை எடுத்துக்கொண்டு பேரானந்தம் அடைந்-தார்.

13. மங்கோ பார்க் இங்கிலையில் இரண்டரை ஆண்டு கட்குப் பிறகு காம்பியா நதி முகத்துவாரத்திற்கு வந்து, கப்பல் ஏறி, இங்கிலாந்து வந்தடைந்து, ஆப்பிரிக்க ஆராய்ச்சிக் கழகத் தாருக்குத் தாம் நைஜர் யாற்றைக் கண்ட வரலாற்றினை விரிவாக எடுத்துரைத்தார். அதைக் கேட்ட கழகத் தலைவர், அவருடைய பிரயாணச் செய்திகளைத் தொகுத்து ஒரு நூலாக எழுதும்படி அவரை வேண்டிக்கொண்டார். அதற்கிணங்க அவர் அவ்வரலாற்றை எழுதி வெளியிட்ட போது அது அக்-காலத்துச் சிறந்த பிரயாண நூல்களுள் ஒன்ருய்த் திகழ்ந்தது.

14. சிறிது காலத்துக்குப் பிறகு, மங்கோ பார்க் மீண்-டும் மருத்துவத் தொழிலை மேற்கொண்டார்; டாக்டர் ஆண்டர்-சன் என்பவரின் மகளை மணந்தார்; ஏழாண்டு இல்லறத்தை நன்முறையில் நடத்தி வந்தார்; மீண்டும் ஹோபார்ட்டுப் பிரபு வின் விருப்பத்திற்கிணங்கி, **1905**-ஆம் ஆண்டு, ஜனவரித் திங்கள், **30**-ஆம் நாள் நைஜர் நதியின் முழுப்போக்கையும் காணப் போர்ட்ஸ்மௌத்து என்னுமிடத்திலிருந்து புறப்பட்டுப் பைசானி-யாவையடைந்தார். அதே ஆண்டு, மே மாதம், 4-ஆம் நாள் பைசானியாவை விட்டுப் புறப்பட்டுப் பம்மாக்கோ (Bammako) வந்தடைவதற்குள் இவரோடு வந்த நாற்பத்து நான்கு பேர்-களுள் எஞ்சியவர் பதினொருவரே. இப்பதினொருவருள் அறுவர் சான்சாண்டிங் (Sansanding)கை அடைவதற்குள் மடிந்தனர். எஞ்சிய ஐவருள் மூவர் வீரர்; நான்காமவர் லெப்டினன்ட் மார்டைன்; ஐந்தாமவர் பார்க். இவர் சான்சாண்டிங்கை விட்டு நவம்பர் மாதம் 19-ஆம் தேதி புறப்பட்ட போது, "நைஜர் யாற்றின் முடிவைக் காண்பேனேல், மீள்வேன்; இன்றேல், மடிவேன்," என்று சூளுரை கூறினர்.

15. இவர் ஆப்பிரிக்காவில் உள்ள சோகா நகரையடைந்து, நைஜர் செலவுக்குத் தேவையான கலம் கட்டுவித்துத் தம் நண்பரொடு தாமும் அதில் ஏறி, இடையிடையே ஏற்பட்ட இடர்கள் பலவற்றை எதிர்த்து, நைஜர் நதியில் பயணம் செய்தார். இவர்கள் நைஜர் நதிக்கரையில் வசித்த முரட்டுத்தன்மை படைத்த காட்டு மக்களுடைய இடையருத் தாக்குதலைப் பொருட்படுத்தாமலும் சிந்தை கலங்காமலும் அவர்களை எதிர்த்துப் போராடி டிம்பக்டு நகரைப் பின்னடையச் செய்து, நைஜர் நதியில் பல நூறு மைல் தொலைவு முன்னேறிச் சென்றூர்கள்.

16. இறுதியில் கலம் புஸ்ஸா நகரை அடைந்தபோது அங்கு வாழ்ந்த மக்கள் இவரையும் இவரைச் சார்ந்தவர்களையும் அம்பு, ஈட்டி முதலியவைகளைக் கொண்டு இடையருது தாக்கினர். இவர்களது தாக்குதலுக்கு ஆற்றுது அவதிப்பட்டுக் கொண்டு இருக்கும்போது இவர் சென்ற கலம் ஒரு பாறையில் மோதி நின்றது. பார்க் உயிர் தப்புவான் வேண்டி யாற்றில் குதித்தார். இவர் எவ்யாற்றைக் காண் விழைந்து இத்துணை அல்லல்களுக்குட்பட்டுத் தளராது வந்தாரோ, அதே யாறு இவரது ஆவியைக் கவர்ந்தது.

17. அநேக ஆண்டுகளுக்குப் பிறகு இவரோடு இறுதி வரையில் இருந்த ஒரு வேலையாள் வாயிலாக இவர் அநேக அல்லல்களுக்குட்பட்டு இறந்துவிட்டார் என்பதைக் கேள்விப்பட்ட ஆங்கிலேயர், இவரது வீரத்தைப் புகழ்ந்தனர்; ஊக்கத்தைப் போற்றினர்; விடாமுயற்சியைப் புகழ்ந்தனர்; உறுதித் திறனை வியந்தனர்; இவரது பிறப்பிடமாகிய செல்கிர்க் ஷையரில் ஒரு சிலையையும் எடுப்பித்தனர். பிற்காலத்தில் இந்நதியின்மேல் ஆங்கிலேயர்களால் கட்டப்பட்ட பாலத்தில் 'மங்கோ பார்க் நினைவுக்காக' என்னும் சொற்கள் பொறிக்கப்பட்டன.

பயிற்சி :

I. விடை எழுதுக :—

1. இருண்ட கண்டத்தை இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு மக்களுள் பலர் அறிந்திலர். ஏன்?

2. மங்கோ பார்க்கின் வரலாற்றையும் பிறப்பையும் சுருக்கமாக எழுதுக.
3. "இது என்ன துணி காய்க்கும் மரமா?"—சந்தர்ப்பம் கூறி விளக்குக.
4. மங்கோபார்க் எங்கு, யாரால் விருந்தினராக உபசரிக்கப் பட்டார்?
5. கார்டன் நகர் அரசர் பார்க்குக்குக் கூறியது யாது?
6. லூடமர் நாட்டு அரசன் பெயர் யாது? அவன் பார்க்கை என்ன செய்ய எண்ணினன்? பார்க் எங்ஙனம் அவ்விபத்தி-னின்று விடுவிக்கப்பட்டார்?
7. 'ஜொலிபா' என்பது என்ன? அது எதைக் குறிக்கிறது?
8. இரண்டாம் பயணத்தின் தொடக்கத்தையும் முடிவையும் சுருக்கமாக அரைப் பக்கத்திற்குள் எழுதுக.

II. வாக்கியத்தில் வைத்தெழுதுக :—

இனத்தவர், அனுமதி பெற்று, நடாத்து, இடைப்பட்ட, நல்வரவு, பீடித்தது

III. எதிர்ச்சொல் எழுதுக :—

அனுமதி, வரவு, பீடித்தது, உபகாரம், இறுதி, சிறிது காலம், அடிமை

IV. அகராதி பார்த்துப் பொருள் எழுதுக :—

ஆய்வு, சோழி, இடர், நடாத்து, பீடித்தது, பொற்குவியல், பட்டினம், அடவி, உலையா, விழைந்தார், ஊக்கினர், நாவாய்

V. இலக்கணம் கூறுக :—

அ. 1. விருப்பப்படி, 2. வந்திருக்கிறார்கள், 3. உறங்கிக்கொண் டிருந்த பார்க், 4. தமக்கவசியமான—தொடர் இலக்கணம் கூறுக.

ஆ. 1. அந்நாடு, 2. பதியாகிய, 3. அவருடைய, 4. வந்துகொண் டிருந்த—இவைகளைப் பிரித்தெழுதுக.

15. கன்னனும் கண்ணனும்

[நாடகம்]

காட்சி—1

களம்—குரு க்ஷேத்திரம்
காலம்—காலை
பாத்திரங்கள்—துரியோதனன், கன்னன், சல்லியன், அசுவத்தாமன், படை வீரர்கள்.

[பாரதப்போரில் பதினேழாம் நாள் சூரிய உதயத்தின் பின் பாண்டவர் சேனையும் கௌரவர் சேனையும் போர்க்களத்தில் திரள்கின்றன. பாண்டவ வீரனான அருச்சுனன், தனது சேனையை அணிவகுத்து நிறுத்திவிட்டுப் போருக்கு ஆயத்தமாகிறான். கௌரவர் படைத் தலைவனான கன்னன், தனது சேனையைத் திரட்டி நிறுத்தி, துரியோதனனிடம் கூறுகின்றான்.]

கன்னன்: நந்தியாவட்டத்தாரணிந்த நராதிபனே, என் முன் நிற்கும் இந்திரன் மகனுக்கு, எல்லாக் கலகமும் செய்ய வல்லவனும், வஞ்சனையே வடிவமாய் உள்ளவனுமான கள்வன் தேர்ப்பாகனாயமர்ந்துள்ளான். அவனையொப்பார் தேவருலகினுமில்லை. ஆயினும், குதிரைகளின் நெஞ்சறிந்து தேர் செலுத்த வல்லவனும், போரில் விரகறிந்து உரைக்கத்தக்கவனும் இப்புவியில் சல்லியனையன்றி வேறெவனுமிலன். சல்லியன் இன்று என் தேரிலமர்ந்து சாரத்தியம் செய்வானாயின், அருச்சுனனுக்குச் சிவபெருமானே வந்து தேர் செலுத்தினாலும், அவனை யான் வெல்வேன்; பாண்டவருள் எஞ்சிய மற்ற நால்வரும் ஒவ்வொரு பகழிக்கு ஆற்றார். இன்றுடன் போரை முடித்து உனக்கு நாளையே உலக முழுவதையும் அடிப்படுத்துவேன்! நராதிபனே, ஒருரும் ஒரு குலமுமில்லாத என்னை, நீ உங்கள் குலத்துள்ளாரில் ஒருவனாகச் செய்தாய். தேர்ப் பாகன் வீட்டில் வளர்ந்த என்னைப் பொன்மணி முடி சூட்டி,

அரசரெல்லாம் போற்ற நின்னினும் சீர் பெற வைத்தாய். அத்துணைப் பெருநன்றி செய்த உனக்கன்றி, எனது உயிரை யார்க்கு அளிக்கப் போகின்றேன்! துரியோதனு, எனது செஞ்சோற்றுக் கடன் கழிக்க முற்பட்டுவிட்டேன்! சல்லியனை மட்டும் எனக்குத் தேரோட்ட இசைவிப்பாயானால், இன்று எனது போர்த்திறம் இன்னதென்பதனைக் கண்டு களிக்கலாம்.

துரியோதனன்: (சல்லியன் அருகிற்சென்று) மத்திர நாட்டரசே, நீர் யான் கூறுவதைக் கேட்டு எனக்கொரு வரம் நல்க வல்லீரோ? (கும்பிடுகிறான்.)

சல்லியன்: குருகுலக் கொழுந்தே, நீர் என்னைக் கை கூப்பிக் கும்பிடுவது அழகன்று! யான் தரத் தக்க வரம் யாதெனக் கூறும். உமது விருப்பப்படி அதனைத் தருகின்றேன்; மறுத்துரையேன். கூறும்.

துரி: சல்லிய மன்னரே, பகைவர்களாகிய பாண்டவர்களைக் கண்ணன் எவ்வாறு காக்கின்றானோ, அவ்வாறே நீரும் எங்களைக் காக்க வேண்டும். அதுவே யான் விரும்பும் வரம்.

சல்: நெடுந்தேர் நடாத்தும் அரசர்க்கரசரான நீர் என்னைக் காப்பதன்றி, உமது கட்டளை நிறைவேற்றி உமது குடையின்கீழ் வாழும் யானா உம்மைக் காக்க வல்லவன்? அன்றியும், தேவனாகவும், மானுடமாகவும், சராசரங்களாகவும் இருந்து விளையாட்டயர்கின்ற ஆதி மூர்த்திக்கு யான் நிகராவதெங்ஙனம்? அரவக் கொடியீர், உமது விருப்பம் யாதென வெளிப்படையாகக் கூறலாமே!

துரி: மத்திர நாட்டு மன்னரே, தேவேந்திரன் மகனுக்குத் தேர் செலுத்தும் முகுந்தனைப் போல, நீர் இன்று கன்னனுக்குத் தேர் செலுத்தினாலன்றிப் பாண்டவரை நாம் வென்று வாகை சூடுவது முடியாத செயலாகும். ஆதலால், அருள் புரிய வேண்டும்.

சல் : (கண் சிவக்கிறது ; மீசை துடிக்கிறது ; புருவம் நெற்றியிலேறுகின்றது.) துரியோதனரே, நீர் கூறுவது எத்துணைப் புன்மையதென்பதை உணராமற் கூறிவிட்டீர். மான் பணித்த வேலையை எங்கேனும் வல்லியம் புரியும் வழக்கமிருப்பின், மத்திரத்தானும் கன்னனுக்கு வலவனுவான்! மற்றொருவன் இச்சொல்லைச் சொல்லி இருந்தால், அவன் நா என்ன பாடுபட்டிருக்கும்! சொல்லியவர் சுயோதனராதலிற் பொறுத்தேன்! துரியோதனரே, ஒன்று சொல்லுகிறேன் ; கேளும் : இப்போது நம்மை எதிர்த்துப் போர் புரிய அணி வகுக்கப்பட்டு நிற்கும் சேனையை இரு கூறுக்கி, ஒன்றை எனக்கும் மற்றொன்றைக் கன்னனுக்கும் விடுவீராயின், யான் எனது கூற்றை வென்று பிறகு கன்னனது கூற்றினையும் அழிக்கப் பின் வாங்குவேனேயாயின், நீர் கூறியபடி கன்னனுக்குக் கட்டாயமாகத் தேர்ப்பாகனுவேன். இது சத்தியம்!

துரி : மத்திர மன்னரே, யான் கூறுவதைக் கோபமின்றிக் கேளும் : சிவபெருமானுக்குப் பிரமனும், அருச்சுனனுக்குக் கண்ணபிரானும், உத்தரகுமாரனுக்கு அருச்சுனனும் தேரோட்டியதை நீர் அறியீரா? அன்றியும், எல்லாக் கலைகளிலும் வல்லவர்க்கன்றி மற்றவர்க்குக் குதிரைகளின் தன்மையறிந்து தேர் செலுத்துவது இயலுமோ? ஆதலால், அன்பு கூர்ந்து என் வேண்டுகோட்கு இணங்கி, கன்னனுக்கு இன்று தேரோட்ட வேண்டுகிறேன.

சல் : நன்று நன்று! துரியோதனரே, இராசாதி ராசரான உமது வேண்டுகோளை யான் எங்ஙனம் மறுக்கக் கூடும்? உமது விருப்பப்படியே செய்வேன்.

துரி : சல்லிய பூபதி, உமக்கு எனது நன்றி உரியது! உமது இவ்வரிய உதவியை நான் என்றும் மறவேன்!

[திரை]

காட்சி—2

களம்—குரு க்ஷேத்திரம் காலம்—மாலை பாத்திரங்கள்—கண்ணபிரான், அருச்சுனன், கன்னன், சல்லியன், சேனைவீரர்.

[*கன்னனுடைய உடலெங்கும் அருச்சுனன் விடுத்த கணைகள் தைத்துக் குருதி வழிகின்றது. கன்னன் நிலை தவறி நிற்கின்றான் அவனுடைய கைகள் மட்டும் அம்புகளை ஏவும் தொழிலை நிறுத்தவில்லை.*]

கண்ணபிரான் : (*தமக்குள்*) இஃதென்ன ! விந்தையாயிருக்கின்றதே ! கன்னன் பிரஞ்ஞையற்று இருக்கின்றான். அருச்சுனன் விடும் அத்தனை அம்புகளும் அவன் உடலிற் பாய்கின்றன. ஆயினும், அவன் உயிர் போகவில்லையே ! அன்றியும், கன்னனுடைய கைகள் மட்டும் அம்புகளை ஏவிக்கொண்டிருக்கின்றனவே ! (*சற்று யோசிக்கிறார்.*) ஆம் ! அறிந்தேன் ! கன்னன் கொடை வள்ளல். ஆதலின், அவன் செய்த தருமம் இப்போது அவன் பக்கலில் நின்று அவன் தலையைக் காக்கின்றது. அத்தரும தேவதை கன்னன் பக்கலில் நிற்கும் வரை அவன் உயிரைக் கூற்றுவனும் கவர முடியாது. சரி ; ஏதேனும் உபாயம் செய்து கன்னனுடைய புண்ணியம் அனைத்தையும் பெற்றாலன்றி, அருச்சுனனால் அவன் உயிரைப் போக்க முடியாது என்பது நிச்சயம். (*அருச்சுனனைப் பார்த்து*) அருச்சுனா, போர் புரிவதை நிறுத்து. சற்றுப் பொறுத்திரு. இதோ நான் வந்துவிடுகிறேன். (*பிராமண வடிவத்துடன் கன்னனிடம் செல்கிறார்.*)

பிராமணன் : வெகு வேகமாகச் செல்லக்கூடிய புரவிகள் பூட்டிய விசாலமான தேரையுடைய பிரகாசம் பொருந்திய சூரியன் அளித்த சுதனே, அலை வீசும் பெருங்கடலால்

சூழப்பட்ட இப்பூமியில் தளர்ந்தவர் எவராயினும், அவர்க்கு வேண்டிய அனைத்தும் வரையாது வழங்கும் வள்ளல் நீயெனக் கேள்வியுற்று, மேருமலைச் சாரலில் தவம் புரிந்துகொண்டிருந்த யான், எனது வறுமையைப் போக்கிக்கொள்ள விரும்பி உன்னை வந்தடைந்தேன். உன்னாலியன்ற பொருள் ஏதேனும் உதவியருள வேண்டுகின்றேன்.

கன்னன் : (இரதத்தில் சாய்ந்த வண்ணம் புன்முறுவல் பூத்த முகத்துடன்) நன்று! அந்தணரே, நன்று! இந்நிலையில் யான் தரத்தக்க பொருள் ஏதேனுமிருப்பின், கேளும். நிச்சயமாகத் தருகிறேன்.

பிராம : கன்னா, உன்னிடம் இந்நிலையில் யான் யாசிக்கத் தக்க பொருளொன்றுமின்று. ஆயினும், நீ வறிஞர்கட்கு வரையாது கொடுத்து அளவற்ற புண்ணியத்தைத் திரட்டி வைத்திருக்கின்றாய்; அதனைத் தருவதே போதும்.

கன் : அந்தணரே, எனது ஆவி நிலை கலங்கி நிற்கின்றது. அஃது எனது உடலின் அகத்தில் உள்ளதா, புறத்தேயுள்ளதா என்பது திட்டமாக அறிதற்கில்லை. அது நீங்கி விடுவதற்கு முன்பு, பூவில் வாழ்கின்ற பிரமனும் நிகரற்ற உமக்கு, இடைவிடாமல் யான் செய்த புண்ணியம் அனைத்தும் மனப்பூர்வமாக இதோ கொடுத்தேன்! பெற்றுக் கொள்ளும். (இரு கைகளையும் கூப்பி வணங்குகின்றான்.)

பிரா : கன்னா, மகிழ்ச்சி! மிக்க மகிழ்ச்சி! உன் புண்ணியமனைத்தும் எனக்குக் கொடுத்துவிட்டதாக வாயாற் சொல்லிவிடுவது போதுமா? தானம் செய்கின்ற முறைப்படி கையில் நீர் விட்டுக் கொடுத்தாலன்றோ அத்தானம் ஏற்புடையதாகும்?

கன் : அந்தணரே, இப்போர்க்களத்தில் நீருக்கு எங்குப் போவது? (சற்று யோசிக்கிறான். முகம் மலர்கின்றது. தனது மார்பில் புதைந்திருக்கும் பாணங்களுள் ஒன்றைப் பிடுங்கி வெளிப்படும் உதிரத்தைக் கையில் ஏந்திக்கொள்-

கிறுன்.) அந்தணரே, இங்குத் தாரை வார்த்துத் தர வேறு நீர் கிடையாமையால், இச்செந்நீரை விட்டு என் புண்-

ணியமனைத்தும் தத்தம் செய்கிறேன்! பெற்றுக்கொள்-ளும்!

பிரா: கன்னு, எனது அகம் மகிழ்ந்தது! நான் சென்று வரு-கிறேன். ஆனல், அதற்கு முன் நீ வேண்டும் வரங்களை அளிக்க விரும்புகிறேன். என்னென்ன வரங்கள் வேண்-டுமோ, கேள். தடையின்றித் தருகிறேன். தாமதியாதே! கேள்.

கன்: அந்தணரே, முன் பிறப்பிற் செய்த தீவினையால் எனக்குப் பிறப்புகள் இனி ஏற்படுமாயின், ஒவ்வொரு பிறப்பிலும் 'இல்லை' என்று வந்து, என்னை யாசிக்கின்றவர்கட்கு 'இல்லை' என்று சொல்லாத இதயத்தை எனக்கு அருளக் கோருகிறேன். இது ஒன்றே யான் வேண்டும் வரம்.

பிரா: (கன்னனை மார்போடு தழுவி, கண்ணீர் சொரிந்து) கன்னு, நீ எத்தனை பிறவிகள் எடுத்தாலும், அப்பிறவிகள்

அனைத்திலும் ஈகையும் செல்வமும் எய்தி, முடிவில் முத்தியும் பெறுவாயாக! (கன்னன் கரம் கூப்பித் தொழு கிறான். பிராமணன் மறைகிறான்; திருமால் வடிவில் கன்னனுக்குக் காட்சியளிக்கிறான்.)

[திரை]

பயிற்சி:

I. விடை எழுதுக :—

1. கன்னன் துரியோதனனைப் பார்த்துச் சொன்னது என்ன?
2. "பாண்டவர்களைக் கண்ணன் எவ்வாறு காக்கின்றானோ, அவ்வாறே நீரும் எங்களைக் காக்கவேண்டும்."—சந்தர்ப்பம் கூறி விளக்குக.
3. சல்லியன் துரியோதனனுக்குச் சினந்து கூறியது யாது?
4. கன்னனது உயிரைப் போக்கக் கண்ணபிரான் செய்த சூழ்ச்சி யாது?
5. கண்ணபிரானைப் பார்த்துக் கன்னன் கேட்ட வரம் யாது?

II. எதிர்ச்சொல் எழுதுக :—

புண்ணியம், உதயம், வஞ்சனை, வீரன், முடி, போற்று, விருப்பு, மறுத்தல்

III. வாக்கியத்தில் அமைத்தெழுதுக :—

கோபமின்றி, இரு கூறாக்கி, இணங்கி, அன்பு கூர்ந்து, நிலை தவறி, காக்கின்றது

IV. அகராதி பார்த்துப் பொருள் எழுதுக :—

விரகறிந்து, சாரத்தியம், பகழி, சராசரங்கள், வலவன், கூற்று, பிரஞ்ஞை, பக்கலில், சுதன், தாரை, பாகன், நெடுந்தேர், முகுந்தன்

V. சொல்லியுள்ளபடி செய்க :—

1. பெற்றாலன்றி, உடலிற்பாய்கின்றது, உடலெங்கும், பொறுத்திரு (பிரித்தெழுதுக.)

2. (1) ஏவி + கொண்டு, (2) இ + பூமி, (3) மலை + சாரல், (4) உன்னால் + இயன்ற, (5) அந்தணர் + ஏ, (6) இரு + கைகள், (7) வந்து + அடைந்தேன். (சேர்த்தெழுதுக.)

3. தளர்ந்தவர் எவராயினும், அவர்க்கு வேண்டிய அனைத்தும் வரையாது கொடுக்கும் வள்ளல் நீயெனக் கேள்வியுற்றேன்; எனது வறுமையைப் போக்கிக்கொள்ள விரும்பினேன்; உன்னை வந்தடைந்தேன். (ஒரே வாக்கியமாக்குக.)

16. ஐக்கிய நாட்டுச் சபை

1. சில ஆண்டுகட்கு முன் ஓர் உலகப் போர் நிகழ்ந்தது என்பதை நீங்கள் கேள்வியுற்றிருப்பீர்கள். அதில் மக்கட்கு நேர்ந்த இன்னல்கட்கு இரங்கி, இனி உலகில் போர் ஒழிக்கப் பட்டு நிலையான அமைதி ஏற்படுத்தப்பட வேண்டும் என்னும் பெருநோக்குடன், 1945-ஆம் ஆண்டு, ஜூன் மாதம், 26-ஆம் தேதி உலகின் பல பாகங்களினின்று வந்த ஐம்பது நாட்டுப் பிரதிநிதிகள், அமெரிக்காவிலுள்ள ஸான் பிரான்ஸிஸ்கோ நகரில் ஒன்று கூடி உலகப் பொதுச் சபை ஒன்று நிறுவவேண்டு மென்று தீர்மானித்தனர். இவ்வாறு உருப்பெற்ற அச்சபையின் முதற்கூட்டம், 1945-ஆம் ஆண்டு, அக்டோபர்த் திங்கள், 24-ஆம் நாள் கூடியது. இப்பொழுது இச்சபையில் அறுபது நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

2. **இச்சபையின் நோக்கங்கள் :** உலகின்கண் போரினால் ஏற்படும் அச்சத்தையும் துன்பத்தையும் ஒழித்து, நாடுகளிடையே சமாதானத்தையும் பாதுகாப்பையும் நிலைபெறச் செய்து, அவைகளுக்கு இடையே உள்ள நட்பை வளர்த்தல்; அவைகளின் சமூக, பொருளாதார, கல்வி வளர்ச்சிகளுக்கு உதவல்; இன, மத, மொழி வேறுபாடுகளின்றி, ஒவ்வொரு நாட்டிலுமுள்ள ஆண், பெண் ஆகிய இரு பாலாரும் சம உரிமைகளுடன் வாழச் செய்தல்; அதனால், சமூகம் வளர்ச்சியுறவும், மக்களின் வாழ்க்கையை உயர்த்தவும் பாடு படுதல் ஆகிய இவை இச்சபையின் நோக்கங்கள். இந்நோக்கங்களுக்காக மேற்கூறிய அறுபது நாட்டினரும் பொறுமை, சகிப்புத்தன்மை, நட்புறவு இவைகளை மேற்கொண்டு, அவரவர் நாட்டிலுள்ள படைகளையும் பொறிகளையும், மக்கள் நன்மைக்கும் வளர்ச்சிக்கும் அன்றிப் பயன்படுத்துவதில்லை என்னும் உறுதி கூறி, இப்பேரவையின் அங்கத்தினர் ஆகி உள்ளனர். அன்றியும், மேற்கூறிய நாடுகள் அவ்வாறே நடந்து உலக சமாதானத்தை நிலைநிறுத்தப் பாடு பட்டும் வருகின்றன.

3. இச்சபையில் இதன் அடிப்படைக் கொள்கைகளுக்கு முரணாக நடக்கும் விஷயங்களோ அன்றிப் பல நாடுகளுக்குப்

பொதுவான சிக்கலோ அல்லது இவை போன்ற பிரச்சினைகளோதாம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். இச் சபையின் பொது மொழிகளாகக் கொள்ளப்பட்டவை சீனம், ஆங்கிலம், பிரெஞ்சு, ருஷ்ய, ஸ்பானிய மொழிகளாகும். ஆனால், நடைமுறையில் இருப்பன ஆங்கிலமும் பிரெஞ்சுமேயாம்.

4. இச்சபை தன்னுடைய வேலைகளைச் சரிவர நடத்துவதற்காக, ஆறு பெரும்பிரிவுகளாய்ப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை, 1. பொதுச் சபை, 2. பாதுகாப்பு ஆலோசனைச் சபை, 3. சமுதாய பொருளாதார ஆலோசனைச் சபை, 4 தருமகர்த்தர் சபை, 5. உலகப் பொது நீதி மன்றம், 6. தலைமைக் காரியாலயம் என்பனவாம். மற்றும் பல தனிப்பட்ட சபைகளும் இச் சபையுடன் இணைக்கப்பட்டுள்ளன.

5. பொதுச் சபையில் ஐக்கிய நாட்டுச் சபையில் உள்ள எல்லாரும் அங்கத்தினர் ஆவர். ஒவ்வொரு நாடும் இதன் ஒவ்வொரு கூட்டத்திற்கும் ஐந்து அங்கத்தினர்களை அனுப்பலாம். எல்லா விஷயங்களையும் இச்சபை தீர்மானிக்க அதிகாரம் பெற்றுள்ளது. மற்றப் பெரும்பிரிவுகளின் வேலைகளைக் கவனிப்பதும், அவைகளுக்கு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பதும், எல்லாப் பொது விஷயங்களையும் விவாதிப்பதும் இச்சபையின் முக்கிய வேலைகளாகும். இதில் வரும் முக்கியமான தீர்மானங்களெல்லாம், அங்கத்தினர்களுள் மூன்றில் இரு பங்கு தொகையினர் ஓட்டளித்தால்தான் அங்கீகரிக்கப்படும்.

6. பாதுகாப்பு ஆலோசனைச் சபையில் சீனு, பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ், ரஷ்யா ஆகிய ஐந்து நாட்டின் நிரந்தர அங்கத்தினர்களும், ஆறு தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களும் உண்டு. நாடுகளுக்கு இடையே ஏற்படும் தகராறுகளைத் தீர்க்கவும், அவைகளுக்குச் சமாதானத்தையும் பாதுகாப்பையும் அளிக்கவும், உலக சமாதானத்துக்கு இடையூறு விளைவிக்கும் எந்நாட்டின்மீதும் படையெடுத்து அதை அடக்கவும், பொதுச் சபை இதன்கண் கொண்டு வரும் பிரச்சினைகளை ஆராய்ந்து முடிவு கட்டவும் வேண்டிய பொறுப்புக்கள் இச் சபையினுடையவை ஆகும். இதன் கீழ்ப் பல துறைகளில்

வேலை செய்யப் பல சிறு குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன. இச்சபை எப்பொழுதும் வேலை செய்யும் நிரந்தரமான சபையாகும்.

7. சமுதாய பொருளாதார ஆலோசனைச் சபை, தாழ்விலாச் செல்வமும், உயர்ந்த நீதியும், சீரும் சிறப்பும் மிக்க ஒரு புது உலகத்தைத் தோற்றுவிக்க முற்படுகின்றது. பொருளாதார, கல்வி, சமூக, கலாசார, சுகாதாரத் துறைகளிலும் மேலும் பல்வேறு துறைகளிலும் ஆராய்ச்சி செய்தும், மக்களுக்கு உள்ள சுதந்தரத்தைப்பற்றி அங்கம் வகிக்கும் நாடுகட்கு அறிவித்தும் உதவி செய்கிறது. இஃது இவ்வாறு மக்கள் முன்னேற்றத்திற்கும் உலக முன்னேற்றத்திற்கும் அடி கோலுகிறது. இதன் அங்கத்தினர் தொகை பதினெட்டு.

8. தருமகர்த்தர் சபை என்பது, இன்னும் சுய ஆட்சி பெறாத பிற்போக்கு நாடுகளைக் கல்வி, சமூகம், பொருளாதாரம், அரசாங்கம் ஆகிய துறைகளில் முன்னேற்றம் அடையச் செய்து, அவை தம்மைத் தாமே ஆண்டுகொள்ளும் நிலைமைக்கு வரும்வரை பாதுகாக்கும் பொறுப்புள்ள சபையாகும். இஃது ஒரு தனிப்பட்ட அதிகாரியை நியமித்தோ, அல்லது வேறொரு நாட்டையோ அல்லது இரண்டு மூன்று நாடுகளையோ அப்பிற்போக்கு நாடுகளின் ஆட்சியை நடத்தும்படி கூறியோ அவ்வப்போது அவற்றினிடமிருந்து அறிக்கைகளைப் பெற்று, ஆவன செய்து, அந்நாடுகளை முன்னேறச் செய்கிறது. இம்முறையில் இப்பொழுது ஒன்பது நாடுகள் ஆளப்பட்டு வருகின்றன.

9. உலக நீதிமன்றம், பதினைந்து நீதிபதிகளைப் பெற்றுள்ளது. இது பொதுச் சபைக்கு உலகத்தின் பல நாடுகளிலும் உள்ள சட்டங்களைப்பற்றி எடுத்துக் கூறியும், சச்சரவுகளைத் தீர்த்தும், உலகின்கண் நீதி நீடித்து நிற்கச் சமன் தூக்கிச் சீர் செய்யும் சபையாகும். எந்த நாடும் எல்லைச் சண்டை, சட்டங்களை எடுத்துரைத்தல் போன்றவற்றில் தோன்றும் சந்தேகங்களைத் தீர்த்து வைக்க இதை அணுகலாம். இந்த நீதி மன்றம் கூறும் தீர்ப்பை அவ்வாறு அணுகிய நாடு ஏற்றுக்கொள்ள வேண்டுவதவசியம்.

10. மேற்கூறிய எல்லாவற்றையும் நடத்தி வைக்க ஒரு பெருங்காரியாலயம் தேவை. இஃது அமெரிக்காவிலுள்ள ஸான்பிரான்ஸிஸ்கோ நகரில் அமைந்துள்ளது. இதை நடத்தப் பொதுச் செயலாளர் ஒருவர் உள்ளார். இப்போது உள்ள செயலாளர் டிரிக்வி லீ (Trygve Lie) என்பவர். இவர் நார்வே தேசத்தவர். இக்காரியாலயம் எட்டுப் பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டு, வேலை செய்கிறது. இவைகளுக்கு அங்கத்தினர்கள் உலகின் பல தேசங்களினின்றும் நியமிக்கப்படுகிறார்கள். இவ்வாறு பல நாட்டு மக்களும் ஒன்று கூடிப் பொது நலனுக்குப் பணியாற்றுவது மிகவும் உயர்ந்த தொண்டன்றோ?

11. இவ்வவைகளை நடத்தப் பெரும்பொருள் செலவாகும். உதாரணமாக, *1948*-ஆம் ஆண்டு இவற்றுக்குச் செலவான தொகை சுமார் 3½ கோடி டாலர்கள் ஆகும். உலகப் பொது நலனை நோக்குங்கால், இஃது ஒரு பெருந்தொகை அன்று.

12. மேற்கூறிய சபைகளைத் தவிர, சில தனிப்பட்ட சபைகளும் ஐக்கிய நாட்டுச் சபையுடன் இணைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு இணைக்கப்பட்டுள்ளவை பதின்மூன்றாகும். அவற்றுள் உலகத் தொழிலாளர் ஸ்தாபனம், உலக உணவு விவசாய ஸ்தாபனம், ஐக்கிய நாட்டுக் கல்வி கலாசார விஞ்ஞான ஸ்தாபனம், சர்வதேசத் தபால் யூனியன், சர்வதேசப் பாங்கு, சர்வதேசச் சுகாதார சங்கம் என்பன சிலவாகும்.

13. இதில் சர்வதேசப் பாங்கு, உலகத்தின் பல பாகங்களிலும் தொழில்கள் வளர்ந்து நாடுகள் முன்னேற உதவி அளிக்கும். இதே போல, உலக உணவு ஸ்தாபனம், உலக மக்களுக்கு உணவைச் சரியானபடி பகிர்ந்து அளித்து, மக்களின் உணவுச் சத்தை அதிகரித்து, உலகப் பொருளாதார நிலையை உயர்த்த உதவுகிறது. தொழிலாளர் நிலையை உயர்த்தத் தொழிலாளர் ஸ்தாபனமும், உலக சுகாதாரம் உயர்ந்து மக்கள் எல்லாரும் சுகவாழ்வு வாழ்வதற்காகச் சுகாதார ஸ்தாபனமும் பணியாற்றுகின்றன.

14. இத்தகைய ஸ்தாபனங்களில் இந்தியாவின் பொறுப்பு மகத்தானது. ஐக்கிய நாட்டுச் சபையின்கீழ் உள்ள

எல்லா முக்கிய ஸ்தாபனங்களிலும் அநேகமாக இந்தியா அங்கம் வகிக்கின்றது. இச்சபைக்கு இந்தியா ஒரு நிரந்தர அங்கத்தினரை அனுப்பியுள்ளது. அவர் பெயர் பெனகல் நரசிங்க ராவ் என்பதாகும். அவரைப் போன்ற அறிஞர்களால் நம் நாடு உலக அரங்கில் புகழ் பெற்று வருகின்றது.

15. உலகமானது இன்பம், சமாதானம், செல்வம் ஆகிய எல்லாம் தழைத்தோங்கி, பஞ்சம், வறுமை, போர், பிணி எல்லாம் நீங்கி, வளமிக்கு வாழவேண்டும் என்னும் பெருநோக்குடன் உண்டாக்கிய இப்பேரவை, நீடூழி வாழ்வதாக! பெருந் தலைவர்கள் முயற்சி தழைத்தோங்கி, மண்ணுலகம் சிறந்து வாழ்வதாக!

பயிற்சி :

I. விடை எழுதுக :—

1. ஐக்கிய நாட்டுச் சபை எங்கு, எப்போது தொடங்கப் பட்டது?
2. ஐக்கிய நாட்டுச் சபையின் முக்கிய நோக்கங்கள் யாவை?
3. ஐக்கிய நாட்டுச் சபை எத்தனை பிரிவுகளைக் கொண்டது? அவைகள் யாவை?
4. சிறு குறிப்பு வரைக :—

   1. பொதுச் சபை, 2. தருமகர்த்தர் சபை, 3. பாதுகாப்பு ஆலோசனைச் சபை, 4. உலகப் பொது நீதி மன்றம், 5. சமுதாயப் பொருளாதார ஆலோசனைச் சபை.
5. ஐக்கிய நாட்டுச் சபையைப்பற்றி ஒரு பக்கத்திற்கு மேற்படாமல் கட்டுரை வரைக.

II. எதிர்ச்சொல் எழுதுக :—

சமாதானம், நிரந்தரம், அழிக்க, அச்சம், நட்பு, வளர்த்தல், பொறுமை

III. வாக்கியத்தில் அமைத்தெழுதுக :—

ஆலோசனை, சீரும் சிறப்பும், முற்படு, பிற்போக்கு, தழைத்தோங்கி, பணியாற்றுவது

IV. அகராதி பார்த்துப் பொருள் எழுதுக :—

நிரந்தரம், முரண், பணி, திறவ, திங்கள், பொறிகள், சிக்கல், மன்றம், துறை, அரங்கு, பேரவை, தழைத்தோங்கி

V. சொல்லியுள்ளபடி செய்க :—

1. பெருந்தொகை, தொண்டன்றே, மேற்கூறிய, முதற்கூட்டம், பொருளாதாரம், தாழ்விலா—பிரித்தெழுதுக.

2. நாடுகளின் சமூக, பொருளாதார, கல்வி வளர்ச்சிகளுக்கு உதவல்; இன, மத, மொழி வேறுபாடுகளின்றி, ஒவ்வொரு நாட்டிலுள்ள ஆண் பெண் ஆகிய இருபாலாரும் சம உரிமைகளுடன் வாழச் செய்தல்; அதனால், சமூகம் வளர்ச்சியுறவும், மக்களின் வாழ்க்கையை உயர்த்தவும் பாடு படுதல் ஆகிய இவை இச்சபையின் நோக்கங்கள்.—(இரு வாக்கியங்களாக எழுதுக.)

17. ஒரு விநோதப் பாட்டு

1. பண்டைக் காலத்தில் பாண்டி நாட்டில் முத்தமிழ் வல்ல புலவர் ஒருவர் இருந்தார், முத்தமிழில் வல்லுநராயிருந்தது குறித்தோ, பிற காரணம் குறித்தோ, அவருக்கு முப்பழப் புலவர் என்ற பெயர் வழங்கி வந்தது. அவருக்கு வாய்த்த மனைக்கிழத்தியாரின் பெயர், சண்பகவடிவு என்பது. அவ்வம்மையார் மிக்க அழகு வாய்ந்தவர்; கணவர் சொற்கடவாத சீரிய குணம் படைத்தவர்; கல்வியறிவு நிரம்பியவர். ஆனால், அற்ப விஷயத்திற்கும் அளவற்ற சினங்கொள்ளும் இழுக்கொன்று மட்டும் அவ்வம்மையாரிடம் குடிகொண்டிருந்தது.

2. புலவர் சாந்த குண சீலர். "இனிய உளவாக இன்னாத கூறல் கனியிருப்பக் காய் கவர்ந்தற்று." என்னும் மறைமொழிப் பொருளையுணர்ந்து, எவரிடத்தும் இனிமை ததும்பப் பேசும் வழக்கமுள்ளவர். ஆதலால், தம் மனைவியார் சினங்கொண்டு சீறிப் பேசும் பொழுதெல்லாம், அவர் தம் இனிய சொற்களாலும், சாதுரிய மொழிகளாலும் அவரது கோபத்தை அகற்றி, அவரை முறுவலிக்கச் செய்துவிடுவார். இறைவன் அருளால் புலவருக்குப் புதல்வர் இருவர் இருந்தனர். ஒருவனுக்கு வயது பத்து; மற்றவனுக்கு வயது எட்டு. அவ்விருவரையும் புலவர் எந்தக் குருகுலத்துக்கும் அனுப்பாமல், தாமே அவர்க்குத் தமிழ் கற்பித்து வந்தார். அச்சிறுர் இருவரும், குறும்பு மிக்கவர்; தந்தையார் வீட்டை விட்டு வெளியேறிய உடனே ஏடு எழுத்தாணிகளை எறிந்துவிட்டு விளையாடத் தொடங்குவர். அவர்களுடைய விளையாட்டு இறுதியில் சச்சரவாய் முடியும். அன்னையாருக்கு அவர்களுடைய சச்சரவுகளைத் தீர்த்து வைப்பதே ஓயாத வேலையாய் இருக்கும்.

3. ஒரு நாள் புலவர் வெளியே சென்றிருந்து, பசியோடு வீடு திரும்பினார்; வீட்டிற்குள் நுழையும்போதே, "சண்பகம், சமையலாகிவிட்டதா?" என்று கேட்டுக்கொண்டே வந்தார். சமையலறையிலிருந்த சண்பகம், சினந்த முகத்துடன் சரேலென வெளியில் வந்து, "நீங்கள் பிள்ளைகளைப் பெற்று

வைத்திருக்கிற இலட்சணத்தில் சமைப்பது எங்கே? நீங்கள் வாயிலுக்கு வெளியே கால் வைக்க வேண்டுவதுதான் தாமதம்! இந்தப் பிள்ளைகள் கையிலிருக்கும் ஏடு எழுத்தாணி-களை எறிந்துவிட்டு, வானரங்கள் போலக் கிளம்புகின்றார்கள். ஒருவன் ஓடி வந்து, 'அம்மா, அம்மா, அண்ணன் அடித்ததைப் பார்!' என்று கூறுகிறான். மற்றவன் ஓடி வந்து, 'அந்தப் பயல் என்னை எப்படிக் கிள்ளினான் பாரம்மா! அதனாற்றான் அடித்தேன்,' என்கிறான். 'சும்மா இருக்கும் போதே கிள்ளு-வேனா? நீ அவனுக்குக் கொடுத்த அதிரசத்தை அவசர அவசர-மாகத் தின்றுவிட்டு, என்னிடமிருந்ததைப் பிடுங்கி வாயிற் போட்டுக்கொண்டால், நான் கிள்ளாதிருப்பேனோ?' என்று காரணம் கூறுகிறான் மற்றவன். இவர்கள் சச்சரவை நீக்கவே சரியாய் இருக்கின்றது. சமைக்க நேரம் எங்கே? ஒன்று சொல்கிறேன்: நாளை முதல் நீங்கள் வெளியே போகும்போது உங்கள் பிள்ளைகளையும் அழைத்துப் போகாவிட்டால், பட்டினி கிடக்க வேண்டுவதுதான்!" என்று சட்ட திட்ட-மாகக் கூறினாள்.

4. சண்பகத்தின் சொற்பொழிவைக் கேட்ட புலவர்பால் இருந்த பசி பறந்துவிட்டது. அவர் சற்றுச் சிந்தித்தார்; சண்பகத்தின் சீற்றத்தை மாற்ற முற்பட்டார். "சண்பகம், நீ நன்கு கல்வி கற்றவள். ஆயினும், உனது கல்வி பேடியின் கையிலுள்ள வாள் போல உனக்கு ஒரு சிறிதும் பயன்படுவ-தில்லை. நீ உலக அறிவு சிறிதுமின்றிக் கிணற்றுத் தவளை போல இருக்கின்றாய். வீட்டுக்கு வீடு மண்ணடுப்பேயன்றிப் பொன்னடுப்பைக் கண்டவர் எவருமிலர். வீட்டில் குழந்தை-கள் இருந்தால், குறும்புகள் செய்யாமலும், சச்சரவிட்டுக்-கொள்ளாமலும் இருப்பார்களா? இது நீ அறியாததா? இந்-நிலை மண்ணுலகத்தில் மட்டுந்தான் இருப்பதாக நேற்று வரை யான் எண்ணியிருந்தேன். நேற்று இரவு நானும் என் ஆருயிர் நண்பர் சிவப்பிரகாசரும் கைலையம்பதிக்குக் கண்ணுதலைத் தரிசிக்கச் சென்றிருந்தோம். அங்கு நிகழ்ந்ததைக் கண்ட பிறகுதான் நம்முடைய பிள்ளைகள் எத்துணையோ மேலானவர்-கள் என்னும் முடிவுக்கு வந்தேன்," என்று கூறினார்.

5. அது கேட்ட சண்பகத்தின் முகத்திலிருந்த சினக் குறி சிறிது சிறிதாக மாறி வியப்புக் குறி தோன்றியது. "என்ன! கைலாயம் சென்றீர்களா! இவ்வளவு பெரிய பொய் பேச எங்குக் கற்றீர்கள்? 'காளை மாடு கன்று போட்டது,' என்றால், 'பிடித்துக் கட்டு,' என்பவருள் என்னையும் ஒருத்தியாக வைத்து எண்ணுகின்றீர் போலும்! நீராவது, கைலாயமாவது, போவதாவது! இவையனைத்தும் அண்டப் புளுகு!" என்றார் அவ்வம்மையார்.

6. "சண்பகம், நான் சொல்வது பொய்யன்று; எழுத்துக்கெழுத்து உண்மையானது. நான் மட்டும் போனேன் என்று கூறினால் நீ நம்பாமற் போகலாம்; என்னுடன் சிவப்பிரகாசரும் வந்திருந்தார் என்று கூறுகின்றேனே! அதினின்று அஃது உண்மையா, பொய்யா என்பதை உன்னால் நிச்சயித்துக்கொள்ள முடியவில்லை என்றால், பிறகு நான் என்ன கூறுவது! நான் என் கதையை நிறுத்திக்கொள்கிறேன். ஆக வேண்டுவதைக் கவனிப்போம்,", என்று கூறிப் புலவர் பேச்சை நிறுத்திவிட்டார்.

7. புலவர் அவ்வாறு பேச்சை நிறுத்தியவுடனே சண்பகத்தின் உள்ளத்திலிருந்த வியப்பு ஓங்கி நின்றது. 'கைலையில் ஏதோ காட்சியைக் கண்டதாகக் கூறினாரே, அதைக் கூறுவதற்குமுன் நாம் அவசரப்பட்டுவிட்டோமே!' என்று தமக்குள் எண்ணிய சண்பகம், "கிடக்கட்டும், கைலையில் நீங்கள் கண்டதென்ன? அதைக் கூறும்; கேட்கிறேன்," என்றார். "நான் கைலைக்குப் போனதை நீ நம்பாத போது, அங்கு நான் கண்ட காட்சி எங்ஙனம் உண்மையாகும்? வேண்டா. நான் கூறமாட்டேன்," என்று புலவர் சிறிது மிடுக்காய்ப் பேசினார்.

8. உடனே சண்பகம் புலவரைப் பார்த்து, "கோபித்துக்கொள்ள வேண்டா. உண்மையோ, பொய்யோ, சொல்லத் தொடங்கியதைச் சொல்லுங்கள். அதையும் கேட்டுவிட்டால், உண்மை விளங்கிவிடுகிறது," என்றார். புலவர் தொண்டையைக் கனைத்துக்கொண்டு, "நானும் நண்பர் சிவப்பிரகாசரும் சென்றோமா? முதலில் நந்தி தேவர் எங்களை நன்கு அறிந்து-

கொள்ளாமல் உள்ளே விட மறுத்தார்; பிறகு நாங்கள் முத்தமிழ் வல்ல முதுபெரும்புலவர்கள் என்பதையறிந்தவுடனே முகமன் கூறி உள்ளே அனுப்பினர். அவையின் உள்ளே சென்று ஒரு பக்கம் அமர்ந்தோம். சிவபெருமானும், மலைமகளாரும் அரியணையில் அமர்ந்திருந்தனர். நாரதர் வீணை கானம் செய்துகொண்டிருந்தார். அத்தருணத்தில் சிவபெருமானுடைய புதல்வர் இருவரும் ஒருவரோடொருவர் சச்சரவிட்டுக்கொண்டே அவையிற்புகுந்தனர். அது கண்ட சிவபெருமான் வீணை கானத்தை நிறுத்தச் சொல்லி, அவர்களைப் பார்த்தார். உடனே ஐங்கரராகிய விநாயகர் தந்தையார் அருகில் வந்து அழத் தொடங்கினர். சிவபெருமான், 'விநாயகா, அழாதே! என்ன நேர்ந்தது உனக்கு?' என்று கேட்டார். விநாயகர், 'அப்பா, ஆறுமுகன் என் காதை நன்றாகக் கிள்ளிவிட்டான்! வலி தாங்க முடியவில்லை!' என்று கூறிவிட்டுச் சிணுங்கத் தொடங்கினர்.

9. "உடனே சிவபெருமான் வேலவரைப் பார்த்து, 'ஏன் நீ அவ்வாறு செய்தாய்?' என வினவினர். வேலவர் தந்தையாரின் அருகிற்சென்று, 'அப்பா, இவர் சும்மா இருந்தால் நான் கிள்ளுவேனா? இவர் என் தலைகளில் உள்ள கண்களை 'ஒன்று, இரண்டு' என்று எண்ணினர். அதனால், நான் இவர் காதைக் கிள்ளினேன்,' என்று பகர்ந்தார். அது கேட்ட இறைவர், ஐங்கரரை நோக்கி, 'இலம்போதரா, நீ ஏன் அவ்வாறு விகடம் செய்தாய்?' என்று கேட்டார். ஐங்கரர், 'அப்பா, நான் அப்படிச் செய்தது உண்மைதான். ஏன் செய்தேன் தெரியுமா? இந்தப் பயல் எனது துதிக்கையைப்பற்றி முழம் போட்டானப்பா,' எனப் பதிலிறுத்தார். அப்போது சிவபிரானுடைய நாட்டம் முருகர்மீது விழுந்தது. அவர் தலையைக் குனிந்துகொண்டு ஒன்றும் பேசாமல் முறுவலித்து நின்றார்.

10. "அது கண்ட இறைவர், 'பார்வதி, உன்னுடைய பிள்ளைகளின் திருவிளையாடல்களைப் பார்!' என்று கூறி நகைத்தார். உமாதேவியார் உடனே தம் மூத்த பிள்ளையாராகிய விநாயகரை அருகழைத்து அணைத்துக்கொண்டார். இத-

னைக் கண்ட நாங்கள், 'மண்ணுலகிற்றான் மக்களால் இத்தகைய தொல்லைகள் நேர்கின்றனவென்றால், கைலாயத்தில் திருக்கோயில் கொண்டிருக்கும் சிவபெருமானையும் பார்வதியாரையுங்கூட இத்தொல்லை விட்டபாடில்லையே!' என்று பேசிக்கொண்டே மண்ணுலகத்தை அடைந்தோம். வரும் போதே நாங்கள் கண்ட காட்சியை நண்பர் சிவப்பிரகாசர் அழகிய செய்யுளாகப் பாடி முடித்தார். அதனைக் கூறுகிறேன். கேள்:

'அரனவனி டத்திலே ஐங்கரன் வந்துதான்
'ஐய! என் செவியைமிகவும்
அறுமுகன் கிள்ளினான்!' என்றே சிணுங்கிடவும்,
அத்தன்வே லவனைநோக்கி
விரைவுடன் வினவவே, 'அண்ணன்என் சென்னியில்
விளங்குகண் எண்ணினன்,' என
வெம்பிடும் பிள்ளையைப் பார்த்து,'நீ அப்படி
விகடமேன் செய்தாய்?' என,
'மருவுமென் கைந்நீளம் முழமளந் தான்' என்ன,
மயிலவன் நகைத்துநிற்க,
மலையரையன் உதவவரும் உமையவனை நோக்கி,'நின்
மைந்தரைப் பாராய்!' எனக்
கருதரிய கடலாடை உலகுபல அண்டங்
கருப்பமாய்ப் பெற்றகன்னி
கணபதியை அருகழைத் தகமகிழ்வு கொண்டனள்
களிப்புடன் உமைகௌரியே.'

11. இப்பாடலைக் கேட்ட சண்பகத்தின் கோபமெல்லாம் பறந்துவிட்டது. அவர் தம் கணவரின் சமயத்துக்கேற்ற சாதுரியமான கட்டுக்கதையிற்கருத்தூன்றிக் களிப்பெய்தினார்.

பயிற்சி :

I. விடை எழுதுக :—

1. **"இனிய உளவாக இன்னாத கூறல்**
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று."
என்பது எங்ஙனம் முப்பழப் புலவருக்குப் பொருந்தும்? விவரிக்க.

CONNEMARA PUBLIC LIBRARY
31 MAY 1956

2. "நீராவது, கைலாயமாவது, போவதாவது! இவையனைத்-தும் அண்டப் புளுகு!"—சந்தர்ப்பம் கூறி விளக்குக.
3. குழந்தைகளின் சச்சரவைக் கூறிய சண்பகவடிவுக்கு முப்பழப் புலவர் கூறியது யாது?
4. "பார்வதி, உன்னுடைய பிள்ளைகளின் திருவிளையாடல்களைப் பார்!"—இதை யார், எப்போது, எதற்காகக் கூறினார்?

II. எதிர்ச்சொல் எழுதுக :—

சினம், இனிமை, நிரம்ப, படித்தவர், சாந்தம், இலட்சணம், தாமதம்

III. வாக்கியத்தில் அமைந்தெழுதுக :—

சட்டதிட்டமாக, முற்பட்டார், கண்ட பிறகு, மிடுக்காக, முகமன், பதிலிறுத்தான்.

IV. அகராதி பார்த்துப் பொருள் எழுதுக :—

முகமன், சிறார், அரியணை, முதுபெரும்புலவர், மலை மகளார், அமர், கானம், அவை, சிணுங்க, எய்து, சென்னி, அரன், அத்தன், அண்டம்

V. சொல்லியுள்ளபடி செய்க :—

நானும் கண்பர் சிவப்பிரகாசரும் சென்றோமா? முதலில் நந்தி தேவர் எங்களை நன்கு அறிந்துகொள்ளாமல் உள்ளே விட மறுத்தார். பிறகு நாங்கள் முத்தமிழ் வல்ல முதுபெரும்புலவர்கள் என்பதையறிந்-தார்; உடனே முகமன் கூறி உள்ளே அனுப்பினார். (ஒரே வாக்கிய மாக்குக.)

18. எங்கள் இன்பச் செலவு

1. 1950-ஆம் ஆண்டு, ஜுலைத் திங்கள், 7-ஆம் நாள் இரவு எங்கள் பள்ளியிற்பயிலும் ஆறும் படிவ மாணவர் நாற்பதின்மரும், தலைமை ஆசிரியர் உட்பட ஆசிரியர் ஐவரும் சென்னை எழும்பூர்ப் புகை வண்டி நிலையத்தில் 'திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ்' எனப்படும் புகை வண்டித் தொடரிற் புறப்பட்டோம். ஒரு வார காலத்தில் திருக்குற்றாலத்தையும், மதுரை மாநகரையும் பார்த்துவிட்டுத் திரும்புவது என்பது எங்கள் திட்டம். அதன்படி எழும்பூரினின்று நேரே திருக்குற்றாலத்துக்குச் சென்றோம். நாங்கள் ஏறிய புகை வண்டி இரவு முழுவதும் மறுநாட்பகல் முழுவதும் சென்று, நள்ளிரவில் தென்காசி என்னும் புகை வண்டி நிலையத்தை அடைந்தது. குற்றாலத்தைப்பற்றிக் கூற வேண்டுபவை நிரம்ப இருத்தலினால், இடைவழியில் நாங்கள் துய்த்த இன்பங்களைப்பற்றி ஈண்டு விவரியாது விடுகின்றேன் :

2. திருநெல்வேலியினின்று திருவனந்தபுரம் செல்லும் மார்க்கத்தில் உள்ளது தென்காசி என்னும் புகை வண்டி நிலையம். அங்கிருந்து மூன்று கல்தொலைவில் உள்ள திருக்குற்றாலத்துக்கு மாட்டு வண்டி, குதிரை வண்டி முதலிய வாகனங்களிற் செல்லலாம். நாங்கள் தென்காசிப் புகை வண்டி நிலையத்தில் இரவைக் கழித்து, மறுநாட்காலையில் அங்குச் சிற்றுண்டி அருந்திவிட்டு, எங்கள் மூட்டை முடிச்சுக்களை நான்கு மாட்டு வண்டிகளில் ஏற்றிவிட்டு, அனைவரும் நடந்தே சென்றோம். நாங்கள் சென்றது சாரற்காலமாதலின், காலைக் கதிரவன் சற்று மங்கிய கிரணங்களோடு காட்சி அளித்தான். நாங்கள் சென்ற சாலையின் இரு புறங்களிலும் காணப்பட்ட மரங்களும் செடி கொடிகளும் பச்சைப்பசேலெனக் காட்சி அளித்தன.

3. திருக்குற்றாலம் ஞானசம்பந்தர், நாவுக்கரசர், மணிவாசகர் ஆகிய மூவர் நாயன்மாரால் புகழ்ந்து பாடப்பெற்ற புண்ணியத் தலமாகும். கூத்தப்பெருமான் ஆனந்த நடனம் புரியும் பஞ்ச சபைகளுள் இது சித்திரசபை எனப்படுவது. இங்குத் திருக்-

கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் சிவபெருமானுக்குத் திரிகூடநாதர் என்பது பெயர்; தேவியாரின் பெயர் குழல்வாய் மொழியம்மை என்பது. இத்தலத்தின் விருட்சம் குறும்பலா-வாகும்.

4. இறைவனது திருக்கோவிலின் வலப்புறத்தும் பின் புறத்தும் மேற்கு மலைத்தொடரின் ஒரு பிரிவாகிய குற்றால மலை அமைந்துள்ளது. திரிகூட மலை என்பது குற்றால மலைக்கு வழங்கும் வேறு பெயர். இம்மலையின் உச்சியினின்று ஓர் அருவி ஓடி வந்து கோவிலின் அண்மையில் விழுகின்றது. இதுவே புகழுக்குரிய 'குற்றால நீர் வீழ்ச்சி' எனப்படுவது. இது

சித்திரா நதியின் போக்கில் அமைந்துள்ளதாகும். சுமார் இருநூறு அடி உயரத்தினின்று இவ்வருவி வெள்ளிய நுரை-களுடன் கரும்பாறையின்மீது ஓடி வந்து விழுவது கண் கொள்ளாக் காட்சியாகும். இதனை நேரிற்கண்டு களிக்க

வேண்டுமேயன்றிச் சொற்களால் இதன் எழிலினை வருணித்-தல் இயலாததொன்ரும். இவ்வருவியானது பேரிரைச்சலோடு விழும்போது இடையிலுள்ள பாறைகளால் தாக்குண்டு பல பக்கங்களிலும் சிதறி எழும் நீர்த்திவலைகள், பனிநீர் தெளிப்பது போலக் காணப்படும். கதிரவன் ஒளி இத்திவலைகளின்மீது விழும்போது இவை பல வகை வண்ணங்களோடு காட்சி அளிக்கும்.

5. அருவி விழும் இடம் பாறைகளாலாய சமதலமாய் உள்ளது. அவ்விடத்தை அடைந்து அருவியில் நீராடுவதற்குப் பல இருப்புக் கம்பிகள் நாட்டப் பெற்றுள்ளன. அக்கம்பி-களைப் பற்றிக்கொண்டு எவ்வித அச்சமுமின்றி அருவியில் நீராடலாம். ஆனல், நீராடுவதற்கு முன், மக்கள் தலைக்கும் உடம்புக்கும் எண்ணெய் தேய்த்துக்கொண்டே செல்வார்கள். இந்த எண்ணெய், அருவியின்கீழ் நின்ற சில நிமிஷங்களில் இருந்த இடம் தெரியாது மறைந்துவிடும். ஆதலால், நீண்ட நேரம் நீராட விரும்புபவர் மூன்று நான்கு முறை எண்ணெ-யைத் தேய்த்துக்கொள்வர். இவ்வாறு நாள்தோறும் பன்-முறை அருவியில் நீராடுவதே இங்கு வரும் மக்களின் இனிய பொழுது போக்காகும். இக்குற்ருலத்துக்குச் சாரற்காலத்தில் வந்து தங்கும் மக்கள் உண்பதும் நீராடுவதுமாகவே காலத்-தைக் கழிப்பார்கள்.

6. நாங்கள் சென்றது சாரற்காலமாதலினுலும், எங்கள் விடுதி கோவிலின் அருகிலேயே இருந்தமையாலும் முதல் நாள் முற்பகலில் இரண்டு முறை அருவியில் நீராடினேம். எங்களுட் சிலர் கம்பிகளைப் பற்றிக்கொண்டு செல்லும்போது பெரும்-பயத்தோடு சென்றனர். அவர்களுக்கு ஆசிரியர்களும் மற்ற-வர்களும் உடனிருந்து உதவி புரிந்தார்கள். சிலர் நீர் வீழ்ச்சி-யின் வேகத்தைத் தாங்க முடியாமல், தலையை நீரில் நீட்டுவதும் இழுப்பதுமாய் நின்றதைக் கண்ட மற்றவர், விலாப்புடைக்கச் சிரித்தனர்.

7. பிற்பகலில் நாங்கள் திரிகூட மலையின்மீது ஏறினேம். மலையின்மீது ஏற அருவியின் அருகிலேயே வழியிருக்கின்றது.

அவ்வழியே சென்று, சுமார் நூறடி உயரத்தில் உள்ள பொங்குமாகடல் என்னும் அருவித்துறையை அடைந்தோம். சித்திரா நதி இந்த இடத்தில் விழுந்து பொங்கிப் பிறகுதான் நீர் வீழ்ச்சி ஆகிறது. சித்திரா நதி இங்குப் பொங்கிப் பரந்தெழும் காரணத்தால், இதற்குப் 'பொங்குமா கடல்' என்னும் பெயர் வழங்குவதாயிற்று.

8. பொங்குமா கடலினின்று மேலும் மலைமீது சென்றால், சுமார் ஒன்றரைக் கல் தொலைவில் ஓர் அருவி காணப்படுகிறது. அதற்குச் **சண்பகாதேவி** என்னும் பெயர் வழங்குகிறது. அங்கு ஒரு சிறு ஆலயமிருக்கின்றது. அதற்குச் **சண்பகா தேவி கோவில்** என்பது பெயர். அந்த இடத்தில் எங்குப் பார்த்தாலும் சண்பக மரங்கள் காட்சியளிக்கின்றன. ஆதலால், சண்பகக் காடு என்னும் பொருளுடைய சண்பகாடவி (சண்பக + அடவி) என்னும் தொடரே இக்காலத்தில் சண்பகா தேவி என மருவி வழங்குகின்றதென்பதை எங்களுடன் வந்திருந்த தமிழாசிரியர் விளக்கினர். அவ்விடத்தில் முன்னே கூறப்பட்ட கோவிலைத் தவிர, சிறு குகைகள் பல காட்சியளிக்கின்றன. அவை சித்தர்கள் இருந்த இடங்களெனக் கூறப்படுகின்றன. அவற்றைக் கண்ட போது அவை தமிழ் வளர்த்த தவமுனிவரும் அவருடைய அரிய மாணவர்களும் அக்காலத்தில் தங்கியிருந்த குகைகளாய் இருக்கலாமோ என்னும் ஐயம் எங்களுக்குப் பிறந்தது. ஆசிரியர்களைக் கேட்ட போது 'அப்படியும் இருக்கலாம்,' என்ற விடைதான் கிடைத்தது.

9. சண்பகாதேவி அருவியினின்று மேலும் ஒன்றரைக் கல் தொலைவு நாங்கள் சென்ற போது மலைமீது சொரியும் மற்றோர் அருவியைக் கண்டோம். அதன் நீரொழுக்கு மெல்லியதாய் இருந்தது. அதற்குத் '**தேனருவி**' என்பது பெயர் என்று எங்களுக்கு வழி காட்டியாய் வந்த அவ்வூரார் கூறினர். அந்த அருவியுள்ள இடத்தில் பாறைகளில் பல தேன்கூடுகள் காணப்பட்டன. அக்கூடுகளினின்று தேன் துளிகள் அந்த அருவியில் சொட்டுவதால் அதற்குத் தேன் அருவி என்னும் பெயர் வழங்குகிறது என்று அறிந்தோம். தேனருவியை நாங்கள் அடைந்த

போது மாலை ஐந்து மணி இருக்கலாம். மேலும் சில வழிகள் இங்குமங்கும் செல்லக்கண்ட நாங்கள், தொடர்ந்து மலை உச்சிக்குப் போக விழைந்தோம். ஆனால், எங்களுடன் வந்திருந்தவர், பொழுது போய்விட்டதென்றும், மேலும் செல்வது கூடாதென்றும் கூறி, எங்களை அழைத்துக்கொண்டு திரும்பிவிட்டார். நாங்கள் வெகு வேகமாய் நடந்தும் மலையடிவாரம் அடைவதற்குள் இருள் சூழ்ந்துவிட்டது.

10. குற்றால மலையின் சிறப்பை விவரிப்பது எளிதன்று. இம்மலையின் எம்மருங்கும் ஓங்கி வளர்ந்த மரங்களும், தழைத்துப் படர்ந்த செடிகொடிகளும் காணப்படுகின்றன. பற்பல வகையான மலர்களின் நறுமணம் மனத்தை மகிழ்விக்கிறது. பச்சைப்பசேலென்று காட்சியளிக்கும் தாவரங்களினிடையே வெண்மேகம் சஞ்சரிப்பது வியத்தகு காட்சியாகும். இக்குற்றாலத்தைப்பற்றிய நூல்கள் பல உண்டென்றும் அவற்றுள் குற்றாலத் தலபுராணமும், குற்றாலக் குறவஞ்சியும் மிகச் சிறந்தவை என்றும் கூறி, எங்கள் ஆசிரியர் குறவஞ்சி நூலினின்று சில பாட்டுக்களை எங்களுக்குப் பாடிக் காட்டினார். நாங்கள் அவற்றைக் கேட்டு இன்புற்று இரவைக் கழித்து, மறுநாள் மதுரைக்குப் புறப்பட்டுவிட்டோம். மதுரையிற்கண்டவற்றை மற்றொரு சமயம் விவரிப்பேன்.

பயிற்சி:

I. விடை எழுதுக :—

1. திருக்குற்றாலம் யார் யாரால் புகழ்ந்து பாடப்பட்டது? அங்குள்ள சபையின் பெயர் யாது? அங்குள்ள பெருமானது பெயரும், தேவியரின் பெயரும் என்ன? அத்தலத்தின் விருட்சம் யாது?
2. திரிகூடமலையின் அமைப்பை விவரிக்க.
3. 'பொங்குமா கடல்' என்னும் பெயர்க் காரணம் யாது?
4. 'சண்பகாதேவி' என மருவியது எது என்பதை விளக்குக.
5. "அப்படியும் இருக்கலாம்,"—சந்தர்ப்பம் கூறி விளக்குக.
6. தேனருவி என்னும் பெயர்க் காரணம் யாது?

7. திருக்குற்றாலத்தைப் புகழ்ந்து கூறும் நூல்கள் எவை? அவைகளைப்பற்றிச் சிறு குறிப்பு வரைக.

II. எதிர்ச்சொல் எழுதுக :—

இயலா, வீழ்ச்சி, உதவி, வேகம், இன்புற்று, வெண்மேகம், நறு-மணம்.

III. வாக்கியத்தில் அமைத்தெழுதுக :—

அவ்வழியே, இருக்கலாமோ, விழைந்து, சஞ்சரித்து, நறுமணம், கண் கொள்ளாக் காட்சி

IV. அகராதி பார்த்துப் பொருள் எழுதுக :—

எழில், வருணித்தல், எட்டுணை, திவலைகள், அருவி, கதிரவன், ஒளி, சாரற்காலம், அடவி, விழைந்து, நறுமணம்

V. சொல்லியுள்ளபடி செய்க :—

1. அருவியானது பேரிரைச்சலோடு விழும்போது இடையிலுள்ள பாறைகளால் தாக்குண்டு பல பக்கங்களிலும் சிதறி எழும் நீர்த்திவலை-கள், பனிநீர் தெளிப்பது போலக் காணப்படும்—மூன்று சிறு வாக்கி-யங்களாக்குக.

2. சண்பகாடவி என்னும் பெயரே இக்காலத்தில் சண்பகாதேவி என மருவி வழங்குகின்றதென்பதை எங்களுடன் வந்திருந்த தமிழா-சிரியர் விளக்கினர்—அயற்கூற்றை நேர்க்கூற்றாக்குக.

19. சாதுரியப் பேச்சு

1. இன்பத்தை விரும்புவதும், துன்பத்தை வெறுப்பதும் எல்லா உயிர்கட்கும் இயல்பு. ஆதலாற்றான் மாந்தர் எப்போதும் இன்பத்திற்றிளைத்திருக்க விரும்புகின்றனர். மனத்தில் இன்ப உணர்ச்சி உண்டாகும்போது சிரிப்பு வெளிப்படுகின்றது; அவல உணர்ச்சியின் பயனாக அழுகை தோன்றுகின்றது. சிரிப்பு, அழுகை இரண்டனுள் முன்னது உடலுக்கு உரத்தையும், பின்னது பலவீனத்தையும் உண்டுபண்ணுகின்றன. ஆதலால், மக்கள் வாழ்க்கையில் சிரிப்புக்கு முக்கிய இடம் உண்டு.

2. இக்கொள்கை பற்றியே முற்கால மன்னர்களின் அவைகளில் நகைச்சுவை தோன்றுமாறு பேசுந்திறமை வாய்ந்த விதூஷகர்கள் இருந்து வந்தார்கள். அரசர்களின் மனச்சோர்வை அகற்றி அவர்கட்குச் சிரிப்பைத் தோற்றுவிப்பதே அவ்விதூஷகர்களின் கடமை. இத்தொழில் எளிதன்று; இதற்குச் சிறந்த கல்வியும் ஆழ்ந்த அறிவும் அவசியம். எவர் மனத்தையும் புண்படுத்தாமல் தாம் பேசும் சொற்களால் கேட்பார் மகிழ்வுற்றுச் சிரிக்கும்படி செய்வது எல்லார்க்கும் எளிதன்று. இதற்குத் தனிப்பண்பு வேண்டும். இத்தகைய பண்பு நம் தமிழ் நாட்டு அறிஞர்களிடையே பேரளவில் இருந்ததென்பதைப் பல செய்திகளால் அறிகிறோம். அவற்றுள் சில ஈண்டுத் தரப்படுகின்றன:

3. தொண்டை நாட்டுப் புலவர்களுள் அந்தகக் கவி வீரராகவ முதலியார் என்பவரைப்பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். அவர் ஒரு சமயம் சந்திரவாணன் என்ற புலவர்மீது ஒரு கோவை நூலைப்பாடி அரங்கேற்றினார். அவ்வரங்கேற்றத்திற்குப் புலவர் பெருமக்களுள் பலர் வந்திருந்தனர். புலவர் தாம் இயற்றிய நூலின் ஒவ்வொரு செய்யுளையும் தமது மாணவரைப் படிக்கச்செய்து, அதன் பொருள் நயங்களை எடுத்துக் கூறி வந்தார். ஒரு செய்யுளில் ஒரு பெண்ணின் வருணனையைக் கூறும் போது, "முப்பழச் சேற்றின் அமுத வயல் மேலே

முளைத்த கரும்போ" என்று கூறப்பட்ட சொற்களைக் கேட்டுச் சபையிலிருந்த அம்மைச்சி என்ற பெண்பாற்புலவர், "கவிராயருக்குக் கண்தான் கெட்டது; மதியும் கெட்டதோ?" என்று கூறினர். அது கேட்ட புலவர், அவ்வம்மையார் தமது செய்யுளிற்கண்ட குற்றம் இன்னதென்பதை உணர்ந்து, மாணவரைப் பார்த்து, "ஐய, சேற்றில் உள்ள கொம்பை வெட்டிக் காலை நடு," என்று கூறினர். கூறிய அறிவு படைத்த அம்மாணவரும் ஆசிரியரின் கூற்றின் பொருளை எளிதில் உணர்ந்து, 'சேற்றில்' என்ற சொல்லைச் 'சாற்றில்' என்று மாற்றிப் படித்தார். அது கண்ட சபையினர் அனைவரும் புலவர் கூறிய சாதுரியமான சொற்களையும், அவற்றின பொருளை அறிந்து ஆசிரியரின் பெருமையை வெளிப்படுத்திய மாணக்கரின் திறமையையும் புகழ்ந்து போற்றினர்.

4. எட்டையபுரத்து அவைப் புலவராய் விளங்கிய கடிகைமுத்துப் புலவர் என்பவர் நோய்வாய்ப்பட்டிருந்தார். அத்தருணத்தில் அவர் மகள் அழுக்குத் துணியில் வடிகட்டிய பாலை அவர் வாயில் ஊற்றினள். பால் அழுக்கு நாற்றம் வீசியபடியால், புலவர் பாலைக் கீழே துப்பினர். அது கண்ட மகள், "அப்பா, பால் கசக்கிறதோ?" என்று கேட்டாள். உடனே புலவர், "பாலும் கசக்கவில்லை, கந்தையும் கசக்க வில்லை," என்று பதில் இறுத்தாராம். அது கேட்ட மகள் நாணுற்றுள்; அங்குக் குழுமியிருந்த புலவர்கள், கடிகை முத்துப் புலவரின் உடல் நலியுற்ற போதும், அறிவு நலியாமல், நகைச்சுவை ததும்ப அவர் கூறிய சொற்களைக் கேட்டு அகமகிழ்ந்தார்கள்.

5. கம்பர் தாம் இயற்றிய இராமாயணத்தை அரசவைகளிலும், புலவர் சபைகளிலும் பிரசங்கம் செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். ஒரு சபையில் ஜனக மன்னரிடம் இருந்த சிவபெருமானது வில்லைப்பற்றிய செய்திகளைக் கூறும் செய்யுட்களைப் புகன்று பொருள் உரைத்தார். அப்போது ஒரு செய்யுளில் அவ்வில்லை வீரர் அறுபதினயிரவர் இழுத்துவந்து ஜனகர் சபையில சேர்த்தனர் என்ற செய்தி குறிப்பிடப்பட்-

டிருந்தது. கம்பர் அச்செய்யுளைக் கூறியவுடனே, சபையி-லிருந்த ஒரு புலவர் எழுந்து, "புலவர் பெருமானே, சிவபெரு-மான் வில்லை வீரர் ஐயாயிரவர் இழுத்து வந்தனர் என்பது வான்மீகியார் கூற்றாயிருக்கத் தாங்கள் அறுபதினாயிரவர் என்று கூறுவது முரணன்றோ?" என்ற ஒரு வினாவை எழுப்-பினர். உடனே கம்பர் ஒரு சிறிதும் தயங்காமல், "அன்பரே, யானும் அதைத்தானே கூறியுள்ளேன்? 'அறு பதினாயிரம்' என்னும் தொடரை அறுக்கப்பட்ட பதினாயிரம், அதாவது பாதியாக்கப்பட்ட பதினாயிரம் என்று பொருள் கொள்ளின், வீரர் தொகை ஐயாயிரந்தானே ஆகும்? எனது கூற்று முரணாவதெங்ஙனம்?" என்று சாதுரியமாகப் பதிலிறுத்தார். அது கேட்ட புலவர் அனைவரும் கம்பருக்குப் புகழ் மாலை சூட்டினர்.

6. சிவகங்கை என்பது இராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள ஒரு பெரிய ஜமீன். அதன் ஜமீந்தாரை 'அரசர்' என்று வழங்குவது அக்கால வழக்கம். பத்தொன்பதாம் நூற்றாண்-டின் இறுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தி-லும் சிவகங்கையை ஆட்சிபுரிந்து வந்தவர் சிறந்த தமிழறிஞர். ஆதலால், அவர் அடிக்கடி தமிழ்ப்புலவர்களைத் தமது சபையிற் கூட்டி, அவர்களோடு அளவளாவித் தமிழின்பம் நுகர்ந்து மகிழ்வெய்துவார். வேல் கவிராயர் என்பவர் அவரது அவைப் புலவராய் இருந்தவர் ஆதலால், அவர் மட்டும் எப்போதும் அரசருடனிருப்பார். அக்காலத்தில் அந்தப் பக்கத்தில் வேறு பல சிறந்த புலவரும் இருந்தனர். அவர்களுள் ஒருவர் புலிக் குட்டிக் கவிராயர் என்பவர். அவர் ஒரு நாள் சிவகங்கை அரச-ரைக் காணச் சென்றார். அவர் அரசரை நன்கு அறிந்தவர். அரசரும் அவரை நன்கு அறிந்தவர். ஆதலால், கவிராயர் காவலனை நோக்கி, 'புலிக்குட்டி வந்திருக்கிறது என்று அரச-ருக்கு அறிவி,' என்றார். காவலன் அங்ஙனமே அரசர்க்கு அறி-வித்தான். அது கேட்ட அரசர், வந்திருப்பவர் புலிக் குட்டிக் கவிராயர் என்பதை அறிந்தார்; கவிராயருடைய சாதுரிய மொழிகளுக்குத் தாமும் சாதுரியமாகப் பதில் சொல்லியனுப்ப விழைந்தார்; "இங்கு வேல் இருக்கிறது. அச்சமின்றேல்,

புலிக்குட்டி வரலாம்,'' என்ற பதிலைக் காவலன் மூலம் தெரிவித்தார். அது கேட்ட கவிராயர், அரசருடைய சமயோசிதமான பதிலைக் கேட்டுச் சிரித்துக்கொண்டே சபையை அடைந்தார். அங்கிருந்த அனைவரும் சிரித்துக்கொண்டே அவரை வரவேற்றனர்.

7. இராமநாதபுரம் ஜில்லாவில் சங்கரன் பிள்ளை என்ற புலவர் ஒருவர் இருந்தார். ஒரு நாள் அவரைக் காண அவர் நண்பர் ஒருவர் வந்தார். அத்தருணத்தில் சங்கரன் பிள்ளை ஏதோ சிற்றுண்டி செய்வதற்காக ஒரு சட்டியிற் சிறிது மாவை இட்டு வறுத்துக்கொண்டிருந்தார். அது கண்ட புலவர், "என்ன, சங்கரன் பிள்ளை, சட்டியிலே மாவறுக்கும் தொழிலை மேற்கொண்டுவிட்டீர்?'' என்று குறும்பாகக் கேட்டார். அது கேட்ட சங்கரன் பிள்ளை, "சட்டியிலே மாவறுக்கும் தொழில் சங்கரன் பிள்ளைக்கன்றி வேறு யார்க்கு உரியது?'' என்று சாதுரியமாக விடை பகர்ந்தார். 'சஷ்டித் திதியில் மாமர வடிவத்தில் நின்ற சூரபன்மனை அறுத்துத் தள்ளிய போர்த்தொழில் சங்கரனாகிய சிவபெருமானின் புதல்வரான முருகப்பெருமானுக்கே உரியது' என்னும் பொருள்படப் புலவர் கூறிய பதில் சிந்தித்து மகிழ்வதற்குரியதன்றோ! இங்ஙனம் தமிழறிஞர் பொருட்செறிவும் நகைச்சுவையும் தோன்ற அவ்வப்போது கூறிய சாதுரிய மொழிகள் எண்ணில. அவை அனைத்தையும் திரட்டி நூலாக்கிப் பொன்னே போலப் போற்றுவது தமிழ் மக்கள் கடமையாகும்.

பயிற்சி :

I. விடை எழுதுக :—

1. வாழ்க்கையில் சிரிப்புக்கு முக்கிய இடம் உண்டு என்பது எங்ஙனம் பொருந்தும்?
2. விதூஷகர் என்பவர்களைப்பற்றி உனக்கு என்ன தெரியும்?
3. "கொம்பை வெட்டிக் காலை நடு," என்பதை விளக்குக.
4. கடிகை முத்துப் புலவரின் கூற்றுக்களை எழுதிப் பொருள் தருக.
5. 'அறுபதினாயிரம்' என்னும் தொடருக்குக் கம்பர் கூறிய பொருள் யாது?

6. "இங்கு வேல் இருக்கிறது. அச்சமின்றேல், புலிக்குட்டி வரலாம்," என்பதற்குரிய இரண்டு பொருள்கள் யாவை?

7. 'சட்டியிலே மாவறுத்தல் சங்கரன் பிள்ளைக்குரியது,' என்னும் வாக்கியத்திற்குக் கூறத்தக்க இரண்டு பொருள்களை எழுதுக.

II. எதிர்ச்சொற்கள் எழுதுக :—

விருப்பம், உரம், சோர்வு, எளிது, ஈண்டு, கூரிய, முரண், சிற்றுண்டி, விடை

III. வாக்கியங்களில் அமைக்க :—

இயல்பு, நகைச்சுவை, புண்படுத்தாமல், மகிழ்வுற்று, பண்பு, பொருள் நயம், கூறிய, கூரிய, கூற்று, சாதுரியம், நோய்வாய்ப்பட்டு, முரண், புகழ் மாலை

IV. அகராதி பார்த்துப் பொருள் எழுதுக :—

அவலம், உரம், விதூஷகன், பண்பு, கோவை, அரங்கேற்றினர், வருணனை, கூற்று, சாதுரியம், ததும்ப, பிரசங்கம், தயக்கம், பதிலிறுத்தார், சமயோசிதம்;

20. திரைப் படம்

1. பிள்ளைகளே, உங்களுள் பலர் அடிக்கடி திரைப் படக் காட்சிக்குச் சென்று இன்பத்தில் திளைக்கின்றீர் ; அன்றியும், உங்கள் பள்ளியிலும் படக் காட்சிகளைக் கண்ணுற்றுக் களிக்கின்றீர்கள். ஆனால், உயிரற்ற உருவங்கள் உயிருள்ளவை போலப் பேசுவதும், பாடுவதும், நடிப்பதும் எங்ஙனம் நடைபெறுகின்றன என்பதைப்பற்றி உங்களுள் ஒருவரேனும் சிந்தித்ததுண்டா? 'இல்லை,' என்று திட்டமாகக் கூறிவிடலாம். இங்கு அவை உங்களறிவுக்குரிய அளவில் விவரிக்கப்படும் :

2. நீங்கள் சினிமாவில் பயன்படுத்தும் 'பில்ம்' சுருள்களைப் பார்த்திருப்பீர்கள் ; அவற்றின் சிறு துண்டுகளைக் கொண்டு விளையாடியுமிருப்பீர்கள். பில்ம் சுருளில் ஓர் அடி நீளத்தில் பதினறு படங்கள் இருப்பதைக் காணலாம். புகைப் படம் எவ்வாறு எடுக்கப்படுகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். புகைப் படம் எடுக்க முற்காலத்தில் 'எமல்ஷன்' என்னும் மருந்து தடவப்பட்ட கண்ணுடி உபயோகிக்கப்பட்டது. அக் கண்ணுடிக்கு ஆங்கிலத்தில் 'நெகட்டிவ்' என்பது பெயர். நெகட்டிவால் தனித்தனியே படம் எடுக்க முடியுமேயன்றித் தொடர்ச்சியாக எடுக்க முடியாது. ஈஸ்ட்மன் கோடக் என்பவர், தமது அரிய ஆராய்ச்சியாலும் விடா முயற்சியாலும் 'ரோல் பில்ம்' எனப்படும் சுருள் பில்மைக் கண்டு பிடித்தார். இதைக்கொண்டு தொடர்ச்சியாகப் பல படங்களை மிக விரைவில் எடுக்கலாம். இச்சுருள் பில்ம் ஆயிரமடி நீளங்கூட இருக்கும். ஆனால், முன்னமே கூறப்பட்டபடி இச்சுருள் பில்மில் ஓர் அடி நீளத்தில் முக்கால் அங்குல உயரமுள்ள படங்கள் பதிவு செய்யத்தக்க சாதனங்கள் பதினறு இருக்கும்.

3. இத்தகைய பில்ம் சுருளைச் சினிமாப் படம் பிடிக்கும் கருவியாகிய 'சினி - காமிரா'வில் இட்டு, இயந்திரத்தின் உதவியால் பில்ம் சுருளை இயக்கிப் படம் பிடிக்கும் போது, அச்சுருளில் உள்ள பகுதி ஒவ்வொன்றின்மீதும் ஒரு வினடியில் இருபத்து நான்கில் ஒரு கூறு ($\frac{1}{24}$ வினடி) நேரத்தில் படம்

பதிவாகிறது ; அதாவது, ஒரு வினடியில் ஒன்றரையடி நீளமுள்ள பில்மில் படம் பதிவாகிறது. எனவே, ஒரு வினடியில் இருபத்து நான்கு படங்கள் பதிவாகின்றன. இக்கணக்கின்படி ஒரு நிமிஷத்தில் தொண்ணூறடி நீளமுள்ள பில்மில் படப்பதிவுகள் ஏற்படும்.

4. இவ்வாறு பதிவு செய்யப்பட்ட பில்ம் சுருள் திரைப் படக் கொட்டகையிலுள்ள இயந்திரத்திலிட்டு, படம் எடுக்கப்பட்ட அதே வேகத்தில் இயக்கப்படுகிறது. அதாவது, நிமிஷத்திற்குத் தொண்ணூறடி வேகத்தில் பில்ம் நகர்கிறது. ஆகவே, ஒரு படம் திரையின்மீது தோன்றி மறைவதற்கும், அடுத்த படம் வந்து தோன்றுவதற்கும் இடைப்பட்ட நேரம் மிக மிக நுண்ணிதாதலின், திரையின்மீது விழும் உருவங்கள் இடையீடின்றிச் செயலாற்றுவதுபோல நமக்குத் தெரிகிறது. இதனை ஓர் எடுத்துக்காட்டால் நன்கு அறியக் கூடும். மின்சார விசிறியில் மூன்று அல்லது நான்கு இலைகள் அமைந்திருப்பதை நாம் அறிவோம். ஆனல், அவ்விசிறி வேகமாய் இயங்கும்போது அதன் இலைகள் நம் கண்ணுக்குத் தனித்தனி தெரியாமல், விசிறி இடைவெளியின்றி ஒரே வட்டம் போலத் தெரிகிறது. இங்ஙனமே பல படங்களைப் பெற்றுள்ள பில்ம் வேகமாக நகரும் போது இடை வெளியின்றிப் படங்கள் பலவும் ஒரே படம் போலக் காணப்படும். இது நமது கண் மயக்கேயன்றி வேறன்று.

5. இனித் திரையின்மீது படம் எங்ஙனம் விழுகிறது என்பதைச் சற்றுக் கவனிப்போம் : சினிமாக் கொட்டகையில் ஒரு கோடியில் திரை அரங்கும், மற்ருெரு கோடியில் இயந்திர அறையும் இருப்பதை நீங்கள் அறிவீர்கள். இயந்திர அறையில் 'ப்ரொஜக்டர்' என்னும் இயந்திரம் அமைக்கப்பட்டிருக்கும். இந்த இயந்திரம் உங்கள் பள்ளிகளில் படக்காட்சி காட்டுவதற்கு உபயோகிக்கப்படும் இயந்திரம் போன்றதே. இதில் பேரொளி பரப்பும் சாதனம் ஒன்று அமைக்கப்பெற்றிருக்கும். அவ்வொளி ஒரு கண்ணுடியின் மூலம் நேர் எதிரில் உள்ள வெண்மையான திரையின்மீது விழும்படி செய்யப்படுகிறது. இந்த ஒளிக்கும் திரைக்கும் இடையில் 'பில்ம்'

செலுத்தப்படுகிறது. அப்போது பில்மில் உள்ள படத்தின் சாயை திரையின்மீது விழுகிறது. முன் கூறியவாறு பில்ம் சுருள் மிக விரைவாக இயங்குவதால், படங்களில் உள்ள உருவங்கள் செயலாற்றுவது போன்ற தோற்றம் உண்டா-கின்றது.

6. தனித்தனி படங்கள் மிக விரைவாக இயக்கப்பட்டுச் செயலாற்றுவதுபோலத் தோற்றமளிக்கச் செய்யும் விவரத்தை அறிந்தோம். இனி, திரையின்மீது விழும் சாயைகள் பேசு-வதும், பாடுவதும் எங்ஙனம் நிகழ்கின்றன என்பதைக் கவனிப்-போம்: ஒருவருடைய குரல் ஒலி, பதிவு செய்யப்பட்டுக் 'கிராமபோன்' என்னும் இயந்திர சாதனத்தின் மூலம் வெளி-யிடப்படுவதை நாம் அறிவோம். அங்ஙனமே, திரைப்படக் கதையில் நடிப்பவர்களின் பாட்டையும் பேச்சையும் ஒலிப்-பதிவு செய்து பில்மில் ஏற்றவாறு இணைப்பர். பேசும் படத்-தின் பில்மை நீங்கள் பார்த்தால், அதன் ஓரத்தில் கோடு இருப்பதை அறியலாம். அக்கோடுதான் பில்மின் ஒலிப்பதிவு. படம் இயங்கும்போது இப்பதிவு இடத்திற்கேற்ற ஒலியை வெளியிடும். 'கிராமபோன்' இயந்திரத்தில் உள்ள ஒலிப் பெட்டி இசைத்தட்டின் கோடுகளாய் அமைந்துள்ள ஒலிப்-பதிவை வெளியிடுவதை நாம் அறிவோம். அவ்வாறே பில்மில் உள்ள ஒலிப்பதிவை ஓர் இயந்திரம் ஒலியாக வெளியிடுகிறது. அவ்வொலியே அதன் பதிவுக்கேற்றவாறு பாட்டாகவும் பேச்-சாகவும் கேட்கப்படுகிறது.

7. இதில் உங்களுக்குச் சில ஐயங்கள் எழலாம். அவற்-றுள் தலையாயது, படப் பிடிப்பும், ஒலிப்பதிவும் திரையில் தோன்றுவது போல ஒரே காலத்தில் நடைபெறுகின்றனவா என்பதாம். படப் பிடிப்புத் தனியாகவும், ஒலிப்பதிவு தனி-யாகவும் நடைபெறும் என்பதே இந்த ஐய வினவுக்கு விடை-யாகும்.

8. படம் பிடிக்கும் இடத்திற்கு ஆங்கிலத்தில் 'ஸ்டுடியோ' என்பது பெயர். அங்கு வீடுகளும் காடுகளும், சோலைகளும் சாலைகளும், மடுக்களும் மலைகளும் அமைப்பதற்குரிய சாதனங்-

கள் உண்டு. படத்திற்குரிய காட்சிகளை ஓவியர் இயற்கையோடியையுமாறு அமைப்பார். படம் பிடிப்பவர், படம் பிடிப்பதற்கு வேண்டிய ஒளிச்சாதனங்களை அமைப்பார். நடிகர்கள் உரிய வேடங்களைத் தரித்துக்கொண்டு தயாராய் நிற்பார்கள். எல்லாம் ஒழுங்குபட அமைந்துள்ளனவா என்பதைப் படம் தயாரிக்கும் பொறுப்புள்ள 'டைரெக்டர்' தணிக்கை செய்த பிறகு படம் பிடிக்கப்படும். ஒரு கதைக்குரிய எல்லாக் காட்சிகளையும் 'ஸ்டுடியோ'வினுள்ளேயே படம் எடுப்பது இயலாது. ஆதலால், சில சமயங்களில் பெரிய மலைகள், ஏரிகள், ஆறுகள், காடுகள் முதலியன உள்ள இடங்கட்குச் சென்று படம் பிடிப்பதும் உண்டு.

9. ஸ்டுடியோவில் ஒலிப்பதிவு செய்யும் இடம் தனியே அமைக்கப்பட்டிருக்கும். இவ்வறை, வெளியிலிருந்து எவ்வித ஒலியும் உட்புகாதபடி அமைக்கப்பெற்றிருக்கும். இங்கேதான் நடிகர்களின் பேச்சு, பாட்டுக்களின் ஒலி பதிவுசெய்யப்பட்டு, படம் பிடிக்கப்படும்போது அவ்வொலிப்பதிவு, இயந்திரத்தின் மூலமாக ஒலிககிறது. நடிகர்கள் நடிக்கும்பொழுது அவர்கள் பேசவோ பாடவோ வேண்டா; இடத்திற்குத் தக்கபடி இயந்திரத்தினின்று வெளிப்படும் ஒலிக்கேற்றவாறு வாயசைத்தல் மட்டும் போதும். ஒலிக்கேற்றபடி பேசுவதாலும் பாடுவதாலும் தவறொன்றும் ஏற்பட்டுவிடாது.

10. பிள்ளைகளே, மௌனத் திரைப் படம், பேசும்படங்களைப்பற்றி நீங்கள் அறிந்துகொள்ள வேண்டிய முக்கிய விஷயங்கள் மட்டும் கூறப்பட்டன. மேல் வகுப்புக்களில் அறிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள் எத்தனையோ உண்டு. அவற்றையும் நீங்கள் அறிந்துகொள்ள முயல வேண்டும்.

பயிற்சி :

I. விடை எழுதுக :—

1. *திரையின்மீது விழும் சாயைகள் செயலாற்றுவன போலத் தோன்றக் காரணம் என்ன ?*
2. *திரையின்மீது விழும் உருவங்கள் பேசுவதும் பாடுவதும் எங்ஙனம நிகழ்கின்றன ?*

3. 'ஸ்டுடியோ' என்பது என்ன? அங்கு என்னென்ன அமைப்புக்கள் காணப்படும்?

4. குறிப்பெழுதுக :—பிலிம் சுருள், ப்ரொஜக்டர்

II. எதிர்ச்சொற்கள் எழுதுக :—

அடிக்கடி, இன்பம், களிப்பு, உயிரற்ற, தொடர்ச்சி, விரைவு, நுண்ணிது, பேரொளி, வினை

III. வாக்கியங்களில் அமைக்க :—

கண்ணுற்று, புகைப் படம், தனித்தனி, நுண்ணிது, இயங்குதல், பேரொளி, வேடந்தரித்து

IV. அகராதி பார்த்துப் பொருள் எழுதுக :—

திளைத்தல், சாதனங்கள், நுண்ணிது, எடுத்துக்காட்டு, அரங்கு, சாயை, செயலாற்றுதல், ஐயம்

செய்யுட்பகுதி

I. கடவுள் வணக்கம்

அருள்பழுத்த பழச்சுவையே! கரும்பே! தேனே!
ஆரமிர்தே! என்கண்ணே! அரிய வான
பொருளனைத்தும் தரும்பொருளே! கருணை நீங்காப்
பூரணமாய் நின்றவொன்றே! புனித வாழ்வே!
கருதரிய கருத்ததனுட் கருத்தாய் மேவிக்
காலமுந்தே சமும்வகுத்துக் கருவி யாதி
விரிவினையுங் கூட்டிஉயிர்த் திரளை யாட்டும்
விழுப்பொருளே! யான்சொலும்விண் ணப்பம்
[கேளே. 1

சிதம்பர ரகசியம்] *[தாயுமான சுவாமிகள்*

யாவையும் எவருந் தானாய்
அவரவர் சமயந் தோறும்
தோய்விலன் புலனைந் துக்கும்
சொலப்படான் உணர்வின் மூர்த்தி
ஆவிசேர் உயிரின் உள்ளால்
யாதுமோர் பற்றி லாத
பாவனை யதனைக் கூடில்
அவனையுங் கூட.லாமே. 2

திவ்வியப்பிரபந்தம்] *[நம்மாழ்வார்*

'வெள்ளந்தாழ் விரிசடையாய்! விடையாய்! விண்ணோர்
பெருமானே!' எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தா ழுறுபுனலிற் கீழ்மே லாகப்
பதைத்துருகு மவர்கிற்க என்னை யாண்டாய்க்(கு)

உள்ளந்தா ணின்றுச்சி யளவு நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாங் கண்ணா யண்ணா!
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சங் கல்லாம்
கண்ணிணையு மரமாந்தீ வினையி னேற்கே! 3

திருவாசகம்] [மாணிக்கவாசகர்

உலகமெலாந் தனிநிறைந்த உண்மை யாகி,
யோகியர்தம் அனுபவத்தி னுவப்பா யென்றும்
கலகமுறா உபசாந்த நிலைய தாகி,
களங்கமற்ற அருண்ஞானக் காட்சி யாகி,
விலகலுறா நிபிடஆ னந்த மாகி,
மீதானத் தொளிர்கின்ற விளக்க மாகி,
இலகுபரா பரமாய்ச்சிற் பரமா யன்பர்
இதயமலர் மீதிருந்த இன்பத் தேவே! 4

திருவருட்பா] [இராமலிங்க அடிகள்

மண்புனல்தீ வளிவெளியாய் மன்னிநிற்குந் தெய்வம்,
மதிகதிராய் மன்னுயிராய் மகிழ்விக்குந் தெய்வம்,
கண்முதலாம் உறுப்புயிர்க்குக் கதிக்கின்ற தெய்வம்,
கருத்தினிலே கோயில்கொண்டு காக்கின்ற தெய்வம்,
எண்ணெழுத்தால் ஏழிசையால் இசைப்பயனுந் தெய்வம்,
எம்மறையுங் குருவழியே இயம்புகின்ற தெய்வம்,
உண்மையறி வானந்த உருவான தெய்வம்,
ஒருநெறியாம் பொதுமையிலே ஓங்குதெய்வம் ஒன்றே.

—திரு. வி. கலியாணசுந்தரனார்

II. நீதிப் பகுதி

1. நாலடியார்

துகள்தீர் பெருஞ்செல்வம் தோன்றியக்கால் தொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க;
அகடுற யார்மாட்டும் நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும். 1

உபகாரம் செய்ததனை ஓராதே தங்கண்
அபகாரம் ஆற்றச் செயினும்—உபகாரம்
தாம்செய்வ தல்லால் தவற்றினல் தீங்கூக்கல்
வான்தோய் குடிப்பிறந்தார்க் கில். 2

'புன்னுனிமேல் நீர்போன்ம் நிலையாமை,' என்றெண்ணி
இன்னினியே செய்க அறவினை ;—இன்னினியே
நின்ருன் இருந்தான் கிடந்தான்தன் கேள்அலறச்
சென்ருன் எனப்படுத லான். 3

குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்ச ளழகும் அழகல்ல ;—நெஞ்சத்து
'நல்லம்யாம்,' என்னும் நடுவு நிலைமையால்
கல்வி யழகே அழகு. 4

கல்வி கரையில ; கற்பவர் நாள்சில ;
மெல்ல நினைக்கின் பிணிபல ;—தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து. 5

கல்லாரே யாயினும் கற்ருரைச் சேர்ந்தொழுகின்
நல்லறிவு நாளும் தலைப்படுவர்—தொல்சிறப்பின்
ஒண்ணிறப் பாதிரிப்பூச் சேர்தலாற் புத்தோடு
தண்ணீர்க்குத் தான்பயந் தாங்கு. 6

பாலோ டளாயநீர் பாலாகு மல்லது
நீராய் நிறந்தெரிந்து தோன்ருதாம் ;—தேரின்
சிறியார் சிறுமையும் தோன்ருதாம் நல்ல
பெரியார் பெருமையைச் சார்ந்து. 7

மல்லன்மா ஞாலத்து வாழ்பவ ருள்ளெல்லாஞ்
செல்வ ரெனினும் கொடாதவர்—நல்கூர்ந்தார் ;
நல்கூர்ந்தக் கண்ணும் பெருமுத் தரையரே
செல்வரைச் சென்றிரவா தார். 8

—சமண முனிவர்கள்

2. நன்னெறி

என்றும் முகமன் இயம்பா தவர்கண்ணும்
சென்று பொருள்கொடுப்பர் தீ(து)அற்றோர் ;—துன்றுசுவை
பூவிற் பொலிகுழலாய் ! பூங்கை புகழவோ
நாவிற்(கு) உதவும் நயந்து ? 1

மாசற்ற நெஞ்சுடையார் வன்சொலினி(து) ; ஏனையவர்
பேசுற்ற இன்சொல் பிறி(து)என்க ;—ஈசற்கு
நல்லோன் எறிசிலையோ, நன்னுதால் ! ஒண்கருப்பு
வில்லோன் மலரோ விருப்பு ? 2

பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு
பிறர்க்குதவி யாக்குபவர் பேறும் ;—பிறர்க்குதவி
செய்யாக் கருங்கடல்நீர் சென்று புயல்முகந்து
பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு. 3

உள்ளம் கவர்ந்(து)எழுந்(து) ஓங்கு சினங்காத்துக்
கொள்ளும் குணமே குணமென்க ;—வெள்ளம்
தடுத்தல் அரிதோ, தடங்கரைதான் பேர்த்து
விடுத்தல் அரிதோ ? விளம்பு. 4

'எந்தைநல் கூர்ந்தான் இரப்பார்க்கீந்(து),' என்றவன்
மைந்தர்தம் ஈகை மறுப்பரோ ?—பைந்தொடீஇ !
நின்று பயனுதவி நில்லா அரம்பையின்கீழ்க்
கன்றும் உதவுங் கனி. 5

இன்சொலால் அன்றி, இருநீர் வியனுலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே ;—பொன்செய்(து)
அதிர்வளையாய் ! பொங்கா(து) அழற்கதிரால் தண்ணென்
கதிர்வரவால் பொங்குங் கடல். 6

கைம்மாறு உகவாமல் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மால் இயலுதவி தாம்செய்வர் ;—அம்மா !
முளைக்கும் எயிறு, முதிர்சுவைநா விற்கு
விளைக்கும் வலியனதாம் மென்று. 7

கல்லா அறி(வு)இல் கயவர்பால் கற்றுணர்ந்த
நல்லார் தமதுகனம் நண்ணுரே ;—வில்லார்
கணையிற் பொலியுங் கருங்கண்ணாய் ! நொய்தாம்
புணையிற் புகுமொண் பொருள். 8

—சிவப்பிரகாச சுவாமிகள்

3. ஏலாதி

கொலைபுரியான் கொல்லான் புலான்மயங்கான் கூர்த்த
அலைபுரியான் வஞ்சியான் யாதும்—நிலைதிரியான்
மண்ணவர்க்கு மன்றி மதுமலிபூங் கோதாய்!
விண்ணவர்க்கு மேலாய் விடும். 1

உடன்படான் கொல்லா னுடன்றூர்நோய் தீர்த்து
மடம்படான் மாண்டார்நூன் மாண்ட—இடம்பட
நோக்கும்வாய் நோக்கி நுழைவானேல் மற்றவனை
யாக்குமவா யாக்கு மணைந்து. 2

கற்றாரைக் கற்ற துணரா ரெனமதியார்
உற்றாரை யன்னண மோராமல்—அற்றார்கட்
குண்டி யுறையு ளுடுக்கை யிவையீந்தார்
பண்டிதராய் வாழ்வார் பயின்று. 3

கொலைக்களம் வார்குத்துச் சூதாடு மெல்லை
அலைக்களம் போர்யானை யாக்கும்—நிலைக்களம்
முச்சா ரிகையொதுங்கு மோரிடத்து மின்னவை
நச்சாமை நோக்காமை நன்று. 4

பொய்யுரையான் வையான் புறங்கூறான் யாவரையும்
மெய்யுரையா னுள்ளனவும் விட்டுரையான்—எய்யுரையான்
கூந்தல்மயி லன்னாய்! குழீஇயவான் விண்ணோர்க்கு
வேந்தனா மிவ்வுலகம் விட்டு. 5

பெரியார்சொற் பேணிப் பிறழாது நின்று
பரியா வடியார்ப் பறியான்—கரியார்சொல்
தேறா னியையான் தெளிந்தடிசி லீத்துண்பான்
மாறான்மண் ணாளுமா மற்று. 6

—கணிமேதையார்

4. நீதி நெறி விளக்கம்

நீரிற் குமிழி இளமை; நிறைசெல்வம்
நீரிற் சுருட்டும் நெடுந்திரைகள் ;—நீரில்
எழுத்தாகும் யாக்கை ; நமரங்காள்! என்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று ? 1

அறம்பொருள் இன்பமும் வீடும் பயக்கும் ;
புறங்கடை நல்லிசையும் நாட்டும் ;—உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்கும்; கல்வியின் ஊங்கில்லைச்
சிற்றுயிர்க் குற்ற துணை. 2

முற்றும் உணர்ந்தவர் இல்லை; 'முழுவதூஉம்
கற்றனம்!' என்று களியற்க ;—சிற்றுளியால்
கல்லும் தகரும்; தகரா கனங்குழாய்!
கொல்லுலைக் கூடத்தி னல். 3

குலமகட்குத் தெய்வம் கொழுநனே ; மன்ற
புதல்வர்க்குத் தந்தையும் தாயும் ;—அறவோர்க்
கடிகளே தெய்வம் ; அனைவோர்க்கும் தெய்வம்
இலைமுகப் பைம்பூண் இறை. 4

காலம் அறிந்தாங் கிடமறிந்து செய்வினையின்
மூலம் அறிந்து விளைவறிந்து—மேலுந்தாம்
சூழ்வன சூழ்ந்து துணைமை வலிதெரிந்
தாள்வினை ஆளப் படும். 5

மெய்வருத்தம் பாரார் ; பசிநோக்கார் ; கண்டுஞ்சார் ;
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார் ;—செவ்வி
அருமையும் பாரார்; அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னர். 6

அவையஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியும், கல்லார்
அவையஞ்சா வாகுலச் சொல்லும்,—நவையஞ்சி
ஈத்துண்ணார் செல்வமும், நல்கூர்ந்தார் இன்னலமும்
பூத்தலிற் பூவாமை நன்று. 7

—குமரகுருபரர்

5. அறநெறிச் சாரம்

இன்றுளார் இன்றேயும் மாய்வர் ; அவருடைமை
அன்றே பிறருடைமை யாயிருக்கும் ;—நின்ற
கருமத்தர் அல்லாத கூற்றின்கீழ் வாழ்வார்
தருமம் தலைநிற்றல் நன்று. 1

மக்க ளுடம்பு பெறற்கரிது ; பெற்றபின்
மக்க ளறிவும் அறிவரிது ;—மக்கள்
அறிவ தறிந்தார் அறத்தின் வழுவார்
நெறிதலை நின்றொழுகு வார். 2

'பலகற்றோம் யாம்!'என்று தற்புகழ வேண்டா ;
அலர்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையுங் காக்கும் ;
சிலகற்றார் கண்ணும் உளவாம் பலகற்றார்க்(கு)
அச்சாணி யன்னதோர் சொல். 3

முன்னின் றொருவன் முகத்தினும் வாயினும்
கன்னின் றுருகக் கலந்துரைத்துப்—பின்னின்
றிழித்துரைக்கும் சான்றோரை அஞ்சியே தேவர்
விழித்திமையா நின்ற நிலை. 4

ஒளியும் ஒளிசான்ற செய்கையும் சான்றோர்
தெளிவுடைய ரென்றுரைக்குந் தேசும்—களியென்னும்
கட்டுரையாற் கோதப் படுமேல், இவையெல்லாம்
விட்டொழியும் வேறாய் விரைந்து. 5

—முனைப்பாடியார்

III. வருணனை

1. விண்மீன்

விண்மீன் இனங்காள்! விண்மீன் இனங்காள்!
வற்கடஞ் சென்றுழி வள்ளலார் போல
அற்கடல் மான அதிர்ந்தெழு ஞான்று
கலைமதி தணந்த காலையும் ஒளிசெய்(து)

உலேவின்(று) உலகினர்க்(கு) உதவுங் கருவிகாள்!
நீலக் கம்பளத்(து) ஏலப் பரப்புபு
செயிர்தீர்ந்(து) இலங்கும் வயிரமணி என்கோ?
விண்ணெனுங் கடலுள் மேவுமுத்(து) என்கோ?
நீலவான் படத்தின் நிகழ்புழை வழித்தெரி
கோலம்ஆர் கயிலைக் குன்றின்ஒளி என்கோ?
விண்தங்கு வெவ்வே(று) அண்டங்கள் என்கோ?
வானமா மரைஇலை மேல்நனி மிளிரும்
புனல்துளி என்கோ? புகலுமின்!
மினல்தகை கொண்டவெண் மீன்இனங் காளே!

—வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார்

2. மருதம்

தண்டலை மயில்க ளாடத்
தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல்கள் முழவி னேங்கக்
குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை எழினி காட்டத்
தேம்பிழி மகர யாழின்
வண்டுக ளினிது பாட
மருதம்வீற் றிருக்கு மாதோ.

—கம்பநாடர்

3. நெற்கதிர்த் தோற்றம்

சொல்,அருஞ் சூல்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருஇருந்(து) ஈன்று மேலலார்
செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்தநூல்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே.

—திருத்தக்க தேவர்

4. கார்

காரே!உன் நீரைஎல்லாம் கள்ளன் கவர்ந்தானோ?
நீரே உதவாய், நெறிஆமோ?—நேரேதான்

வாரிஉண்டு வாரிமொண்டு வாரிஉண்டு வான்இருண்டு
பேரிகொண்டு நீதிரண்டு பெய். 1

செல்என்றுன் நாமத்தைச் செப்பினதே அல்லாது
செல்என் றுனைநாங்கள் செப்பினமா ?—அல்லென்று
மெய்யா உவமிக்க விண்மீது தோன்றியநீ
பெய்யாமற் போனதென்னே? பேசு. 2

வேண்டுங்கால் நீபெய்யாய் ; வேண்டாத போதுபெய்வாய் :
தாண்டிநீ செய்வவெல்லாந் தப்புகளே.—நீண்டுலவும்
வட்டமுகி லே!உனக்கு மாசெனப்பேர் தந்தோர்க்குப்
பட்டமது கட்டுவேன் பார் ! 3

மேகமே ! நீயும்அந்த மேகநோய் போற்கறுத்தாய்
சோகமே செய்துளியைத் தூறியே—வேகம்
மிகுவெட்டை யைக்கிளப்பி வேதைசெய்வ தாலே
தகுமேஉன் பேர்உனக்குத் தான். 4

மையே ! எமைமுன் வளர்த்தநீ கைவிட்டால்
ஐயே ! இனிஎமையார் ஆதரிப்பார் ?—பெய்யே
கடகட என்றுங் களகள என்றுஞ்
சடசட என்றும்நீ தான். 5

—மாயூரம் வேதநாயகம் பிள்ளை

IV. கதைப் பகுதி

1. கண்ணன்—என் தோழன்

பொன்னவிர் மேனிச் சுபத்திரை மாதைப்
புறங்கொண்டு போவதற்கே—இனி
என்ன வழியென்று கேட்கி லுபாயம்
இருகணத் தேயுரைப்பான் ;—அந்தக்
" கன்னன்வில் லாளர் தலைவனைக் கொன்றிடக்
காணும் வழியொன்றிலேன்—வந்திங்
குன்னை யடைந்தனன்," என்னி லுபாயம்
ஒருகணத் தேயுரைப்பான் ; 1

கானகத் தேசுற்று நாளினு நெஞ்சிற்
கலக்கமி லாதுசெய்வான் ;—பெருஞ்
சேனைத் தலைநின்று போர்செய்யும் போதினில்
தேர்நடத் திக்கொடுப்பான் ;—என்றன்
ஊனை வருத்திடு நோய்வரும் போதினில்
உற்றம ருந்துசொல்வான் ;—நெஞ்சம்
ஈனக் கவலைக ளெய்திடும் போதில்
இதஞ்சொல்லி மாற்றிடுவான் ; 2

பிழைக்கும் வழிசொல்ல வேண்டுமென் றாலொரு
பேச்சினி லேசொல்லுவான் ;
உழைக்கும் வழிவினை யாளும் வழிபயன்
உண்ணும் வழியுரைப்பான் ;
அழைக்கும் பொழுதினிற் போக்குச்சொல் லாமல்
அரைநொடிக் குள்வருவான் ;
மழைக்குக் குடைபசி நேரத் துணவென்றன்
வாழ்வினுக் கெங்கள்கண்ணன். 3

கேட்ட பொழுதிற் பொருள்கொடுப் பான்;சொல்லுங்
கேலி பொறுத்திடுவான் ;—எனை
ஆட்டங்கள் காட்டியும் பாட்டுக்கள் பாடியும்
ஆறுதல் செய்திடுவான் ;—என்றன்
நாட்டத்திற் கொண்ட குறிப்பினை யிஃதென்று
நான்சொல்லு முன்னுணர்வான் ;—அன்பர்
கூட்டத்தி லேயிந்தக் கண்ணனைப் போலன்பு
கொண்டவர் வேறுளரோ ? 4

உள்ளத்தி லேகரு வங்கொண்ட போதினில்
ஓங்கி யடித்திடுவான் ;—நெஞ்சில்
கள்ளத்தைக் கொண்டொரு வார்த்தைசொன்னாலங்குக்
காறி யுமிழ்ந்திடுவான் ;—சிறு

பள்ளத்தி லேநெடு நாளழு குங்கெட்ட
பாசியை யெற்றிவிடும்—பெரு
வெள்ளத்தைப் போலருள் வார்த்தைகள் சொல்லி
மெலிவு தவிர்த்திடுவான். 5

சின்னக் குழந்தைகள் போல்விளை யாடிச்
சிரித்துக் களித்திடுவான் ;—நல்ல
வன்ன மகளிர் வசப்பட வேபல
மாயங்கள் சூழ்ந்திடுவான் ;—அவன்
சொன்னப டிநட வாவிடி லோமிகத்
தொல்லை யிழைத்திடுவான் ;—கண்ணன்
தன்னை யிழந்துவி டில்,ஐய கோ!பின்
சகத்தினில் வாழ்வதிலேன் ! 6

கோபத்தி லேயொரு சொல்லிற் சிரித்துக்
குலுங்கிடச் செய்திடுவான் ;—மனத்
தாபத்தி லேயொன்று செய்து மகிழ்ச்சி
தளிர்த்திடச் செய்திடுவான் ;—பெரும்
ஆபத்தி னில்வந்து பக்கத்தி லேநின்
றதனைவி லக்கிடுவான் ;—சுடர்த்
தீபத்தி லேவிழும் பூச்சிகள் போல்வருந்
தீமைகள் கொன்றிடுவான். 7

உண்மை தவறி நடப்பவர் தம்மை
உதைத்து நசுக்கிடுவான் ;—அருள்
வண்மையி னலவன் மாத்திரம் பொய்கள்
மலைமலை யாவுரைப்பான் ;—நல்ல
பெண்மைக் குணமுடை யான்;சில நேரத்திற்
பித்தர் குணமுடையான் ;—மிகத்
தண்மைக் குணமுடை யான்;சில நேரம்
தழலின் குணமுடையான். 8

கோல்லுங் கொலைக்கஞ்சி டாத மறவர்
குணமிகத் தானுடையான் ;—கண்ணன்
சொல்லு மொழிகள் குழந்தைகள் போலொரு
சூதறி யாதுசொல்வான் ;—என்றும்
நல்லவ ருக்கொரு தீங்குநண் ணாது
நயமுறக் காத்திடுவான் ;—கண்ணன்
அல்லவ ருக்கு விடத்தினில் நோயில்
அழலினி லுங்கொடியான். 9

காதல் விளைய மயக்கிடும் பாட்டினில்
கண்மகிழ் சித்திரத்தில்—பகை
மோதும் படைத்தொழில் யாவினு மேதிற
முற்றிய பண்டிதன்காண் ;—உயர்
வேதமு ணர்ந்த முனிவ ருணர்வினில்
மேவு பரம்பொருள்காண் ;—நல்ல
கீதை யுரைத்தெனை யின்புறச் செய்தவன்
கீர்த்திகள் வாழ்த்திடுவேன் ! 10

—*சி. சுப்பிரமணிய பாரதியார்*

2. கயவன் கல்வியருமை அறிந்தது

சீர்மிகும் பெயரா னேங்குந்
திருநின்ற வூரில் வாழ்வோன் ;
நீர்மிகும் நிலங்க ளுள்ளோன் ;
நிறைபல வேர்க ளுள்ளோன் ;
கார்மிகும் மேதி யுள்ளோன் ;
கானடை பலவு முள்ளோன் ;
ஏர்மிகு மில்ல முள்ளோன்
எல்லனென் றியம்பும் பேரோன். 1

மையெனக் கறுத்த மெய்யன் ;
வாங்கியுட் குழிந்த கண்ணன் ;
பையெனச் சுருங்கும் வாயன் ;
பலகறை படிந்த பல்லன் ;

கையினிற் கொண்ட கோலன்;
காம்பெனத் திரண்ட காலன்;
மெய்யினு னீண்ட பாம்பின்
வயிற்றினன்; வெடித்த சொல்லன். 2

காக்கைகண் விழிக்கு முன்னே
கண்விழித் தெழுந்து, வாயிற்
பாக்குட னிலையை மென்று,
பண்ணையை நோக்கிச் செல்வான்;
ஊக்கமாய் வரப்பின் மீதே
உலவிவந் துறுவைக் கோலே
மேக்குறத் திரித்துப் பல்லே
மினுக்குறத் துலக்கு வானே. 3

உச்சியிற் பொழுது நிற்கும்
ஒருபகல் வேளை நண்ண
வெச்சுடன் வீட டைந்து,
வெறியகூழ் கலக்கி யுண்டு,
இச்சையில் சொக்கட் டானை
இன்புடன் விரித்துக் கொண்டே
அச்சம யத்தி லாட
அயலவர் தமைய ழைப்பான். 4

அழைத்தவ ருடனி ருந்தே
ஆடுவ னுங்க ளோர்கள்
செழித்தகல் லறிவு சான்ற
தேசிக னொருவன் போந்து,
'பழுத்தநற் பெரியீர்! நுந்தம்
பாலனும் படித்தி டாமற்
பழித்திடத் திரிய வைத்தல்
பான்மையோ? பகரும்,' என்றான். 5

'கல்வியிங் கெமக்கேன்? எங்கள்
கழனியைக் கண்கா ணித்துச்
செல்வமாய் வளர்ந்து மேனி
திகழுற விருந்தாற் போதும்;
'நல்விவே கத்தாற் செல்வம்
நாசமே யாகும்,' என்னச்
சொல்லின ரெங்கள் முன்னோர்;
சூதல; மற்றும் கேளும்: 6

'எங்கள்முற் பாட்ட னருக்
கிருவராங் குமரர் தம்முள்
அங்கொரு வனைப்பள் ளிக்கே
அனுப்பின ரவனு மன்றே
பொங்கிய காய்ச்சல் கண்டு
போயின னென்ப ரந்தோ!
இங்கென்மைந் தனையு மவ்வா
றிழந்திடச் சொல்கின் றீரே! 7

'பிள்ளையும் படிக்க வேண்டா;
பிரம்படி படவும் வேண்டா;
சள்ளையாஞ் சுவடி தூக்கிச்
சங்கடப் படவும் வேண்டா;
முள்ளெனு மாணி கொண்டு
முறியினி லெழுத வேண்டா;
பிள்ளையென் றிருந்தாற் போதும்
பெற்றவள் களிக்க,' என்றான். 8

'ஐய,நீர் சுவடி தம்மை
அடுக்கடுக் காகக் கற்றும்
உய்யவோர் வழியு மின்றி
உழல்கிறீர் வீடு தோறும்;

கையினிற் பொருளுள் ளார்க்குக்
கல்வியாற் பயன்றான் யாதோ?
செய்யுமோர் தொழிலி லார்க்குச்
செப்புமிக் கதையை,' என்னா 9

'நல்லதென் மைந்தன் றன்னை
நலனுறப் படிப்பித் தற்குச்
செல்லுமோர் தொகைதான் யாது?
செப்பிடும் பார்ப்போம்!' என்றான்;
'எல்லரே! உமது மைந்தன்
எழுதவும் படித்தி டற்கும்
வல்லவ னாவ தற்கு
வராகனோர் நாலைந் தாமே.' 10

என்றனன்; என்ற லோடும்
எல்லனு மிறும்பூ தெய்தி,
'என்றது நாலு மைந்தோ,
இருபதோ? இருப தாயின்
இன்னொரு கடாவும் வாங்கி
ஏரினிற் பூட்டி நன்றாய்க்
குன்றென நெல்வி ளைத்துக்
குவியலாய்க் குவித்தி டேனோ? 11

'இருபது வராக னந்தோ!
எழுபது வெள்ளி யன்றோ?
ஒருபதோ டிருப தாயின்
ஒருவிதத் தொழிக்க லாகும்;
வருவதிங் கதனா லென்ன?
வண்டியோ, மணியோ, மாடோ?
தருவதிங் கெழுத்தே யன்றோ?
தலையெழுத் தழிவ துண்டோ?' 12

என்னவே வெறுத்துக் கூறும்
எல்லனை யிழித்து நோக்கி,
நன்னய வுபாத்தி யாயன்,
'நரைமுதிர் கிழவ ரே!நீர்
பொன்னையே பெரிதாக் கொண்டீர் ;
புந்தியைச் சிறிதாக் கண்டீர் ;
பின்னையப் பொருளைக் கொண்டோர்
பெருங்கடாக் கொள்ளு வீரேல், 13

'அப்பொழு தும்மி டத்தே
அருங்கடா விரண்டி ருக்கும் ;
ஒப்புட னேரிற் பூட்டி
உழுதிட லாகும்,' என்ன,
'எப்படி யிரண்டுண் டாகும் ?
யான்கொள்வ தொன்றே யன்றோ ?
அப்படி யிரண்டுண் டாயின்
அதிட்டமென் றடைவே னன்றோ ? 14

'சொல்லுமவ் வுபாயம்,' என்றே
துளைத்திட, உபாத்தி யாயன்,
'எல்லரே ! நீவிர் கொள்ளும்
எருமையொன் றுடனே யுந்தம்
கல்வியில் லாத மைந்தன்
கடாவெனத் திரிவ னன்றே ?
வல்லவா மிரண்டு மேதி
வரும்வழி யறிகி லீரோ ?' 15

என்றனன் ; அதனைக் கேட்ட
எல்லனும், 'என்னே ! என்னே !
என்றனோர் மைந்தன் றன்னை
எருமையே யாக்கி விட்டீர் !

இன்றெனக் கதனை நன்று
இயம்புக,' எனவந் நல்லோன்
ஒன்றிய கல்வி யின்சீர்
உழவனுக் குரைப்ப தானான் : 16

'மன்னிய வுயிர்க டம்முள்
மானிடன் சிறந்து நிற்றல்
அன்னவ னறிதிற் கொண்ட
அறிவினா லன்றோ வையா !
துன்னுமவ் வறிவு நாளுந்
துலங்கிடச் செய்யுஞ் சீர்மை
நன்னயக் கல்விக் கல்லால்
நாடுமற் றெதற்கு முண்டோ ? 17

'வித்தையில் லாத மக்கள்
விலங்கினுங் கடைய ராவர் ;
புத்தியில் லாத மாந்தர்
புல்லினும் புல்ல ராவர் ;
மெய்த்திறங் காண்ப தற்கு
வித்தையே விழிய தாகும் ;
கைத்தலப் பொருளோ நந்தங்
கருத்தினை மயக்கு மன்றோ ? 18

'கற்றறி வில்லா மாந்தர்
கண்கெட்ட மாடே யாவர் ;
மற்றவர் மண்ணின் மீதே
மடமையின் மாழ்கி நிற்பர் ;
உற்றமற் றவர்க ளிந்த
உலகுக்கோர் சுமையே யாவர் ;
பெற்றவர் செய்த பாவம்
பிள்ளையாய்ப் பிறந்த தாமே ! 19

'அந்தநாள் தொட்டு நந்தம்
ஆன்றவ ராய்ந்து வைத்த
அந்தமில் பொருளைக் கல்லான்
அறிவனோ? அரிதின் நாளும்
இந்தநல் லுலகிற் றோன்றும்
இயல்பினை யறிகி லானை
அந்தமில் கிடாயே யென்றல்
அதிசய உத்தி யாமோ? 20

'மாண்புறு கல்வி மாந்தர்
மடமையைக் கொல்வ தல்லாற்
பூண்பணி போன்று மக்கள்
பொன்றிடக் கொல்லா தையா!
வீண்பழி சுமத்த னன்றோ
வித்தையால் விளிந்தா னென்றே?
ஆண்பெணென் றிருபா லாரும்
அறிவுறக் கற்கை நன்றால்.' 21

என்னவே கூறக் கேட்ட
எல்லனு மிதய நைந்து,
'முன்னமே யறியா தியானும்
மூடரின் முதன்மை பெற்றேன்!
இன்னமு மறிவு மாழ்கி
இருந்திட லெளிமை யாமே!
மன்னிய கல்வி யென்றன்
மைந்தனுக் குணர்த்து'கென்ன 22

தேசிகன் றன்னை வேண்டிச்
சிறுவனை யவன்பா லாக்கி,
'நேசமா யிவனை நல்ல
நெறியினி லுய்க்க,' என்ன,

மாசிலவ் வுபாத்தி யாயன்
மைந்தனைத் தன்பாற் கொண்டே
ஆசிகள் பலவுங் கூறி
அறிவுநூல் புகட்டி னனே. 23

—கா. ரா. நமச்சிவாய முதலியார்

3. நளவெண்பா

நளன் தமயந்தியிடம் தூது சென்றது

காவற் குடைவேந்தைக் கண்ணுற்று விண்ணவர்கோன்,
'ஏவற் றொழிலுக் கிசை,'என்றான்;—ஏவற்கு
மன்னவனு நேர்ந்தான் மனத்தினால் மற்றதனை
இன்னதென வோரா திசைந்து. 1

'செங்கண் மதயானைத் தேர்வேந்தே! தேமாலை
எங்களிலே சூட்ட இயல்வீமன்—மங்கைபால்
தூதாக,' என்றான்;அத் தோகையைத்தன் ஆகத்தால்
கோதாக வென்றானக் கோ. 2

[நளன், "தேவர் தேவே, நீர் கூறியபடியே செய்வேன்: ஆனால், அந்த நகரத்து அரண்மனையின் அந்தப்புரத்தை அதன் காவல்களைக் கடந்து நான் எப்படி அடைவது?" என்றான்.]

வார்வெஞ் சிலையொழிய வச்சிரத்தான் மால்வரையைப்
போர்வெஞ் சிறகறுத்த பொற்றோளான்,—'யாருமுனைக்
காணார்;போய் மற்றவளைக் காண்,'என்றான் கார்வண்டின்
பாணாறுந் தாரானைப் பார்த்து. 3

[கன்னிமாடம் புகுந்த நளனைக் கண்ட தமயந்தி,]

'காவல் கடந்தெங்கள் கன்னிமா டம்புகுந்தாய்!
யாவனோ விஞ்சைக் கிறைவனோ?—தேவனோ?
உள்ளவா சொல்,'என்றாள் ஊசற் குழைமீது
வெள்ளவாள் நீர்சோர விட்டு. 4

[நளன் தமயந்தியை நேரிற்கண்டானாயினும், அவளிடம் தான் கொண்டிருந்த விருப்பத்தைத் தன் அறிவின் மிகுதியால்

அடக்கிக்கொண்டு, அவள் வினவியவற்றிற்குப் பதிலாகத் தான் தேவர்கள் தூதனாய் வந்த செய்தியைச் சொல்லித் தன் நாடு பெயர் முதலியவைகளையுங் கூறினான்.]

'என்னுரையை யாதென் றிகழா திமையவர்வாழ்
பொன்னுலகங் காக்கும் புரவலனை—மென்மாலை
சூட்டுவாய்,' என்றான் தொடையிற்றேன் தும்பிக்கே
ஊட்டுவான் எல்லாம் உரைத்து. 5

'இயமரநின் றார்ப்ப இனவளைநின் றேங்க
வயமருதோள் மன்னா! வருத்த—சுயம்வரந்தான்
நின்பொருட்டால் என்று நினை'யென்றாள் நீள்குடையான்
தன்பொருட்டால் நைவாள் தளர்ந்து. 6

போதரிக்கண் மாதராள் பொன்மாலை சூட்டத்தான்
ஆதரித்தார் தம்மோ டவ்வையகத்தே—'சோதிச்
செழுந்தளர வெண்குடையாய்! தேவர்களும் நீயும்
எழுந்தருள்க,' என்றாள் எடுத்து. 7

வானவர்கோன் ஏவல் வழிச்சென்று வாணுதலைத்
தானணுகி மீண்டபடி சாற்றவே—தேன்முரலும்
வண்டார் நளன்போந்து வச்சிராயு தற்றொழுதான்
கண்டார் உவப்பக் கலந்து. 8

விண்ணவர்தம் ஏவலுடன் வீமன் திருமகள்பால்
நண்ணு புகழ்நளனும் நன்குரைத்த—பெண்ணணங்கின்
வன்மொழியும் தேவர் மனம்கிழத் தான்மொழிந்த
மென்மொழியும் சென்றுரைத்தான் மீண்டு. 9

'அங்கி அமுதநீர் அம்பூ அணியாடை
எங்குநீ வேண்டினைமற் றவ்விடத்துச்—சங்கையறப்
பெற்றாய்,' எனவருணன் ஆகண் டலன்தருமன்
மற்றோனும் ஈந்தார் வரம். 10

தமயந்தி திருமணம்

பூசுரர்தம் கைம்மலரும் பூங்குமுத மும்முகிழ்ப்பக்
காசினியும் தாமரையும் கண்விழிப்ப—வாசம்
அலர்ந்ததேங் கோதையாள் ஆழ்துயரத் தோடு
புலர்ந்ததே அற்றைப் பொழுது. 11

காவலரைத் தன்சேடி காட்டக்கண் டீரிருவர்
தேவர் நளனுருவாய்ச் சென்றிருந்தார் ;—பூவரைந்த
மாசிலாப் பூங்குழலாள் மற்றவரைக் காணாநின்
றூசலா டுற்றா ளுளம். 12

பூணுக் கழகளிக்கும் பொற்றொடியைக் கண்டக்கால்
நாணுக்கு நெஞ்சுடைய நல்வேந்தர்—நீணிலத்து
மற்றேவர் வாராதார் ? வானவரும் வந்திருந்தார்
பொற்றேர் நளனுருவாய்ப் போந்து. 13

‘மின்னும்தார் வீமன்றன் மெய்ம்மரபிற் செம்மைசேர்
கன்னியான் ஆகில் கடிமாலை—அன்னந்தான்
சொன்னவனைச் சூட்ட அருள்,’என்றாள் சூழ்விதியின்
மன்னவனைத் தன்மனத்தே வைத்து. 14

கண்ணிமைத்த லாலடிகள் காசினியில் தோய்தலால்
வண்ண மலர்மாலை வாடுதலால்—எண்ணி
நறுந்தா மரைவிரும்பு நன்னுதலே அன்னாள்
அறிந்தாள் நளன்றன்னை ஆங்கு. 15

விண்ணரசர் எல்லாரும் வெள்கி மனஞ்சுளிக்கக்
கண்ணகன் ஞாலம் களிகூர—மண்ணரசர்
வன்மாலை தம்மனத்தே சூட வயவேந்தைப்
பொன்மாலை சூட்டினாள் பொன். 16

திண்டோள் வயவேந்தர் செந்தா மரைமுகம்போய்
வெண்டா மரையாய் வெளுத்தவே—ஒண்டாரைக்
கோமாலை வேலான் குலமாலை வேற்கண்ணாள்
பூமாலை பெற்றிருந்த போது. 17

[பிறகு, வீமராஜன் நல்ல முகூர்த்தத்தில் தமயந்திக்கும் நளனுக்கும் திருமணத்தைச் சிறப்பாகச் செய்வித்தான். அதைக் கண்டு தேவர் நால்வர் தவிர மற்றவர் எல்லாரும் பெருமகிழ் வெய்தினர்.]

—புகழேந்திப் புலவர்

V. பல்சுவைப் பகுதி

1. சீட்டுக்கவி

கல்விச் சமுத்திரங் கமலால யந்தமிழ்க்
கடன்மடை திறந்தவெள்ளம்
கற்பனை பிறப்பிடங் கலைமக ளிருப்பிடங்
கவிமாரி பொழியுமேகம்
சொல்விற் பனம்விளையு மதுரக் களஞ்சியந்
தோன்றுகாப் பூரதீபம்
சுகிர்தகுண அவதானி சரவணப் பெருமாள்கை
தொட்டெழுதி விட்டசனது:
வில்லுக் கருச்சுனன் சொல்லுக் கரிச்சந்த்ரன்
வெற்றிக்கு விக்ரமார்க்கன்
வித்தைக் ககத்தியன் முத்துக் கருப்பண்ண
விலட்சண னெதிர்ந்துகாண்க :
மல்வெற்றி யாயென்று தாயென்று நீயென்று
மாலென்று வேலென்றுகா
மாவென்று காவென்று நாவொன்று பாவொன்று
வருகின்ற தருள்புரிகவே !

—சரவணப்பெருமாள் கவிராயர்

2. மீனாட்சியம்மை குறம்

திங்கள்முடி சூடுமலை ; தென்றல்விளை யாடுமலை ;
தங்குபுயல் சூழுமலை ; தமிழ்முனிவன் வாழுமலை ;
அங்கயற்கண் ணம்மைதிரு வருள்சுரந்து பொழிவதெனப்
பொங்கருவி தூங்குமலை ; பொதியமலை என்மலையே.

—குமரகுருபர சுவாமிகள்

3. திருவரங்கக் கலம்பகம்

தேனமருஞ் சோலைத் திருவரங்கர் எப்பொருளும்
ஆனவர்தாம் ஆண்பெண் அலியலர்காண் அம்மானை ;
ஆனவர்தாம் ஆண்பெண் அலியலரே ஆமாகில்,
சானகியைக் கொள்வரோ தாரமாய்? அம்மானை ;
தாரமாய்க் கொண்டதுமோர் சாபத்தால் அம்மானை.

—பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

4. சதகம்

பணந்தானே அறிவாகும்; பணந்தானே வித்தையுமாம்;
பரிந்து தேடும்
பணந்தானே குணமாகும்; பணமில்லா தவர்பிணமாம்
பான்மை சேர்வர்;
பணந்தானே பேசுவிக்கும்; தண்டலைநீள் நெறியாரே!
பார்மீ தில்தான்
பணந்தானே பந்தியிலே, குணந்தானே குப்பையிலே
படுக்கும் தானே.

—தண்டலையார் சதகம்

5. பிள்ளைத்தமிழ்—நாலப்பருவம்

சோறு மணக்கும் மடங்களெலாம்;
தூய்மை மணக்கும் சிந்தையெலாம்;
சுவண மணக்கும் ஆடையெலாம்;
தொங்கல் மணக்கும் தோள்களெலாம்;
சேறு மணக்கும் கழனியெலாம்;
செல்வ மணக்கும் மாடமெலாம்;
தென்றல் மணக்கும் மேடையெலாம்;
தெய்வ மணக்கும் செய்யுளெலாம்;
நீறு மணக்கும் நெற்றியெலாம்;
நெய்யே மணக்கும் கறிகளெலாம்;
நெருப்பு மணக்கும் குண்டமெலாம்;
நேய மணக்கும் வீதியெலாம்;

சாறு மணக்கும் குன்றத்தூர்த்
தலைவா! தாலோ! தாலேலோ!
சகலா கமபண் டித!தெய்வச்
சைவா! தாலோ! தாலேலோ!

—சேக்கிழார்

VI. தனிப் பாடல்கள்

1. சுதந்தரச் சிறப்பு

மீன்கடலே எழுந்தாலும், விண்சுடரே விழுந்தாலும்,
மான்மலைகள் சாய்ந்தாலும், மண்கம்ப மானாலும்,
ஊன்கொந்திக் கண்டதுண்டம் ஒன்னலர்கள் செய்தாலும்,
வான்மருவ நேர்ந்தாலும் மறப்பதன்று சுதந்தரமே.

—திரு. வி. கல்யாணசுந்தரனார்

2. தாய் தமர்கள் இல்லாததால்

சேராத வேடன் செருப்பா லுதைக்கவும், தீண்டவும்,தண்
ணீர்வா யுமிழவும், உச்சிட்டம் போடவும், நீண்டசிலைத்
தாரா லடிக்கவும், கண்ணீர் ததும்பவும் தாய்தமர்கள்
ஆரா கிலுமில்லை யோதிருக் காளத்தி யப்பனுக்கே!

—சொக்கநாதப் புலவர்

3. பொன்

'பொன்னென உலக மெல்லாம்
போற்றிடும் பொருளே! உன்றன்
மின்னிகர் வண்ணம் எங்கே
பெற்றனை விளம்பாய்,' என்றேன்;
'அன்னையர் தமிழ்ப்பா வாற்றம்
மதலையர் அழுகை போக்கும்
கன்னியத் தமிழ்நன் னாட்டுக்
கன்னிய ரிடத்தி னன்றே?'

—பரலி சு. நெல்லையப்பர்

4. தமிழ்த் தெய்வம்

பொருப்பிலே பிறந்து தென்னன்
புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே இருந்து வைகை
ஏட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர்
நினைவிலே நடந்தோர் ஏன
மருப்பிலே பயின்ற பாவை
மருங்கிலே வளரு கின்றாள்.

—வரந்தருவார்

5. குரங்கு வந்த காரணம்

புராதன மான தமிழ்ப்புல வீரிந்தப் புன்குரங்கு
மராமரம் விட்டிங்கு வந்ததென் னோ?வகை கேட்டிலையோ ?
தராதலம் வென்ற தமிழ்மா றனையுந்தன் தம்பியையும்
இராகவ னென்று மிலக்குவ னென்று மிருந்ததுவே.

—இரட்டையர்

VII. திருக்குறள்

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார். 1

கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை. 2

குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது. 3

செயற்பால தோரும் அறனே ஒருவற்கு
உயற்பால தோரும் பழி. 4

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும். 5

குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர். 6

அன்பின் வழியது உயிர்நிலை; அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு. 7

அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல். 8

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. 9

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. 10

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி. 11

எல்லார்க்கும் நன்றாம் பணிதல்; அவருள்ளும்
செல்வர்க்கே செல்வந் தகைத்து. 12

அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன்று இல்லை
ஒழுக்க மிலான்கண் உயர்வு. 13

ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம்; பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ். 14

கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும். 15

சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர். 16

ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு? 17

சொல்லுக சொல்லிற் பயனுடைய; சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல். 18

தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயாது அடிஉறைந் தற்று. 19

ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு. 20

ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின். 21

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. 22

வசைஒழிய வாழ்வாரே வாழ்வார்; இசையொழிய
வாழ்வாரே வாழா தவர். 23

பொருளற்றார் பூப்பர் ஒருகால்; அருளற்றார்
அற்றார்;மற் றாதல் அரிது. 24

வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்
மெலியார்மேல் செல்லும் இடத்து. 25

வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்நெஞ்சம்
தான்அறி குற்றப் படின்? 26

அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்றா தவர். 27

பொய்யாமை அன்ன புகழில்லை எய்யாமை
எல்லா அறமும் தரும். 28

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு. 29

இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை. 30

பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா
பிற்பகல் தாமே வரும். 31

கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்
செல்லாது உயிருண்ணுங் கூற்று. [நாள்மேல் 32

ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப
கோடியும் அல்ல பல. 33

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு. 34

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை. 35

நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கண் பட்ட திரு. 36

கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி. 37

அஞ்சுவ தஞ்சாமை பேதைமை ; அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில். 38

அறிவுடையார் எல்லாம் உடையார் ; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர். 39

வியவற்க எஞ்ஞான்றும் தன்னை ; நயவற்க
நன்றி பயவா வினை. 40

முதலிலார்க்கு ஊதியம்இல்லை ; மதலையாஞ்
சார்பிலார்க்கு இல்லை நிலை. 41

நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉம் இல். 42

எண்ணித் துணிக கருமம் ; ‘துணிந்தபின்
எண்ணுவம்’ என்பது இழுக்கு. 43

நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந் தூக்கின்
உயிர்க்கிறுதி யாகி விடும். 44

எய்தற் கரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற் கரிய செயல். 45

தேறற்க யாரையும் தேராது தேர்ந்தபின்
தேறுக தேறும் பொருள். 46

செய்வானை நாடி வினைநாடிக் காலத்தொடு
எய்த உணர்ந்து செயல். 47

சுற்றத்தாற் சுற்றப் படஒழுகல் செல்வந்தான்
பெற்றத்தால் பெற்ற பயன். 48

உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றுந்தான்
உள்ளியது உள்ளப் பெறின். 49

இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பம் துடைத்தூன்றும் தூண். 50

திறனறிந்து சொல்லுக சொல்லை ; அறனும்
பொருளும் அதனினூஉங்கு இல். 51

துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை. 52

கல்லா தவரின் கடையென்ப கற்றறிந்து
நல்லார் அவையஞ் சுவார். 53

அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள். 54

ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையின் பேதையார் இல். 55

குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ
குன்றி அனைய செயின். 56

பணியுமாம் என்றும் பெருமை ; சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து. 57

இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு? 58

குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு. 59

செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும். 60

செய்யுட்பகுதி—குறிப்புரை

I. கடவுள் வணக்கம்

1. அருள் பழுத்த - கருணை முதிர்ந்த ; அரியவான பொருளனைத்தும்—கிடைத்தற்கு அருமையான பொருள்கள் எல்லாவற்றையும் ; பூரணமாய் - குறைவற்றதாய் ; கருவி - காரணம் ; விரிவினை - பார்ந்த வினை ; உயிர்த்திரள் - உயிர்களின் கூட்டம் ; விழுப்பொருள் - மேலான பொருள்.

2. தோய்விலன் - தங்காதவன் ; புலன் ஐந்து - உணர்தல், உருசி, காட்சி, மோத்தல், கேட்டல் ஆகியவை.

3. வெள்ளந்தாழ் விரிசடையாய் - கங்கையைச் சடையிற்றாங்கிய சிவபெருமானே ; விடையாய் - எருதை வாகனமாகக் கொண்டவனே ; வேட்ட - விரும்பிய.

4. உவப்பு - மகிழ்ச்சி ; கலகமுறு - குற்றமற்ற ; விலகலுறு - நீங்குதல் இல்லாத ; மீதானம் - ஆகாயம்.

5. புனல் - நீர் ; வளி - காற்று ; வெளி - ஆகாயம் ; மன்னி - தங்கி ; மதி கதிர் - சந்திர சூரியர் ; ஒரு நெறி - ஒப்பற்ற மதம் ; பொதுமை - சமரசம்.

II. நீதிப் பகுதி

1. நாலடியார்

1. அகள் தீர் - குற்றமற்ற ; பகடு நடந்த கூழ் - எருமைக்கடாவை ஏர்ப்பூட்டி உழுது பயிரிடப்பட்ட தானியம் ; அகடுற - நிலைபெற ; சகடக்கால் - வண்டியின் சக்கரம்.

2. ஓராதே - நினையாமல் ; ஆற்ற - மிகுதியாக ; தீங்கு ஊக்கல் - தீங்கு செய்வதில் மனம் கொள்ளுதல் ; வான் தோய் - உயர்ந்த.

3. நீர் - பனிநீர் ; இன்னினியே - இப்பொழுதே ; இருந்தான் - உட்கார்ந்திருந்தான் ; கிடந்தான் - படுத்திருந்தான் ; கேள் - சுற்றத்தார் ; சென்றான் - மரணமுற்றான்.

4. குஞ்சி - தலை மயிர் ; தானை - ஆடை ; கோட்டமுகு - கரையின் அழகு.

5. தெள்ளிதின் ஆராய்ந்து - நன்கு ஆராய்ந்து ; அமைவுடைய - தகுதியுள்ளவற்றை ; குருகின் - அன்னப் பறவை போல.

6. தலைப்படுவர் - அமையப் பெறுவர் ; தொல் சிறப்பு - பழமையான புகழ் ; ஒண்ணிறம் (ஒள் + நிறம்) - ஒளி மிக்க நிறம் ; புத்தோடு - புதப்பானை.

7. அளாய - கலந்த ; தேரின் - ஆராயின் ; சிறுமை - புன்மை.

8. மல்லல் - வலி பொருந்திய ; மாஞாலம் - பெரிய உலகம் ; நல்கூர்ந்தார் - தரித்திரர் ; பெருமுத்தரையர் - ஒரு சிற்றரச வமிசத்தவர்.

2. நன்னெறி

1. முகமன் - வரவேற்றல் ; துன்று - நிறைந்த ; குழலாய் - கூந்தலை உடைய பெண்ணே.

2. மாசற்ற - குற்றமற்ற ; இன்சொல் பிறிது என்க - இன்சொல்லை வன்சொல் என்று கொள்க ; நல்லோன் எறிசிலை - சாக்கிய நாயனுரால் வீசி எறியப்பெற்ற கல் ; நன்னுதால் - அழகிய நெற்றியை உடைய பெண்ணே ; கருப்பு வில்லோன் - கரும்பு வில்லை உடைய மன்மதன்.

3. புயல் - மேகம் ; பெய்யாக் கொடுக்கும் - பெய்து உபகரிக்கும்.

4. கவர்ந்து - பற்றி ; சினம் - கோபம் ; தடங்கரை - விசாலமான கரை.

5. எந்தை - எம் தந்தை ; நல்கூர்ந்தான் - வறுமையடைந்தான் ; பைந்தொடீ - பசுமையான பொன்னுலாகிய வளையலை அணிந்த பெண்ணே ; அரம்பை - வாழை.

6. இரு நீர் - பெரிய கடல் ; வியனுலகம் - அகன்ற உலகம் ; அதிர் வளையாய் - ஒலிக்கின்ற வளையலையணிந்த பெண்ணே ; அழற்கதிர் - சூரியன் ; தண்ணென் கதிர் - சந்திரன்.

7. உகவாமல் - விரும்பாமல் ; எயிறு - பல் ; வலியன - வன்மையான பொருள்களை.

8. கயவர் - கீழ் மக்கள் ; வில்லார் - வில்லிற்பொருந்திய ; கணையின் - அம்பு போல ; பொலியும் - விளங்கும் ; கொய்தாம் — தட்பமான, சிறிய ; புணை - தெப்பம்.

3. ஏலாதி

'ஏலாதி' என்பது, ஏலம், இலவங்கம், சிறு நாவற்பூ, மிளகு, திப்பிலி சுக்கு என்னும் இவ்வாறு சரக்குகளால் செய்யப்பட்ட சூரணத்தைக் குறிக்கின்றது. இம்மருந்து மக்களுடம்பில் உண்டாகும் பிணிகளை நீக்குவது போல, ஒவ்வொரு பாட்டிலும் அவ்வாறு விஷயங்களைக்

கொண்ட இந்நூல் மக்களின் அறியாமைப் பிணியை அகற்ற வல்லது. இதனையுட்கொண்டே இந்நூலுக்கு இப்பெயர் இடப்பெற்றது.

1. கொலை புரியான் - பிறர் செய்யும் கொலைத் தொழிலை விரும்பாதவன்; கொல்லான் - தான் கொலை செய்யாதவன்; புலால் மயங்கான் - மாமிசத்தை அறிவு மயங்கித் தின்னாதவன்; கூர்த்த - மிகுந்த; அலை - (பிறரை) வருத்தும் தொழில்; யாதும் - சிறிதும்; நிலை திரியான் - தன் கொள்கையினின்று மாறாதவன்; மது மலி - தேன் நிறைந்த; பூங்கோதாய் - பூவை அணிந்த கூந்தலை உடைய பெண்ணே.

2. உடன்படான் - பிறர் செய்யும் கொலைக்குத் தான் சம்மதியாமல்; கொல்லான் - தானும் கொல்லாமல்; உடன்றார் - அன்புறுகின்றவர்; மடம் படான் - அறிவில்லாச் செயலில் ஈடுபட மாட்டான்; மாண்டார் - மாட்சிமை பொருந்தியவர்; மாண்ட - மாட்சிமைப்பட்ட; இடம்பட - பெருகும்படி; நோக்கும் வாய் - ஆராய்வதற்குரிய பெரியாரிடத்தில்; நோக்கி-ஆராய்ந்து; நுழைவானேல் - ஒழுகுவானானால்; யாக்கும் - நீங்காதிருக்கும்.

3. உற்றாரை - நட்பினரை; அன்னணம் - அவ்வாறே; அற்றார்கட்கு - துறவிகட்கு; உறையுள் - இருப்பிடம்; உடுக்கை - ஆடை.

4. வார்குத்து - நீரானது நிலத்தைப் பிளந்தோடும் இடம்; அலைக்களம்-வருத்துகின்ற சிறைச்சாலை; யாக்கும் - நிலைபெற்றிருக்கும்; முச்சாரிகை - யானை, தேர், குதிரை இம்மூன்றும் சாரியிட்டு ஓடுகின்ற; இன்னவை - இவற்றை; நச்சாமை - விரும்பாமை.

5. வையான் - இகழாதவன்; மெய் கூரையான் - (ஒருவர்க்கு நேர இருக்கும் துன்பத்தை அகற்றுதற்காக) நடந்த உண்மையை வெளியிடாதவன்; உள்ளனவும் - தான் அறிந்தவற்றையும்; விட்டுரையான் - வாய் விட்டுச் சொல்லாதவன்; எய் - துன்பம்; குழீஇய - கூடியுள்ள.

6. பேணி - காத்து; பரியா - விரும்பாமல்; அடியார் - பணியாளர்; பறியான் - நீக்கான்; கரியார் - வஞ்சகர்; தேறான் - நம்பான்; இயையான் - நட்புக் கொள்ளான்; அடிசில் - உணவு; மாறான் - நீக்கமின்றி.

4. நீதி நெறி விளக்கம்

1. நெடுந்திரைகள் - நீண்ட அலைகள்; யாக்கை - உடம்பு; நமரங்காள் - நம்மவர்களே; எம்பிரான் மன்று-எம் கடவுளின் சிற்சபை.

2. வீடு - மோட்சம்; புறங்கடை - வீட்டின் புறத்தே; நல்லிசை - நல்ல புகழ்; நாட்டும் - நிலைநிறுத்தும்; உறுங்கவல் - வந்தடையும் துன்பம்; உற்றுழியும் - வந்த போதும்; கை கொடுக்கும் - துணை புரியும்; கல்வியின் ஊங்கில்லை - கல்வியைக்காட்டிலும் மேலானது இல்லை.

3. முற்றும் உணர்ந்தவர் - எல்லாவற்றையும் அறிந்தவர்; களியற்க - மகிழ்ச்சியடையாதே; தகரும் - உடையும்; தகரா - உடையா; கனங்குழாய் - பொற் குண்டலங்களை அணிந்த பெண்ணே; கொல் உலை - கொல்லனுடைய உலைக்களம்; கூடம் - சம்மட்டி.

4. கொழுநன் - கணவன்; மன்ற - நிச்சயமாக; அறவோர் - துறவிகள்; அடிகள் - குரு.

5. மூலம் - காரணம்; விளைவறிந்து - பயன் அறிந்து; சூழ்வன - ஆராய வேண்டுவனவற்றை; சூழ்ந்து - ஆராய்ந்து; ஆள்வினை - முயற்சி; ஆளப்படும் - செய்யப்படும்.

6. மெய் - உடல்; கண் துஞ்சார் - தூங்கார்.

7. அவை - சபை; மெய் - உடல்; விதிர்ப்பார் - நடுங்குவார்; ஆகுலச் சொல் - ஆரவாரப் பேச்சு; நவை - குற்றம்; ஈத்துண்ணுர் - பிறர்க்குக் கொடுத்துத் தாமும் உண்ணுதவர்; நல்கூர்ந்தார் - வறியவர்; பூத்தலின் பூவாமை நன்று - தோன்றுவதைக் காட்டிலும் தோன்ருதிருத்தல் நலம். ஈத்து - ஈந்து என்பதன் வலித்தல் விகாரம்.

5. அறநெறிச் சாரம்

1. மாய்வர் - இறப்பர்; கூற்றின்கீழ் - இயம பயத்துக்குட்பட்டு; தலை நிற்றல் - ஈடுபட்டு நிற்றல்.

2. நெறிதலை - அற நெறியிலே; நின்றொழுகுவார் - நின்று வாழ்வார்.

3. அலர் கதிர் - விரிந்த கிரணங்கள்; ஞாயிற்றை - சூரியனை.

4. முகத்தினும் - முகக் குறிகளாலும்; வாயினும் - சொற்களாலும்; சான்றோர் - வஞ்சப் புகழ்ச்சியாய் இழிந்தோர் என்னும் பொருள் தந்தது.

5. தேசு - புகழ்; களி என்னும் கட்டுரை - கட்குடியன் என்னும் சொல்; கோதப்படுமேல் - மாசு அடையுமானல்.

CONN... 31 MAY 1956 MADRAS

III. வருணனை

1. விண்மீன்

விண்மீன் - நட்சத்திரம், வற்கடம் - பஞ்சம்; வள்ளலார் - வரையாது கொடுப்பவர்; அற்கடல் - இருண்ட கடல்; மான - ஒப்ப; கலைமதி - கிரணங்களையுடைய சந்திரன்; உலைவின்று - (உலைவின்றி) ஓய்வில்லாமல்; செயிர் தீர் - குற்றமற்ற; கோலம் ஆர் - அழகு பொருந்திய; வானமாமரை இலை - வானமாகிய தாமரை இலை; புனல் துளி - நீர்த்துளி; மினல் தகை - மின்னுந் தன்மை.

2. மருதம்

தண்டலை - தண் + தலை - குளிர்ச்சி பொருந்திய இடம்; விளக்கம் - விளக்கு; கொண்டல் - மேகம்; முழவு - மிருதங்கம்; குவளை - நீலோற்பல மலர்; தெண்டிரை - தெள் + திரை - தெளிந்த அலை; எறினி - திரைச்சீலை; மகரயாழ் - நரம்புகள் பிணிக்கப்பட்ட மகர மீன் போன்ற உருவமுள்ள ஒரு வகை இசைக் கருவி; மருதம் - மருத நிலமாகிய மங்கை (வயலும் வயல் சார்ந்த இடமும்).

3. நெற்கதிர்த் தோற்றம்

சொல் - நெல்; சூல் - கரு; பசும்பாம்பு - பச்சைப் பாம்பு; ஈன்று - கதிர் விட்டு; மேலலார் செல்வம் - கீழ் மக்களின் செல்வம்; தலை நிறுவி - தலை நிமிர்ந்து; இறைஞ்சி - வணங்கி.

4. கார்

1. கார் - மேகம்; வாரி உண்டு - கடலை உண்டு; வாரி மொண்டு - அள்ளி முகந்து; வாரி உண்டு — நீரை உட்கொண்டு.
2. செல் - மேகம்; செல் - போ; அல்லென்று - இருள் என்று, அல்ல என்று.
3. முகில் - மேகம்; மாசு - மேகம், குற்றம்.
4. மேக நோய் - மக்களுக்குக் கெட்ட நீரால் உண்டாகும் நோய்; வெட்டை - வெப்பம்; வேதை - வேதனை.
5. மை - மேகம், 'கடகட, களகள, சடசட' - ஒலிக்குறிப்புக்கள்.

IV. கதைப் பகுதி

1. கண்ணன்—என் தோழன்

இது பாரதியாரால் இயற்றப் பெற்ற தொடர்நிலைச் செய்யுள்களுள் ஒன்று.

சுபத்திரையைத் துரியோதனன் மணக்க விரும்பினான். அவனுக்கு அவள் வாழ்க்கைப்படக் கூடாதென எண்ணிய கண்ணன் தன் தங்கையாகிய அவளை ஓர் உபாயத்தால் அருச்சுனனுக்கு மணம் முடித்து வைத்தான்.

1. பொன்னவிர் - பொன் போலப் பிரகாசிக்கும்.
2. தேர் நடத்திக் கொடுப்பான் - கண்ணன் பாரதப் போரில் அருச்சுனனுக்குத் தேர் செலுத்தினான்; ஊனை - உடலை.
3. வினையாளும் வழி - காரிய சித்திக்குரிய உபாயம்.
4. நாட்டத்தில் - கருத்தில்.
5. மெலிவு - தளர்ச்சி; தவிர் - நீக்கு.
6. வன்ன மகளிர் - அழகு பொருந்திய பெண்கள்.
7. மனத்தாபத்தில் - பகையில்; தீபத்திலே விழும் பூச்சி - விட்டிற் பூச்சி.
8. பித்தர் குணம் - பைத்தியம்; தழலின் - நெருப்பின்.
9. மறவர் - வீரர்; நண்ணுறு - அணுகாத; அல்லவர் - கெட்டவர்; விடத்தினில் - விடத்தைக்காட்டிலும்; அழலினில் - நெருப்பைக் காட்டிலும்.
10. படைத் தொழில் - போர்த் தொழில்; பரம்பொருள் - மேலான பொருள்; கீதை - கிருஷ்ண பகவான் அருளிய பகவத்கீதை என்னும் நூல்.

2. கயவன் கல்வியருமை அறிந்தது

1. திரு - இலக்குமி, செல்வம்; கார் - கருமை; மேதி - எருமை; காணடை (கால் + நடை) - ஆடு மாடு முதலியவை; ஏர் - அழகு. (முதலில் வந்துள்ள ஏர், உழுவதற்குப் பயன்படும் கருவி.)
2. மை - இருள், கறை, மாசு; கரை - விளிம்பு, எல்லை; மெய்யினீண்ட - மெய்யினால் + நீண்ட; பாம்பின் வயிற்றினன் - பாம்பு போன்ற ஒட்டிய வயிற்றினன்.
3. பாக்குடனிலையை - பாக்குடன் + இலையை; இலையை - வெற்றிலையை; மேக்கு - மேலே; மினுக்குற - பளபளப்பாகுமாறு.
4. நண்ண - நெருங்க; வெச்சுடன் - வெயிலால் ஏற்பட்ட வெப்பத்துடன்; வெறிய - புனித்த; இச்சையில் - விருப்பமில்லாத; அயலவர் - அக்கம்பக்கத்திலுள்ளோர்.

5. ஆடுவனாங்கணோர் (ஆடுவன் + ஆங்கண் + ஓர்) - ஆடுவான் அங்கே ஒரு ; தேசிகன் - ஆசிரியன் ; பழுத்த - வயதில் முதிர்ந்த ; பான்மையோ - தகுதியாகுமோ ; பகரும் - சொல்லும்.

6. மேனி - உடல் ; திகழுற - விளக்கமுற, அழகுற ; நல்விவேகம் - நல்லறிவு ; சூதல - பொய்யன்று.

7. போயினான் - இறந்தான்.

8. சன்னை - தொந்தரை ; முறி - பனையோலை, எழுதுமுறி.

9. உய்ய - பிழைக்க ; உழல்கிறீர் - சுற்றுகிறீர் ; செப்பும் - கூறும் ; என்னா - என்று கூற.

10. வராகன் - மூன்றரை ரூபாய்.

11. இறும்பூது - மகிழ்ச்சி.

13. நன்னயம் - நற்குணம் ; புந்தி - அறிவு ; பெருங்கடா - பெரிய எருமைக்கடா.

14. அதிட்டம் - அதிருஷ்டம், நல்வாய்ப்பு.

15. துளைத்திட - தொந்தரை செய்திட ; வல்லவாம் - வலிமை பொருந்தியவையாகிய ; அறிகிலீரோ - அறியமாட்டீரோ.

16. இயம்புக - கூறுக ; ஒன்றிய - பொருந்திய.

17. மன்னிய - நிலை பெற்ற ; உயிர்கடம்முள் - உயிர்கள் + தம்முள் ; அரிதில் - அருமையாக ; துன்னும் - மேம்படும், அதிகமாகும் ; துலங்கிட - சிறக்க ; சீர்மை - கீர்த்தி, புகழ் ; நன்னயம் - சிறப்பு ; நாடும் - விரும்பும்.

18. கடையர் - கடைசி நிலையிலுள்ளோர் ; புல்லர் - அற்பர் ; மெய்த்திறம் - மெய்ஞ்ஞானம் ; விழி - கண் ; கைத்தலம் - கையாகிய இடம் ; நந்தம் - நம் + தம் - நம்முடைய.

19. மாழ்கி - மயங்கி.

20. ஆன்றவர் - மூதாதையர் ; அந்தமில் - அழகில்லாத, முடிவில்லாத ; அறிகிலானை - அறியாதவனை ; கிடாய் - எருமைக்கடா ; அதிசய உத்தி - உயர்த்திப் பேசுதல்.

21. மாண்புறு - பெருமை பொருந்திய ; பூண் பணி - அணிந்துள்ள நகைகள் ; பொன்றிட - இறக்க ; சுமத்தனன்றே - சுமத்தல் + நன்றே ; விளிந்தான் - இறந்தான்.

22. இதயம் - மனம் ; நைந்து - வருந்தி.

23. நெறியினில் - வழியில் ; உய்க்க - செலுத்துக ; மாசில் (மாசு + இல்) - குற்றமற்ற.

3. நளவெண்பா

1. விண்ணவர் கோன் - இந்திரன், தேவர்களின் அரசன் ; ஏவல் தொழிலுக்கு - நாம் ஏவுகின்ற வேலைக்கு ; இசை - உடன்படு ; ஓராது - நினையாமல் ; நேர்ந்தான் - சம்மதித்தான்.

2. தேமாலை - தேன் பொருந்திய மலர்மாலை ; இயல் வீமன் - முயற்சி மிக்க வீமன் ; தோகை - மயில் (இங்கு உவமை ஆகுபெயராய்த் தமயந்தியை உணர்த்தியது.) ; ஆகத்தால் - மனத்தால் ; கோதாக (கோது + ஆக) - சாரமற்ற பொருளாக ; கோ - மன்னன்.

3. வார் - நீண்ட ; வெஞ்சிலை - கொடிய மைநாக மலை ; வச்சிரத்தால் - வச்சிராயுதத்தால் ; மால் - பெரிய ; வரை - மலை ; கார் - கரிய ; பாணாறும் (பாண் + நாறும்) - பாட்டுத் தோன்றும் ; தாரானை - மாலை தரித்த நளனை.

4. விஞ்சை - வித்தை ; இறைவனே - தலைவனாகிய வித்தியாதரனே ; ஊசற்குழை - ஊசலாடும் காதணி ; வெள்ளவாள் - கடல் போன்ற ஒளி மிக்க கண்.

5. இமையவர் - தேவர் ; பொன்னுலகம் - சொர்க்க லோகம் ; புரவலன் - இந்திரன் ; தொடை - மாலை ; தும்பி - தேனீ.

6. இயமரம் - இசைக்கருவிகள் ; ஆர்ப்ப - ஒலிக்க ; இனவளை - இனமாகிய சங்கு ; ஏங்க - ஒலிக்க ; வயம் மரு - வலிமை பொருந்திய ; மைவாள் - வாடுகிறவளான தமயந்தி.

7. போது - தாமரை மலர் ; அரிக்கண் - இரேகையையுடைய கண் ; மாதராள் - தமயந்தி ; தரளம் - முத்து.

8. வாணுதல் (வாள் + நுதல்) - ஒளி பொருந்திய நெற்றி ; முரலும் - ஒலிக்கும் ; வண்டார் (வள் + தார்) - அழகான மாலை.

9. வன்மொழி - கடினச் சொற்கள்.

10. அங்கி - நெருப்பு ; சங்கையற - சந்தேகமில்லாமல் ; ஆகண்டலன் - இந்திரன் ; மற்றோனும் - அக்கினித் தேவனும்.

11. பூசுரர் - பிராமணர் ; பூங்குமுதம் - அழகிய ஆம்பல் ; முகிழ்ப்ப - குவிய ; வாசம் - வாசனை ; கோதையாள் - தமயந்தி ; புலர்ந்தது - விடிந்தது.

12. பூவரைந்த - மலர் சூட்டப்பெற்ற; ஊசல் ஆடுற்றாள் - ஊசலாடுவது போலச் சஞ்சலமடைந்தாள்.

13. பூண் - ஆபரணம்; நாண் - வெட்கம்; போந்து - வந்து.

14. மெய்ம்மரபில் - சத்தியமுள்ள குலத்தில்; சூழ்விதி - சேர்ந்த விதி.

15. காசினி - பூமி; தோய்தலால் - படிதலால்.

16. வெள்கி - வெட்கப்பட்டு; சுளிக்க - சுருங்க; களிகூர - மகிழ்ச்சி மிகுந்திருக்க; பொன் - இலக்குமி போன்ற தமயந்தி.

17. திண்டோள் (திண் + தோள்) - வலி மிக்க புயம்; ஒண்டாரை (ஒள் + தாரை) - ஒளியும் கூர்மையும் உடைய; கோ - வச்சிராயுதம்; குலமாலை - குலத்திற்குப் பூமாலை போன்ற தமயந்தி.

V. பல்சுவைப் பகுதி

1. ஆலயம் - இருப்பிடம்; மடை - நீரணை; விற்பனம் - வன்மை; சுகிர்தம் - இன்பம்; சனது - நற்சான்று, ஓலை.

2. தென்றல் - இளங்காற்று; தமிழ் முனிவன் - அகத்தியன்; அங்கயற்கண் (அம் + கயல் + கண்) - அழகிய கயல்மீன் போன்ற விழி.

3. தேன் அமரும் சோலை - தேன் பொருந்திய பூமரங்கள் அடர்ந்த பூங்கா; தாரம் - மனைவி.

4. பான்மை - வகை; பார் - பூமி.

5. சிந்தை - மனம்; சுவணம் - பொன்; தொங்கல் - மாலை; நீறு - திருநீறு; குண்டம் - ஓமக்குழி; நேயம் - அன்பு; சகலாகமம் - மறையனைத்தும்.

VI. தனிப் பாடல்கள்

1. விண் சுடர் - நட்சத்திரம்; கம்பம் - தூண்; கொந்தி - கொய்து; ஒன்னலர்கள் - பகைவர்கள்; மருவ - கலக்க.

2. உமிழவும் - துப்பவும்; உச்சிட்டம் - எச்சில்; தமர்கள் - உறவினர்கள்.

3. தமிழ்ப்பாவாற்றம் - தமிழ்ப்பாவால் + தம்; மதலையர் - குழந்தைகள்.

4. பொருப்பிலே - (பொதிகை) மலையிலே; தென்னன் - பாண்டியன்; இருப்பிலே - இருக்கையிலே; பேதை - பெண்; மருங்கிலே - பக்கத்திலே.

5. புராதனம் - பழமை; மராமரம் - ஒரு வகை மரம்; தராதலம் - பூமி; தமிழ் மாறன் - பாண்டியன்.

VII. திருக்குறள்

1. பிறவி - வாழ்க்கை, இறைவன் - கடவுள், அடிசேராதார் - அடி பணியாதவர்.

2. கெடுப்பதூஉம் - அதிகம் பெய்து கெடுப்பதும், கெட்டார்க்கு - இல்லாமல் வருந்துபவர்க்கு, சார்வாய்-துணையாய், எடுப்பதூஉம் - காப்பதும்.

3. குன்று - சிறு மலை, வெகுளி - கோபம்.

4. செயற்பாலது - செய்யத் தக்கது, அறன் - தருமம், உயற்பாலது - ஒழிக்க வேண்டுவது, ஒரும் - அசை.

5. வையம் - உலகம், வாழ்வாங்கு - உலகில் வாழவேண்டிய அற நெறியின்படி, வானுறையும் - விண்ணுலகில் இருக்கும்.

7. என்பு - எலும்பு.

8. அகனமர்ந்து - மனம் விரும்பி, செய்யாள் - திருமகள், முகனமர்ந்து - முகமலர்ச்சியோடு, ஓம்புவான் - உபசரிப்பவன்.

9. இனிய - இனிமையான சொற்கள், இன்னாத - கடுமையான சொற்கள், கவர்ந்தற்று - புசிப்பது போல ஆகும்.

10. நன்றி - தருமம், உய்வு - தப்பிப் பிழைக்கும் வழி, செய்ந்நன்றி - ஒருவர் செய்த உதவி.

11. சமன் செய்து - சமமாக, கோல் - துலாக்கோல், ஒருபால் - ஒரு பக்கம், கோடாமை - சாயாமை, சான்றோர் - பெரியோர், அணி - அழகு.

12. தகைத்து - போன்றது.

13. அழுக்காறு - பொறாமை, ஆக்கம் - செல்வம், ஒழுக்கமிலான் - நல்லொழுக்கம் இல்லாதவன்.

14. ஒறுத்தார்க்கு - தீங்கு செய்தவர்களைத் தண்டிப்பவர்க்கு, பொன்றும் துணையும் - (உலகம்) அழியும் வரையில்.

15. அழுக்கறுப்பான் - பொறாமை கொள்பவன்.

16. வெஃகி - விரும்பி, அறனல்ல - தருமத்திற்குப் புறம்பானவற்றை.

17. ஏதிலார் - அயலார், காண்கிற்பின் - உணரவல்லாராயின், மன்னும் உயிர்க்கு - நிலைபெற்ற உயிர் வாழ்க்கைக்கு.

19. வீயாது - அழியாது, அடிஉறைந்தற்று - அடியில் தங்கியிருந்ததைப் போன்றது.

20. ஊருணி - ஊரார் நீருண்ணும் குளம், உலகவாம் - உலகம் அவாவுமாறு, திரு - செல்வம்.

21. ஆற்றுவார் - தவ வலிமையுடையவர், ஆற்றல் - வலிமை.

22. அற்றார் - செல்வமில்லாதவர், அழிபசி - கடும்பசி, பெற்றான் - செல்வமுடையவன், பொருள்வைப்பு - பிற்காலத்தில் உதவும்படி சேமித்து வைத்தல்.

23. வசை - பழி, இசை - புகழ்.

24. பூப்பர் - வளம்பெற்று விளங்குவர், அற்றார் - பயனற்றவர், மற்றுதல் - எப்போதும் சிறந்து விளங்குதல்.

25. வலியார் - வல்லமையுடையவர், மெலியார் - மெலிந்தவர்.

26. வானுயர் - வானத்தைப் போன்ற உயர்ந்த, எவன் - என்ன பயன், குற்றப்படின் - தவறு செய்தால்.

27. அளவல்ல - அளவல்லாதவை, வீவர் - கெடுவர், தேற்றாதவர் - நம்பித் தெளியாதவர்.

28. அன்ன - போன்ற, எய்யாமை - அவன் அறியாமலே, அறம் - நன்மை.

30. இறந்தார் - கோபம் மிகுந்தவர், இறந்தார் அனையர் - இறந்தவருக்குச் சமமானவர், அனை - ஒப்பாவர்.

31. இன்னா - துன்பம்.

32. கூற்று - யமன்.

33. கருதுப - எண்ணுவன, கோடியும் அல்ல பல - கோடிக்குமேல் மிகப்பல.

34. தொட்டனைத்து - தோண்டிய அளவுக்கு.

35. கேடில் - அழிவற்ற, விழுச் செல்வம் - சிறந்த செல்வம், மாடு - செல்வம்.

36. இன்னாது - கொடியது, திரு - செல்வம்.

37. கேளாத்தகையவே - செவிட்டுத்தன்மை உடையனவே, கேள்வி - கேள்வி அறிவால், தோட்கப்படாத - துளைக்கப்படாத.

38. பேதைமை - அறியாமை, அறிவார் - அறிவுடையவர்.

40. வியவற்க - (தன்னைத்தான்) வியந்து மதியாதிருப்பானாக, எஞ்ஞான்றும் - எக்காலத்திலும், நயவற்க - புரிய விரும்பாதிருப்பானாக, நன்றி - நன்மை.

41. ஊதியம் - இலாபம், மதலையாம் சார்பிலார்க்கு - தம்மைத்தாம் தாங்கும் அணை இல்லாதவர்க்கு.

42. ஊங்கு - காட்டிலும், அல்லல் படுப்பது - துன்பப்படுத்துவது.

43. இழுக்கு - குற்றம்.

44. அஃது இறந்து - அதையும் தாண்டி, ஊக்கின் - மேலும் ஏற முயன்றால், இறுதி - முடிவு.

45. எய்தற்கரியது - கிடைத்தற்கு அரிய காலம், இயைந்தக்கால் - வாய்க்குமானால், அந்நிலையே - அப்போதே.

46. தேறற்க - நம்பாதே, தேராது - ஆராயாமல், தேறுக - சந்தேகப்படாமல் நம்பு.

47. வினை - காரியத்தின் தன்மை, எய்த - பொருந்த.

48. சுற்றப்பட - சூழப்பட.

49. உள்ளியது - எண்ணியது, மற்றுந்தான் உள்ளப்பெறின் - விடாமல் எண்ணினால்.

50. விழையான் - விரும்பாதவன், விழைவான் - விரும்புகிறவன், கேளிர் - சுற்றத்தார், துடைத்து - நீக்கி, ஊன்றும் - தாக்குகின்ற.

52. உறவரினும் - மிக வந்தாலும்.

53. கடை - கீழானவர், அவை - சபை.

54. திறனறிந்து - திறமையறிந்து.

55 தானடங்கா - தான் அவற்றின் நெறியில் ஒழுகாத.

56. குன்றுவர் - தாழ்வடைவர், குன்றுவ - தாழ்வுக்குக் காரணமான செயல்களை, குன்றி - குன்றிமணி, அனைய - அவ்வளவாக.

57. அணியுமாம் - பாராட்டுவான்.

58. சால்பு - பெருமை, பயத்தது - பயனுடையது.

60. கிழவன் - கிலம் உடையவன், செல்லான் - சென்று பார்க்காமல், புலந்து - வெறுத்து, ஊடிவிடும் - பிணங்கிவிடும்.

அகராதி

அ - ஆ

அகழ்தல் – தோண்டுதல்
அங்கை – உள்ளங்கை
அச்சுறுத்தி – பயமுறுத்தி
அடவி – காடு
அண்டம் – உலகம்
அணி – ஆபரணம்
அணுக்கம் – சமீபம்
அத்தன் – கடவுள் அல்லது உயர்ந்தோன்
அதிபன் – தலைவன்
அமர் – போர்
அமையாது – பொருந்தாது
அரங்கு – மேடை
அரங்கேற்றம் – ஒருவர் தாம் செய்த நூலைச் சபையிலுள்ள பெரியோர்களுக்குப் படித்துக் காட்டி அதனை வெளியிட அவரது சான்று வாங்கல்
அரண் – காவல்
அரன் – சிவன்
அரிதின் – அருமையாக
அரிய – அருமையான
அரியணை – சிம்மாசனம்
அருவி – மலையிலிருந்து விழும் ஆறு
அவலம் – துன்பம்
அவை – சபை
அறம் – தருமம்
ஆசான் – குரு, உபாத்தியாயன்
ஆய்வு – தேர்வு

இ - ஈ

இசைந்திலேன் – சம்மதித்திலேன்
இடர் – துன்பம்
இதழ் – பூவிதழ்
இந்திரவிழா – மழையின் பொருட்டு இந்திரனை வழிபடும் திருநாள்
இரப்பவர், இரவலர் – யாசிப்பவர்
இருக்கை – ஆசனம்
இலச்சினை – முத்திரை
இழித்து – பழித்து
ஈட்டு – திரட்டு
ஈர்க்க - கவர

உ - ஊ

உரம் – வலிமை
உலையா – அழியாத
உறை – வாசஞ்செய்
உறைவிடம் – வசிக்குமிடம்
ஊக்கினர் – உற்சாகமூட்டினர்
ஊர்ந்து – நகர்ந்து
ஊழி - விதி

எ - ஐ - ஒ

எஞ்ஞான்றும் – எப்பொழுதும்
எட்டுணை – எள்ளளவு
எடுத்துக்காட்டு – மேற்கோள் அல்லது உதாரணம்
எய்து – அடை
எய்துவர் – அடைவர்
எரியுண்ண – தீப்பற்ற
எழில் – அழகு
ஐயந்திரிபற – சந்தேகமும் மயக்கமும் நீங்க
ஐயாட்டைப் பருவம் – ஐந்தாம் வயது
ஒப்புனை – அலங்கரிப்பு
ஒளி – பிரகாசம்
ஒன்பான் சுவை – ஒன்பது சுவை

க - கா

கட்புலன் – கண் பார்வை
கதிரவன் – சூரியன்
கமலவாவி – தாமரைக் குளம்
கரி – யானை, நெருப்புக் கரி
கருவூலம் – பொக்கிஷம்
கல்வி – வித்தை
கலித்தெழுந்து – ஒலியிட்டு எழுந்து
கழல் – வீரத்தண்டை
களிறு – ஆண் யானை

காதல் — அன்பு
கால் வாங்குதல் — அடியெடுத்தல், போதல்
காவியம் — காப்பியம், சிறந்த கதா நாயகனைப்பற்றிக் கூறும் பெரிய நூல்
கானம் — வனம், இசைப் பாட்டு

கி - கு

கிழார் — உரியோர், தோட்டம்
குரவர் - ஆசிரியர்
குருதி — இரத்தம்
குழாம் — கூட்டம்
குழுமினர் — கூடினர்
குறவர் — ஒரு சாதியார்
குறள் — இரண்டடிகளால் யாக்கப் பட்ட வெண்பா, குட்டை
குறுநிலம் — சிறு நிலப்பரப்பு

கூ - கோ

கூலவாணிகன் — தினை, சாமை முதலிய தானியம் விற்போன்
கூற்று — எமன்
கோட்பாடு — கொள்கை
கோடாமை — நேர்மை
கோநகர் — தலை நகரம்
கோப்பெருந்தேவி — (அரசனின்) பட்டத்தரசி
கோவை — ஒரு வகைத் தமிழ் நூல், வரிசை
கோள் — புறங்கூறல்

ச - சா

சமயம் — தருணம், மதம்
சமயோசிதம் — சந்தர்ப்பத்திற்குத் தக்கவாறு
சராசரங்கள் — நடையுள்ளனவும் இல்லாதனவுமாகிய பிரபஞ்சம்
சாடிய — மோதிய
சாதனங்கள் — வசதிகள்
சாதுரியம் — சாமர்த்தியம்
சாயை — பிரதி பிம்பம்
சாரத்தியம் — தேரோட்டும் வித்தை
சாரற்காலம் — மாரி காலம்
சான்று — மேற்கோள்

சி - சு

சிக்கல் — குழப்பம்
சிணுங்க — மூக்காலே அழ
சிறார் — சிறுவர்
சுதன் — மகன், இராச குமாரன்

சூ - செ - சோ

சூடு கொள் — வெப்பம் அடை
செயலாற்றுதல் — தொழில் புரிதல்
செருக்கு — அகங்காரம்
செவ்விதின் — செம்மையாக
செவிலித்தாய் — வளர்ப்புத் தாய்
செவிவழிச் செய்தி — காதோடு வழிவழியாக (கர்ண பரம்பரையாகக்) கேட்ட விஷயம்
செறிவு — நெருக்கம்
சென்னி — தலை, சோழன்
சோழி — பலகறை

த - தா

தக்கார் — தகுதி உடையோர்
தட்பம் — குளிர்ச்சி
தண்டு — சந்நியாசித்தடி
ததும்ப — வழிய
தயக்கம் — தேங்குதல், பின் தங்கல்
தரன் — தரம்; மேல் கீழ் என்னும் பிரிவு
தருக்கி — கர்வங்கொண்டு
தழைத்தோங்கி — ஓங்கி வளர்ந்து
தாரை — விண்மீன், கால்வாய்
தானைத் தலைவர் — சேனாபதி

தி - தீ

திங்கள் — சந்திரன், மாதம்
திரு — இலக்குமி, செல்வம்
திருடி — கள்ளி, கவர்ந்து
திரை — திரைச்சீலை
திவலைகள் — துளிகள்
திளைத்தல் — தோய்தல்
திறல் — வலி, போர்

தீக்கொளுவி – நெருப்புக் கொளுத்தி

து - தொ

துப்புரவு – பரிசுத்தம், மேன்மை
துறக்கம் – சுவர்க்கம்
துறவு – இல்லறத் துறக்கம்
துறை – நீர்த்துறை
தொகுத்து – ஒன்ருகச் சேர்த்து

ந - நா

நங்கை – பெண்
நடாத்து – வழி நடத்து, செய்
நல்லியல்பு – நற்குணம்
நலிவு – மெலிவு, அழிவு
நறுமணம் – நல்ல வாசனை
நாவாய் – மரக்கலம்

நி - நு

நிகழ்ச்சி – சம்பவம்
நிரந்தரம் – எப்பொழுதும்
நிலக்கிழார் – நில உரிமையாளர்
நிறுவ – ஸ்தாபிக்க, அமைக்க
நுண்கலை – வேலைத்திறமுள்ள, நுட்பமான கல்வி
நுண்ணிது – சிறியது

நெ - நை

நெஞ்சையள்ளும் – மனத்தைக் கவரும்
நெடுந்தேர் – பெரிய தேர்
நைய – வருந்த, நசுங்கும்படி

ப - பா

பக்கலில் – அருகில்
பகழி – அம்பு
பட்டினம் – கடற்கரை நகரம்
பணி – தொழில்
பதிலிறுத்தான் – விடையளித்தான்
பயக்கத்தக்க – அளிக்கக்கூடிய
பரி – குதிரை
பரிசில் – வெகுமதி
பல்லியங்களார்ப்ப–பல வாத்தியங்கள் ஒலிக்க
பாகன் – யானை, குதிரை முதலியன நடத்துவோன்
பாணர் – பாடிப் பிழைக்கும் ஒருவகை இனத்தார்

பி - பீ

பிணக்கு – கோபம்
பிரசங்கம் – விரித்துப் பொருள் சொல்லுதல்
பிரஞ்ஞை – உணர்ச்சி
பிறழ்வு – தவறுதல், ஒழுங்கின்மை
பீடித்தது – வருத்தியது

பு - பெ

புரவலர் – காப்பாளர், அரசர்
புனைந்தது – அலங்கரிக்கப்பட்டது
பெரும்பிரிவெய்தினர் - இறந்தார்
பெருமிதம் – களிப்பு

பே - பொ - போ

பேரவை – மகாசபை
பேருவகை – மிக்க களிப்பு
பொருது – போரிட்டு
பொற்குவியல் – தங்கக் குவியல்
பொறிகள் – விசைகள், இயந்திரங்கள்
போந்து – பனை மரம், வந்து

ம - மா

மக்கள் – ஜனங்கள்
மணம் – கலியாணம்
மத்தயானை – மதம்பிடித்த யானை
மதி நுட்பம் – அறிவுக் கூர்மை
மரபு – வமிசம்
மலை மகளார் – பார்வதியார்
மறை – வேதம்
மன்றம் – சபை
மனையறம் – இல்லறம்

மி - மு

மிளிர்தல் – விளங்குதல்
முகமன் – உபசாரம்

முகுந்தன் — மகாவிஷ்ணு
முதுபெரும்புலவர் — வயது மிக்க புலவர்
முரண் — வேறுபாடு, மாறுபாடு
முழை — குகை
முற்றம் — மேல் தளம், வாசல்

மூ - மே

மூங்கை — ஊமை
மூதறிஞர் — பேரறிஞர்
மேகலை — பெண்கள் இடையில் அணியும் ஒரு வகை ஆபரணம்

வ - வா

வசை — இகழ்ச்சிச் சொல்
வண்ணம் — நிறம், அழகு
வருணனை — சிறப்பித்தல், விவரித்தல்
வருவாய் — வருமானம்
வலவன் — சமர்த்தன், தேர்ப் பாகன்
வழுத்து — போற்று
வழுதி — பாண்டியன்
வனப்பு — அழகு
வாய்ப்பு — தருணம்
வான் புகழ் — உயர்ந்த புகழ்

வி - வீ

விண்ணுலகம் — மேலுலகம்
விதூஷகன் — இராச சபையில் உள்ள கோமாளி
விரகறிந்தார் — உபாயம் அறிந்தார்
விரவி — கலந்து
விழைந்து — விரும்பி
விறலியர் — பாண் மகளிர்
வீடு — இல்லம், மோக்ஷம்

வெ - வே

வெகுண்டு — கோபித்து
வெகுளி — சினம்
வெப்பம் — உஷ்ணம்
வெள்ளிடை மலை — வெளிப்படை
வேளாண் குலம் — வேளாளச் சாதி

CONNEMARA PUBLIC LIBRARY
31 MAY 1956
MADRAS